
உ

சிவமயம்

பொன்னூர் சிவத்தல வரலாறு




சித்தாந்த இரத்தினம்
தி.க. சாமிநாதன்
பொன்னூர்.

உ

சிவமயம்

பொன்னூர்
சிவத்தல வரலாறு



சித்தாந்த இரத்தினம், கல்விப்புரவலர்

தி. க. சாமிநாதன்.

தலைமை ஆசிரியர் – ஓய்வு,

பொன்னூர் & அஞ்சல், வழி – வந்தவாசி. 604 408.

திருவண்ணாமலை மாவட்டம்.

நூல் விவரம்

நூலின் பெயர்	:	**பொன்னூர் சிவத்தல வரலாறு**
நூலின் ஆசிரியர்	:	தி. க. சாமிநாதன்
முகவரி	:	2/434, சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர் -604 408.
பதிப்பு ஆண்டு	:	2002.
வெளியீடு	:	2002
படிகள்	:	1000
பக்கங்கள்	:	33 + 139 = 172
கணினி பதிப்பு	:	டெக்னோ சிஸ்டம்ஸ், காஞ்சிபுரம் சாலை, வந்தவாசி.
அச்சிட்டோர்	:	இம்பீரியல் கிராபிக் நெ.37, கேட்டுத் தெரு, சென்னை - 1. ✆ : 5263149
நூலின் பொருள்	:	சிவத்தல வரலாறு, பெருமாள் தல வரலாறு, ஆன்மீகக் குறிப்புகள், வழிபாட்டுப் பாடல்கள்.
விலை	:	உரூபாய் 20/-

காணிக்கை

எல்லாம் வல்ல
அருட்பெருஞ்சோதி ஆண்டவருக்கு
இந்நூலினை காணிக்கை ஆக்குகின்றேன்.

82/2

உ

சிவமயம்

பொருளடக்கம்

உ
சிவமயம்

முன்னுரை

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில் நல்ல கதிக்கு யாதும்ஓர் குறைவிலை"

என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு. இவ்வுலகில் எவ்விதக் குறைவுமின்றி நல்ல முறையில் வாழ இறை வழிபாடு அவசியமாகின்றது.

வழிபாடு என்றால் இறைவனின் அருள் வழியில் நிற்றல் என்பதாகும். நமக்கு அருள்புரியும் இறைவனின் கருணைத் திறத்தை நினைந்து அவனுக்கு நன்றி உணர்வைக் காட்டுவதும், அவனுடைய அருள் வழியில் வாழ்தலும் உண்மையான வழிபாடாகும்.

வழிபாட்டு முறைகள் பல. அவற்றுள் திருக்கோயில் வழிபாடு எல்லோரும் கைக்கொள்ள வேண்டிய சிறந்த வழிபாடாகும். திருக்கோயில் வழிபாட்டினால் இறையருளைப் பெறுவதோடு மன அமைதியும், ஆன்ம வளர்ச்சியும் உண்டாகிறது. ஆன்ம வளர்ச்சி அடைவதனால் பிறவியிலிருந்து நீங்கி சிவகதி பெறலாம்.

இவ்வுலகில் வாழ்பவர்களுக்கு தினமும் எண்ணற்ற கவலைகள் வந்து போகின்றன. அவற்றுள் சில நிலையாக இருந்து நம்மை வாட்டுகின்றன. நாம் அனுபவிக்கும் நன்மை தீமைகள் யாவும் முற்பிறவிகளில் நாம் செய்த வினைகளின் காரணமாக அமைகின்றன. நம் வினைகளைப் போக்கி, மனக் கவலை இன்றி வாழ இறை வழிபாட்டைத்தவிர வேறு வழியில்லை.

"தனக்குவமை இல்லாதான் தாள்சேர்ந்தார்க் கல்லால்
மனக்கவலை மாற்றல் அரிது" – *குறள் :7*

தனக்கு நிகரில்லாத இறைவனுடைய இணை அடிகளைச் சார்ந்து சிந்தித்து இருப்போரைத் தவிர மற்றையவர்க்குத் தீய வினைகளால் உண்டாகும் மனக்கவலை மாற்றல் என்பது அரிது (முடியாத செயலாகும்).

மக்கள் சென்று இறையருளைப் பெறுவதற்-காகத்தான் அக்கால மன்னர்களும், நல்லுள்ளம் கொண்ட பெருந்தகையாளர்களும் திருக்கோயில்களை அமைத்துள்ளனர்.

பல நூறு ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்ட திருக்கோயில்கள் இன்றும் மக்களின் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. ஆனால் அவற்றைக் கட்டியவர்கள் வாழ்ந்த இடம் எங்குள்ளது என்றே நமக்குத் தெரியவில்லை. என்றுமுள்ள இறைவனுக்கு அழியாத கற்கோயில்களை அமைத்து இறை வழிபாட்டின் அவசியத்தை உணர்த்தி வருங்கால மக்களும் பயனடைய வேண்டும் என்னும் பெருநோக்கோடு கோயில்களை அவர்கள் அமைத்தனர்.

தாங்கள் எளியவர்களாகவே வாழ்ந்து மறைந்துள்ளனர். இதிலிருந்து அவர்கள் தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்தமையும், அவர்களின் கருணை உள்ளமும் நன்கு புலனாகின்றது. அவர்கள் கட்டிவிட்டுச் சென்ற கோயில்களைத் திருப்பணி செய்து புழுது படாமல் பாதுகாக்க வேண்டியது இக்கால மக்களின் கடமை அல்லவா?

அவ்வகையில் அமைக்கப்பட்டதே சமய குரவர் நால்வரில் ஒருவரான சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல் பெற்ற பொன்னூர் சிவத்தலமாகும். அத்திருக்கோயில் பலகாலமாக பழுது பார்க்கப்படாத காரணத்தால் இன்று சிதிலமடைந்த நிலையில் காட்சி தருகின்றது.

இச்சிறு நூலினை எழுதுவதன் நோக்கம் இளைய தலைமுறையினருக்கு அக்கோயில் எங்கிருக்கின்றது என்பது தெரிய வேண்டும்; கோயிலின் பழைமை, வரலாறு, புகழ், சிறப்பு, கல்வெட்டுச் செய்திகள் யாவும் தெரிய வேண்டும்; தெரிந்த பின் மக்கள் கோயில் வழிபாட்டுக்குச் செல்ல வேண்டும் என்பதாகும்.

அவ்வாறு வழிபாட்டுக்குச் செல்லும் போது கோயிலின் நிலை அவர்கள் கண்ணில் படுவதால், இதை சீரமைத்தால் நலமாக இருக்குமே என்னும் உந்துதல் ஏற்படும். கலைச் செல்வங்களைக் காப்பாற்ற வேண்டும் என்னும் நல்லுணர்வால்; நல்லுள்ளங்கொண்ட செல்வர்கள், தனியார் நிறுவனங்கள், ஆன்மிகம் வளர்க்கும் ஆதீனங்கள் (திருமடங்கள்), அரசாங்கம் முதலானவர்களை அணுகி கோயில் சீரமைப்புக்கு வழி செய்வார்கள் என்னும் பெருநம்பிக்கையுடன்தான் **'பொன்னூர் சிவத்தல வரலாறு'** என்னும் இந்நூல் எழுதப்படுகின்றது.

அதே வளாகத்தில் அமைந்திருக்கும் பெருமாள் கோயிலும் பழுதுபட்டு திருப்பணி செய்ய வேண்டிய நிலையில்தான் உள்ளது. இரண்டையுமே பழுது பார்க்க ஆவன செய்ய வேண்டியது இவ்வூர் மக்களின் தலையாய கடமையாகும்.

இறைவன் திருவருளால் இவ்வூர் மக்கள் முயற்சி எடுப்பார்கள், எடுக்க வேண்டும், என்பது தான் முக்கிய கோரிக்கையாகும்.

இந்நூலினுள் பொன்னூர் சிவத்தல வரலாறு, பெருமாள் கோயில் பற்றிய விளக்கம், ஆன்மிகக் குறிப்புகள், வழிபாட்டுப் பாடல்கள் ஆகியவை தரப்பட்டுள்ளன. இறையன்பர்கள் நூலினைப் படித்துப் பயன் பெறுவதுடன், பிறரையும் பயனடையச் செய்து கோயில்களின் திருப்பணி நடைபெற ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

எல்லோரும் எல்லா வளமும் நலமும் பெற்று இனிது இன்புற்று வாழ்ந்து, இனிப் பிறவா நிலை எய்தி பேரின்பப் பெருவாழ்வு பெற எல்லாம் வல்ல பரம் பொருளை வேண்டிப் பணிகின்றேன்.

பொன்னூர் — அன்பன்,
19-8-2002 — **தி. க. சாமிநாதன்.**

தாயும் நீயே! தந்தை நீயே சங்கரனே அடியேன்
ஆயும் நின்பால் அன்பு செய்வான் ஆதரிக்கின்றது உள்ளம்
ஆயம் ஆய காயம் தன்னுள் ஐவர் நின்று ஒன்றல் ஒட்டார்
மாயமே என்று அஞ்சுகின்றேன் வலிவலம் மேயவனே
— திருஞானசம்பந்தர்.

வைத்த பொருள் நமக்கு ஆகும் என்று சொல்லி மனத்து அடைத்துச்
சித்தம் ஒருக்கிச் 'சிவாயநம' என்று இருக்கின் அல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வார் அவர் பாதிரிப் புலியூர்
அத்தன் அருள் பெறலாமோ, அறிவிலாப் பேதை நெஞ்சே"
— திருநாவுக்கரசர்.

உ
சிவமயம்

அணிந்துரை

கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம் என்பது பழமொழி. பழமொழிகள் தோன்றுவதற்குப் பலப்பல நூறு ஆண்டுகளுக்கு முன்பே கோயில்கள் தோன்றியிருக்க வேண்டும். அதுவும் பல தலங்களில் இறைவன் சுயம்புவாக – தான் தோன்றியாகத் தோன்றியிருக்க வேண்டும். ஒரு தலத்தில் இறைவனுக்குத் 'தான்தோன்றியப்பன்' என்றே பெயர். இறைவன் தன்னைக் காட்டாக்கால், காண்பார் யாரே?

கோயில் என்பது வழிபடுவதற்குரிய இடம் மட்டும் அன்று, வாழும் நெறியைக் கற்றுக் கொள்வதற்கும் உரிய இடம். உடல் அமைப்பும் கோயில் அமைப்பும் ஏறக் குறைய ஒன்றே, இறைவன் கொடுத்த அரிய கருவியாகிய உடம்பைப் புரிந்து கொள்வதற்கும், பயன்படுத்துவதற்கும் உரிய வழிவகைகளைச் சொல்வதும் கோயில்களே. இது மட்டுமன்று, சமுதாயப் பணிக் களங்களாகவும் கோயில்கள் சோழப் பேரரசுக் காலத்தில் திகழ்ந்தன. மூலத்தானத்தில் இருந்து கொண்டு மூல பண்டாரம் வழங்குகின்றான் இறைவன்.

ஆனால் சைவச் செந்நெறியை விளக்கும் கோயில்களைப் பாதுகாத்தலும், பயன்படுத்திக் கொள்ளலும் ஆகிய முறைகளை இடைக் காலத்தில் வாழ்ந்த நம் முன்னோர் அடுத்தடுத்த தலைமுறைகளுக்குச் சொல்லிக் கொடுக்காத நிலைமையும் நேர்ந்தது. விளைவு, இன்று தமிழகத்தில் பல ஊர்களில் கோயில்கள் சிதைந்துள்ளன. சில இடங்களில் சின்னாபின்னமாகி உள்ளன.

இன்று அந்தந்த ஊர்களில் வாழும் அன்பர்கள் சிலர் சைவம் பயின்றும், இறையருளால் உணர்த்தப் பெற்றும் கோயில் பணிகளில், கோயில் திருக்குடமுழுக்குத்

திருப்பணிகளில் ஆர்வம் கொள்வதிலும், அரும்பணிகளில் ஈடுபடுவதிலும் முனைகின்றனர்.

வந்தவாசிக்கு அருகில் உள்ள பொன்னூர் என்னும் சிற்றூரில் அருள்தரு சாந்தநாயகி உடனுறை திருக்காமீசுவரராக இறைவன் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலும் இன்று பழுதடைந்து காணப்படுகிறது. அறுபது ஆண்டுகளுக்கு முன் திருக்குடமுழுக்கு நடந்திருக்க வேண்டும் எனத் தெரிகிறது. இவ்வூரில் வாழும் திரு.தி.க.சாமிநாதன், தலைமையாசிரியராம் நல்லாசிரியராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்றுள்ளவர், மூன்றாண்டுகள் சைவ சித்தாந்தம் பயின்று *'சித்தாந்த இரத்தினம்'* பட்டம் பெற்றவர். 'சைவ சித்தாந்த வழித்துணை விளக்கம்', 'சிவமே முருகன்' முதலிய நூல்களை எழுதி வெளியிட்டுள்ளவர். தாம் வாழும் ஊரில் திருக்கோயில் திருப்பணி செய்திட வேண்டும் என்னும் விழைவுடையவர். தம்மாலான முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

திரு.தி.க.சாமிநாதன் அவர்கள் பொன்னூர் அருள்மிகு திருக்காமீசுவரர் திருக்கோயில் தல வரலாறு என்னும் நூலினை மிக உழைத்து உருவாக்கியுள்ளார். கல்வெட்டுச் சான்றுகளுடன் கோயில் வரலாறு, கோயில் அமைப்பு, வழிபடு முறைகள், வழிபாட்டில் பயன்படுத்தப்படும் பொருள்களைப் பற்றிய விளக்கம், சித்தாந்தக் கருத்துகள், உரையுடன் கூடிய திருமுறைப் பதிகத் தொகுப்பு, திருக்குடமுழுக்குச் செய்திட வேண்டிய அவசியம் எனப் படிப்போர்க்குப் பயன்தரும் செய்திகள் ஏராளம் இந்நூலில் உள்ளன. படித்துப் பயன் பெறுங்கள். நூலாசிரியர்க்கு என் உளங்கனிந்த பாராட்டு.

"மேன்மை கொள் சைவநீதி
விளங்குக உலகம் எல்லாம்"

அன்பன்
மு.செல்வநாதன்
பேராசிரியர்
திருவாவடுதுறை ஆதின சைவ சித்தாந்த நேர்முகப் பயிற்சி மையம், வந்தவாசி.

சோளிங்கர்
14-08-2002

உ
சிவமயம்

பாராட்டுரை

ந. செல்லபெருமாள், பி.ஏ., பி.எல்.,
வழக்கறிஞர் & நோட்டரி
குறிஞ்சி நகர்,
குரோம்பேட்டை,
சென்னை-44.

பொன்னூர் சிவத்தல வரலாறு என்னும் நூலுக்கு பாராட்டுரை வழங்கும் பேறு எனக்கு கிடைத்தமைக்கு மட்டிலா மகிழ்ச்சியுற்றேன்.

பொன்னூரைப் பிறப்பிடமாகக் கொண்டவன், என்பதும், இந்நூல் ஆசிரியரான சிவநெறிச்செல்வர் சித்தாந்த இரத்தினம் உயர்திரு. தி.க.சாமிநாதன் அவர்களின் அன்பு அன்னையார் எங்கள் வீட்டில் பிறந்த மாதரசி என்பதும், இந்நூலாசிரியரின் அன்புத் துணைவியார் எங்கள் குலத்தில் தோன்றியவர் என்பதும்தான் எனது தகுதிகளேதவிர நூலின் நலம் ஆய்ந்து பாராட்டும் தமிழறிவு எனக்கில்லை. என்றாலும் என்னுடைய குறை மதிக்கே நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களும், நூலாசிரியரின் பொதுமை உணர்வும், இறை நெறியும், அவரின் சிறந்த மொழி நடையும் மிகச்சிறப்பாக தோன்றுகிறது எனில் தமிழாய்ந்தோர் அறிவினுக்கு ஒரு வரலாற்றுப் பெட்டகமாகவும், பைந்தமிழின் மொழி இன்பமும் சிறப்புற தோன்றக்கூடும் என்பதில் சிறிதளவு ஐயமும் எனக்கில்லை.

பல்கலைக்கழக படிக்கட்டுகளில் அமர்ந்து பைந்தமிழ் பயிலும் வாய்ப்பினை நூலாசிரியர் பெற்றிடவில்லை என்றாலும், சைவமும், தமிழும் தன் இரு கண்களாகப் போற்றிடும் பண்புள்ள குடும்பத்தில் தோன்றியதாலும், நூலாசிரியர் பிறந்த மண்ணின் மணமும், அவர் வாழிடமாக ஏற்றுக்கொண்ட மண்ணின் மாண்பும்

பல்கலைக்கழகத்தில் பெறும் தமிழறிவைவிட பல மடங்கு அதிகம் பெற்றிடக் காரணமாக அமைந்துள்ளது.

பூமியின் வரைபடத்தில் எங்கோ ஒரு மூலையில் உள்ள சிற்றூராம் பொன்னூர் என்னும் அழகிய நல்லூருக்கு இத்தகு சிறப்புக்கள் உள்ளதா என வியக்கும் வண்ணம் பக்தி இலக்கியம் மற்றும் வரலாற்றுச் சுரங்கங்களை அகழ்ந்து எடுத்து மதிப்பிலா மாணிக்கங்களை புத்தக வடிவில் வெளி உலகிற்கு கொண்டு வர அவர் எடுத்துக் கொண்ட முயற்சி, காலம் மற்றும் பொருட்செலவினை எண்ணும்போது இது வெறும் மனித முயற்சியன்று; திருவருளின் ஆணை என்றே தோன்றுகிறது.

ஊரின் பெயர்க் காரணத்தை நாவரசர் தேவாரத்தினின்றும், சம்பந்தர் தேவாரத்தினின்றும் எடுத்துக் காட்டு கூறி விளங்கவைத்த மாட்சிமையை எண்ணி, வியக்காமல் இருக்க முடியாது.

பொன்னூரின் இயற்கை வளம், தொழில்வளம், திருக்கோயில் அமைந்துள்ள இடத்தின் தன்மை திருக்கோயிலை எழுப்பிய மன்னர்களின் குறிப்பு, பொன்னூரில் எழுந்தருளியுள்ள சிவபெருமானை வழிபட்டு நலம் பெற்ற முனிவர்கள் வரலாறு, ஆரூரரின் திருப்பாட்டில் பொன்னூர் பெற்ற சிறப்பிடம் ஆகியவற்றை நூலாசிரியர் நுணுகி ஆய்ந்து வெளிக்கொணர்ந்துள்ளார். திருக்கோயிலில் அமைந்துள்ள கல்வெட்டினை ஆய்ந்து, அவை வழங்கிடும் வரலாற்றுச் செய்திகளைக் காத்திட வாரீர் என ஆசிரியர் விடுக்கும் அன்பு அழைப்பு மக்களைத் தட்டி எழுப்புவனவாக அமைந்துள்ளது நெஞ்சினிக்கும் செய்தியாகும்.

“அக்கால மன்னர்களும், பொதுமக்களும் கட்டிக்காத்த கலைச்செல்வமான இக்கோயில்களை அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையிலும், வருங்கால சந்ததியினருக்குப் பழைமையாக இருந்த நன்னிலையில் விட்டுச் செல்ல வேண்டியதும் இக்கால மக்களின் பொறுப்பல்லவா?” என்ற வினாவினை எழுப்பி

நம்மையெல்லாம் இறைபணி செய்திட அழைப்பு விடுக்கும் ஆசிரியரின் பாங்கினை பாராட்டிட தென்தமிழில் சொற்கள் இல்லை. மேலும் 'நல்ல குடிமக்க்ளாக வாழச்செய்யவே மாமன்னர்களும் மற்றோரும் கற்கோயில்களை எழுப்பிச் சென்றனர்' என்ற வரிகள் நூலாசிரியரின் உலகப் பொது வேட்கையைப் பறைசாற்றுகிறது.

நிறைவாக என் உள்ளம் கவர்ந்த கருத்தினை உங்கள் அனைவரோடும் பகிர்ந்து கொள்ள என் மனம் விழைகிறது. 'திருக்கோயில் வழிபாட்டின்போதும் தத்தம் குறைகளை, தேவைகளை மட்டும் கூறி வேண்டி ஆண்டவனை வழிபடாமல், உலகெங்கும் உள்ள மக்களின் மற்றும் எல்லா உயிர்களின் பொது நலத்துக்காகவும், பசியும், பிணியும் இன்றி அமைதியும், அன்பும் நிலைக்கவும், மழை அளவாகப் பெய்து எங்கும் வளம் சிறக்கவும் வழிபட வேண்டும்' என்ற நூலாசிரியரின் பொது நலம் பேணும் சிந்தனை ஆன்மிகத்தில் பொது உடைமைத் தத்துவம் கலக்க வேண்டும் என்ற சீரிய சிந்தனை உலகப் பேரறிஞர்கள் சிந்தனையில் தோன்றிடாக் கருத்தாகும்.

இத்தகு பல சிறப்பியல்புகளையும் உள்ளடக்கி நூலாசிரியர் திருவருள் துணையோடு **'பொன்னூர் சிவத்தல வரலாறு'** என்னும் சீர்மிகு நூலை பெரிதும் முயன்று படைத்துள்ளார். அவரின் சிந்தனை வளர்க! வாழ்க! மக்கள் நலம் பெறுக! என பேரருளை வணங்குகின்றேன்.

பொன்னூர் அன்புள்ள,

16-08-2002 **ந.செல்லபெருமாள்.**

உ
சிவமயம்

நன்றியுரை

உலகில் வாழும் உயிரினங்களில் மனிதன் மட்டுமே பேசும் திறனும், சிந்திக்கும் ஆற்றலும், பகுத்துணரும் ஆறாவது அறிவும் உடையவனாக விளங்குகின்றான். இந்த மூன்று வகையான ஆற்றலும் மனிதனுக்கு இறைவனால் வழங்கப் பெற்றவையாகும்.

உயர் திணைப் பிறப்பினைப் பெற்ற மனிதன் காலத்தை வீணாக்காமல் இறைவனை வணங்க வேண்டும்.

"வாழ்த்த வாயும் நினைக்க மடநெஞ்சும்
தாழ்த்த சென்னியும் தந்த தலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையேன் நெடுங் காலமே"

என்ற திருநாவுக்கரசு சுவாமிகளின் கருத்துப்படி வாயால் வாழ்த்தி, மனத்தால் நினைந்து, தலையால் வணங்கி (மனம், மொழி, மெய் மூன்றினாலும்) வழிபடும் தெய்வ நிலையங்களே திருக்கோயில்களாகும். அங்கு சென்று வழிபடுவது நம்முடைய கடமையும், இறைவனுக்கு நாம் செய்யும் நன்றியுமாகும்.

"எற்றான் மறக்கேன் எழுமைக்கும் எம்பெருமானையே
உற்றாய் என்றுஉன்னையே உள்குகின்றேன் உணர்ந்து உள்ளத்தால்"

"அத்தன் எந்தை பிரான் எம்பிரானை
ஆரூரானை மறக்கலு மாமே".

– சுந்தரர் .

நமக்குத் தந்தையாகவும், தலைவனாகவும் உள்ள இறைவனை நாம் எப்போதும் மறத்தல். கூடாது.

"பேசாத நாள் எல்லாம் பிறவா நாளே"

– அப்பர் சுவாமிகள்

இறைவன் புகழைப் போற்றாத நாள் எல்லாம் பயனற்ற வீண் நாட்களாகும்.

ஆணவ இருளில் கிடந்த நமக்கு பிறவியையும்; உடல், கருவிகள்,உலகு, உண்பொருள்களையும் கொடுத்து, நம் தவறுகளை எல்லாம் பொறுத்துத் திருத்தி, முன்னேற பல பிறவிகளையும் கொடுத்து, இறுதியாக நாம் அடைந்துள்ள இம் மனிதப் பிறவியில் நமக்குப் பக்குவ நிலை வாய்க்கப் பெற்றால் முத்தி நிலையையும் அருள இருக்கின்றான்.

அத்தகைய கருணையாளனாகிய அவன் செய்த, செய்யும், செய்ய இருக்கும் உதவிகளை நாம் மறவாது அவனுக்கு நன்றி செலுத்த வேண்டும். நன்றி என்பது தூய நெறி நின்று, அவனை மறவாதிருந்து வழிபடுதலே ஆகும்.

"பொன்னால் பிரயோசனம் பொன் படைத்தார்க்கு உண்டு
பொன்படைத்தோன்
தன்னால் பிரயோசனம் பொன்னுக்குஅங்கு ஏதுண்டு".

– பட்டினத்தார்.

இறைவனால் நமக்குப் பயனே தவிர நம்மால் அவனுக்கு ஆவது ஒன்றும் இல்லை. எனவே நாம் அனைவரும் என்றும் இறைவனிடம் நன்றி உடையவர்களாக இருத்தல் வேண்டும்.

இந்நூலினை உருவாக்க எனக்குத் தோன்றாத் துணையாக இருந்து உள்நின்று உணர்த்திய சிவபெருமானை முதற்கண் மனம், மொழி, மெய்களால் போற்றி வணங்குகின்றேன்.

பொன்னூர் சிவத்தலம் பற்றி சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரப் பாடல் இருப்பதை முன்பே படித்திருக்கின்றேன். ஆனால் கோயிலில் கல்வெட்டுக்கள் இருப்பது தெரியாது.

தருமபுரம் ஆதீனத்திலிருந்து 10-04-1995 அன்று இங்கு வந்து இத்தல இறைவனை வழிபாடு செய்துவிட்டுச் சென்ற குழுவினர் அளித்த பொன்னூர் தலத்தைப் பற்றிய குறிப்புப் புத்தகத்தில் இருந்த செய்தியில் கல்வெட்டுக்கள் இருப்பது தெரிய வந்தது. அதன் பின் கோயிலுக்குச் சென்று பார்த்ததில் பல இடங்களிலும் கல்வெட்டுக்கள் இருப்பது தெரிந்தது.

அச்சிறு நூலில் பொன்னூர் சிவத்தலம் பற்றி எழுதி வெளியிடவும், குழுவினர் இங்கு வந்து வழிபாடு செய்யவும் அருளாணை தந்த தருமை ஆதீனம் 26 வது குருமகா சந்நிதானம் அவர்களின் பொற்பாத கமலங்களுக்கு என் சிரம் தாழ்ந்த வணக்கத்தையும், நன்றியினையும் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

'சிவமஞ்சரி' நூல் வரிசையை வெளியிட்டு சைவ சமயத்தைப் பரப்பி வரும் சிவநேயச் செல்வர் திருபூசை.ச.அருணவசந்தன் அவர்கள், சிவமஞ்சரி 26 வது மலர் வரிசை நூலில் பொன்னூர் சிவத்தலம் பிரமன் வழிபட்ட தலங்களுள் ஒன்றாகும் எனவும், அத்தல இறைவனுக்குப் 'பிரமபுரீசுவரர்' எனப் பெயர் உள்ளது என்றும் ஒரு செய்தியை வெளியிட்டிருந்தார்.

இவ்விரு வெளியீடுகளைப் பார்த்த பின் இவ்வூர் சிவத்தலத்தைப் பற்றியும், பெருமாள் தலத்தைப் பற்றியும் மற்றவர்களும் அறிந்து கொள்ள நூல் வெளியிட வேண்டும் என்னும் எண்ணம் உருவாயிற்று.

திருவாளர் அருணவசந்தன் அவர்கள் இங்கு நேரில் வந்தபோது அவர் கூறிய தகவலுக்குப் பின் கல்வெட்டுக்களின் நகல் பெறப்பட்டது. சிவமஞ்சரி நூலாசிரியர் அவர்களுக்கு என்னுடைய அன்பு கலந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

திருக்கோயில்களின் கல்வெட்டு நகல்களை அளித்து உதவிய தமிழ் நாடு கல்வெட்டுத் துறையினருக்கும், கல்வெட்டுகள் கிடைக்கத் துணைபுரிந்த திரு.பழனிவேல் (தொல்பொருள் ஆய்வுத் துறை சென்னை) அவர்களுக்கும்,

திரு. சா. பாரி (பணி ஆய்வாளர், சிட்கோ அம்பத்தூர் தொழிற்பேட்டை) அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நூலுக்கு அணிந்துரை வழங்கியருளிய சைவசித்தாந்த பயிற்சி மையப் பேராசிரியர் சித்தாந்த இரத்தினம் சோளிங்கர் திரு.மு.செல்வநாதன் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றி.

இந்நூலினைப் பல ஆண்டுகளுக்கு முன்பே என்னை எழுதத் தூண்டியவரும், நூலுக்குப் பாராட்டுரை வழங்கிச் சிறப்பித்தவருமான சென்னை உயர்நீதி மன்ற வழக்கறிஞர் குரோம்பேட்டை, குறிஞ்சிநகர், திரு.ந.செல்லபெருமாள் பி.ஏ.பி.எல்., அவர்களுக்கு என் உளங்கனிந்த நன்றி.

கோயில்கள் கட்டிய மன்னர்கள், மற்றும் காலம் பற்றிய தகவல்களை சிற்பங்களின் அமைப்பு, கட்டிட அமைதி முதலியவற்றை நேரில் வந்து பார்த்தும், நூல்களை ஆராய்ந்தும் பல ஆலோசனைகள் வழங்கிய, சென்னை சி.பி.ஆர். சுற்றுச் சூழல் கல்வி மையத்தில் பணிபுரியும் பொன்னூர் திரு. இராமச்சந்திரன் அவர்களின் மகன் திரு.செல்லபாண்டியன், மற்றும் செந்துரை வட்டம் நக்கம்பாடி திரு.முருகேச படையாச்சி மகன் திரு.அமிர்தலிங்கம் ஆகியவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றி.

உடன் இருந்து ஒத்துழைப்புத் தந்த பொன்னூர் ஊராட்சி மன்றத் தலைவர் திரு.அ.நமச்சிவாயம் அவர்களுக்கு என் இதய நன்றி.

கோயில்களின் தோற்றத்தைப் படங்களாக வரைந்துதவிய பொன்னூர் உயர்நிலைப் பள்ளி ஓவிய ஆசிரியர் திரு. க.பூங்காவனம் அவர்களுக்கும், கோயில்களின் அமைவிடம் மற்றும் சிலைகளின் அமைவிடங்கள் பற்றிய வரைபடங்கள் வரைந்துதவிய பொன்னூர் திரு.ப.திருஞானம் ஏ.எம்.ஐ.இ. அவர்களுக்கும், உடன் இருந்து உதவிய பொன்னூர் தொடக்கப்பள்ளி ஆசிரியர் திரு.சா.தணிகைஅரசு அவர்களுக்கும் நன்றி.

கல்வெட்டுக்களின் நகல்களை மொழியாக்கம் செய்து தந்த அம்மையப்பட்டு திரு. ஏ. பி. வெங்கடேசன், எம்.ஏ., பி.எட்., அவர்களுக்கும், மருதாடு உயர்நிலைப் பள்ளி தமிழாசிரியர் சித்தாந்த இரத்தினம் திரு. சா. கபிலன் அவர்களுக்கும் என் அன்பு நன்றி.

திசை இலிங்கங்கள் பற்றிய தகவல்களைத் தெரிவித்த பெரன்னூர் மளிகை வியாபாரம் திரு.மூ.கு.நடராசன் அவர்களுக்கும், மற்றும் அவற்றைத் தேடிக் காணத் துணை புரிந்த திரு. சத்தி. க. இராமு அவர்களுக்கும் என் அன்பு நன்றி.

வேண்டிய தகவல்களைக் கூறி உதவி புரிந்த திருக்கோயில்களின் அர்ச்சகர் பொன்னூர் அ.பாலசுப்பிரமணிய குருக்கள் அவர்களுக்கும் நன்றி.

பிழை நீக்கித் திருத்தம் செய்தளித்த சித்தாந்த இரத்தினங்கள் திரு.வ.குமரவேலு (தலைமை ஆசிரியர் ஓய்வு, வந்தவாசி), ஆரியாத்தூர் நடுநிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர் திரு.அ.வே.முனுசாமி அவர்களுக்கும் என் உளம் கனிந்த நன்றி.

கையெழுத்துத் தாள்களை நகல் எடுத்துக் கொடுத்து உதவிய ப.தேவேந்திரன், இராம.மணிவண்ணன் ஆகியவர்களுக்கு என்னுடைய அன்பான நல்வாழ்த்துக்கள்.

திருக்கோயில்களில் உள்ள திருமேனிகளின் புகைப்படங்களை எடுத்துதவிய புகைப்படக் கலைஞர் பொன்னூர் திரு.இரா.செல்வம் அவர்களுக்கு என் இதய நன்றி.

உடன் இருந்து உதவி புரிந்த **'கேதாரச்செல்வர்'** திரு. கா. மு. சண்முகம் ஆசிரியர்-ஓய்வு, திரு.கு. து. பட்டுசாமி கவுண்டர், திரு. ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை ஆகியவர்களுக்கு என் கனிவான நன்றி.

முகப்பு அட்டைப் படத்தினை வரைந்துதவிய பொன்னூர் சுப்பிரமணியர் கோயில் தெரு, ஓவியர் கெ. ம. இரமேஷ் அவர்களுக்கு என் அன்பு நன்றி.

கணினி பதிப்பு செய்து வழங்கிய வந்தவாசி டெக்னோ சிஸ்டம்ஸ் உரிமையாளர் திரு. ஓம் முருகன் அவர்களுக்கு நன்றி. நூலினை அழகுற அச்சிட்டுதவிய இம்பீரியல் கிராபிக் உரிமையாளர் திரு. M. அருளானந்தம் அவர்களுக்கு என் இதயங்கனிந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்நூல் வெளிவர நிதி உதவி புரிந்த அனைத்து சிவபுண்ணியச் செல்வர்களுக்கும், பல வகையிலும் எனக்கு வேண்டிய உதவிகளை உடன் இருந்து செய்தும், ஆலோசனை வழங்கியும் உதவி புரிந்த அத்துணை அன்பர்களுக்கும் என் உளமார்ந்த நன்றியினைப் படைக்கின்றேன்.

இவ்வூர் திருக்கோயில்களுக்குச் சென்று வழிபடும் அன்பர்களுக்கும், இனிமேல் சென்று வழிபட உள்ள நல்லுள்ளங்களுக்கும், கோயில்களின் திருப்பணி நடைபெற மனம், மொழி, மெய்களால் ஆவன செய்ய உள்ள அத்துணை இறையன்பர்களுக்கும், அருளாளர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

நூலில் உள்ள குறை நீக்கி, குணம் கொள்ள அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றேன்.

"எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க"


பொன்னூர் அன்பன்,
19-8-2002 **தி. க. சாமிநாதன்.**



சிவத்தல பக்கத்தோற்றம்




பெருமாள் கோயில் பின் புறத்தோற்றம்



திருக்கோயில்களின் அமைவிட வரைபடம்


பராசுரேசுவரர் திருக்கோயில்

வடக்கு



1. பராசுரேசுவரர் (மூலவர்)
2. நந்தி
3. பலிபீடம்
4. சண்டேசுவரர்
5. ஆறுமுக சுவாமி
6. விநாயகர்
7. பிரம்மா
8. விஷ்ணு துர்கை
9. சூரியன்
10. பைரவர்
11. சாமுண்டி அம்மன்
12. மாணிக்கவாசகர்
13. திருநாவுக்கரசர்
14. புத்தி விநாயகர்
15. மண்டபம்
16. சாந்தநாயகி அம்மன்
17. அதிகார நந்தி மண்டபம்
18. பலிபீடம்

பராசுரேசுவரர் திருக்கோயில்



அழகப் பெருமாள் திருக்கோயில்



அதிகார நந்தி மண்டபம்



புத்தி விநாயகர்



ஆறுமுக சுவாமி




பிரம்மா (நான்முகர்)



விஷ்ணு துர்கை



தல விநாயகர்

		
சூரியன்	பைரவர்	சாமுண்டி அம்மன்



மாணிக்கவாசகர்



திருநாவுக்கரசர்



சுவற்றிலுள்ள விநாயகர் சிற்பம்




சண்டேசுவரர்



திருமால் சிலை




கற்பலகையிலுள்ள விநாயகர் சிற்பம்

		
விநாயகர்	விஷ்வக் சேனர்	யோக நரசிம்மர்



கருடாழ்வார்



ஆஞ்சநேயர்

உ
சிவமயம்

பொன்னூர் சிவத்தல வரலாறு

ஊரின் அமைவிடம்

"…..தெண்ணீர் வயல் தொண்டை
நன்னாடு சான்றோர் உடைத்து"

– ஔவையார்.

"தீய என்பன கனவிலும் நினைவிலாச் சிந்தை
தூய மாந்தர்வாழ் தொண்டை நாடு"

"தூய மாதவம் செய்தது தொண்டை நன்னாடு"

"தொன்மை மேன்மையில் திகழ்பெருந் தொண்டை நன்னாடு"

"சொல் விளங்குசீர்த் தொண்டை நன்னாடு"

– சேக்கிழார்.

என ஔவைப் பிராட்டியாராலும், சேக்கிழார் சுவாமிகளாலும் சிறப்பித்துப் போற்றப்பட்ட தொண்டை நாட்டின் ஒரு பகுதியாக இருந்தது **'பொன்னூர்'** என வழங்கும் இவ்வூர்.

இஃது அந்நாட்டின் தலைநகரமாக விளங்கிய **"கல்வியைக் கரை இலாத காஞ்சிமா நகர் தன்னுள்ளால்"** என திருநாவுக்கரசு சுவாமிகளாலும், **"ஈறு சேர் பொழுதினும் இறுதி இன்றியே மாறிலாது இருந்திடும் வளம்கொள் காஞ்சி"** என கச்சியப்ப சிவாசாரியராலும் புகழ்ப்பட்டுள்ள காஞ்சியம்பதிக்குத் தென் திசையில் 50 கி.மீ தூரத்தில் உள்ளது.

"உன்னினர் தங்கட் கெல்லாம் ஒல்லையின் முத்தி நல்கி" என கந்த புராணத்தால் பாராட்டப்பட்ட (ஒருமை மனத்துடன்) நினைக்க முத்தியருளும் அண்ணாமலைத் தலத்தைத் தன் இருப்பிடமாகக் கொண்ட நகரான திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம்,

வந்தவாசி நகரிலிருந்து தென் மேற்கே 10 கி.மீ தூரத்தில் பொன்னூர் அமைந்துள்ளது.

வந்தவாசியிலிருந்து திண்டிவனம் செல்லும் சாலையில் இளங்காடு கூட்டுச் சாலை வழியாகவும், வந்தவாசியிலிருந்து சேத்துப்பட்டு செல்லும் சாலையில் வங்காரம் கூட்டுச் சாலை வழியாகவும், தேசூரிலிருந்து கீழ்புத்தூர் வழியாகவும் இவ்வூரை அடையலாம். இவ்வூருக்கு மூன்று சாலைகளின் வழியாகவும் பேருந்து வசதி உள்ளது.

ஊரின் பெயர்க் காரணம்

'பொன்னன்' என்பது பிரமனின் பல்வேறு பெயர்களுள் ஒன்று. பிரமன் இத்தலத்து சிவபெருமானை வழிபட்டிருக்கிறார். பிரமனின் திருமேனி பொன்வண்ணத்துடன் மஞ்சளாக ஒளி வீசுவதால் அவருக்கு பொன்னன் என்று பெயராயிற்று. பொன்னன் வழிபாடு செய்த ஊராகையால் அவர் பெயர்களுள் ஒன்றாகிய 'பொன்னன் ஊர்' என்பது 'பொன்னூர்' என மருவி வந்திருக்காலம் எனக் கருத இடம் உள்ளது.

ஊரின் வேறு பெயர்கள்

பிரமபுரம், சொர்ணபுரி, சுவர்ணபுரி என்றும் பெயர் வழங்கியுள்ளது. (சொர்ணம், சுவர்ணம் - பொன் என்னும் பொருள் கொண்ட சொற்களாகும்.) 'அழகிய சோழ நல்லூர்' எனவும் வழங்கியதாகக் கல்வெட்டில் உள்ளது.

பொன் என்னும் சொல்லின் பொருள்

அழகு, அரி, அருச்சுனம், அருத்தம், அனந்தம், ஆக்கம், ஆசை, ஆடகம், ஆபரணம், இரும்பு, இலக்குமி, இரணியம், ஈகை, ஈழம், உடல், உரை, உலோகம், உலோகக்கட்டி, ஏகாகரம், ஏமம், ஒளி, ஒரு நாணயம், கணையம், கல்யாணம், கற்பூரம், கனகம், கனம், காணம்,

காங்கேயம், காஞ்சனம், காரம், கூழ், கைத்து, சந்திரம் சாதரூபம், சாமி, சாமம், சாமீகரம், சாம்பூநதம், சுவணம், சூரியன், செங்கோல், செல்வம், செந்தாது, செம்பொன், சொன்னம், தங்கம், தசம்பு, தமனியம், தனம், திரவியம், தேசிகம், தேசி, தொடுக்கம், நிசி, நிதானம், நிதி, பண்டம், பசலை, பஞ்சலோகப் பொது, பறி, பிங்கலம், பீதகம், பீதம், பூரி, பொருள், பொலிவு, பொலம், மாங்கல்யம், மாசை, மாடு, மாடை, மாழை, வசு, வித்தம், வியாழம், வெறுக்கை, வேங்கை, பொன் நாணயம், பொன் மலை, மேருமலை ஆகியன பொன் என்னும் சொல்லின் பொருளாகும்.

சங்க நிதி - சங்கு உருவாய்க் கிடைக்கும் பொன். பதுமநிதி-தாமரை உருவாய்க் கிடைக்கும் பொன்.

ஐம்பொன்

பொன் வகைகள் நான்கு, அவையாவன சாதரூபம், கிளிஞ்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்பனவாகும். இவை நான்கும் பொன்னின் சாதி.

ஐம்பொன் - ஐந்து வகை முக்கிய உலோகங்கள். பொன், வெள்ளி, ஈயம், செம்பு, இரும்பு ஆகியவை. இவ்வைந்தும் கோயில்களில் உள்ள உலாமூர்த்திகளான செப்புத் திருமேனிகள் (சிலைகள்) செய்யப்பயன் படுபவைகளாகும்.

முப்பொன்

செம்பொன், வெண்பொன், கரும்பொன் (பொன், வெள்ளி, இரும்பு).

சிவபெருமானும் பொன்னும்

பொன்னனையாய் என விளித்து சிவபெருமானின் சடைமுடி, சூடும் மலர்,புயம், திருமேனி, உடை, திருவடி, மந்திரம் இவற்றையும், உமையம்மையையும்,

திருவருளையும், வாழும் மலையையும் சிறப்பித்துக் கூற பொன் என்ற உலோகப் பெயரை அருளாளர்கள் தங்கள் பாடல்கள் பலவற்றுள் எடுத்தாண்டு பொன் போல் போற்றியுள்ளனர்.

சடைமுடி :

"பொன்னிசையும் புரிசடையெம் புனிதன்"

–திருநாவுக்கரசர்.

சூடும் மலர் :

"பொன்றொத்த கொன்றையும் பிள்ளை மதியும் புனலும்"

–திருநாவுக்கரசர்.

புயம் :

"பொன்னார் புயத்துப் போர் விடையார்"

– வள்ளலார்.

திருமேனி :

"பொன்னார் மேனியனே"

–சுந்தரர்

"பொன்னே திகழும் திருமேனி எந்தாய்"

–மாணிக்கவாசகர்

"பொன் திகழும் மேனிப் புரிசடையம் புண்ணியன்"

–பொய்கையாழ்வார்

"பொன் செய் நின் வடிவைப் புணர்ந்திட நினைத்தேன்"

– அருட்பா.

உடை :

"பொன்னைக் கடந்திலங்கும் புலித்தோலினன்"

–திருமந்திரம்.

திருவடி :

"பொன்னார் திருவடிக்கு ஒன்றுண்டு விண்ணப்பம்"

– திருநாவுக்கரசர்.

மந்திரம் :

"பொன்னான மந்திரம்" (திருவைந்தெழுத்து)

– திருமந்திரம்

உமையம்மை :

"பொற்கொடி யாளுடைப் பூசனை செய்திட"

– திருமந்திரம்.

திருவருள் :

"பொன்னும், மெய்ப்பொருளும் தருவானை"

–சுந்தரர்

வாழும் மலை :

"பொன்னியல் பொருப்பரையன்"

– திருஞானசம்பந்தர்.

"பொன்மலைக் கடவுள்"

– அருட்பா.

பொன்னின் சிறப்பு :

அருளாளர்கள் பல பாடல்களில் பொன்னைப் பெருநிதியாகவும், பைம்பொன், மாற்றறியாப் பொன், ஆணிப் பொன், செழும் பொன், அருட்பொன், செம் பொன், பொன் வண்ணம், பொன்னுடல், பொற்பாதம், பொன்னிலக்கம், பொன்கண்ணன், பொன்னெயிற்கோன், பொற்பதம், பொன்னருள், பொன்னாகத்தார், பெரும்பொன், வண்ணப்பொன் எனவும் சிறப்பித்துள்ளனர்.

பொன்நிறச் செந்நெல், பொற்றாலி, பொற்கலன், பொற்கிழி, பொற்பாளம், பொன்னாம்பழம், பொன்னரிமாலை, பொன்னாங்கண்ணி, பொன்னாசி, பொற்றோரை, பொன்நாண், பொன்ஞெகிழி, பொன்மெழுகு, பொற்படி, பொற்றாளம், பொற்கசை, பொன் அணி, பொற்சின்னம், பொற்பார், பொற் சுண்ணம், பொற்சரடு, பொன்நாண், பொற்றாமரை,

பொற்சரிகை, பொன்னாரம், பொன்மாரி, பொற்குவடு, பொன்தாது, பொன் இதழி, பொற்பலகை, பொற்பீடம், பொன்னடி எனப் பல பொருள்களின் பெயர்கள் குறிப்பிடப்படுகிறது.

பொற்குன்று, பொற்சபை, பொன்னகர், செம்பொன்னம்பலம், பொன்னாடு, பொற்கோயில், பொன்மண்டபம், பொன்னருவி, பொன்மலை, பொன்னிலங்கை, பொன்னுலகம், பொன்னம்பர், போன்ற பல இடங்களின் பெயர்கள் வழக்கில் உள்ளது.

சிறந்த காலத்தைக் குறிப்பிடும் போது பொற்காலம் எனவும், ஐம்பதாண்டு நிறைவைக் குறிக்கும் விழாவினை பொன் விழா எனவும், ஆண்டுத் தொடக்கத்தில் மழை பெய்து முதலில் நிலத்தை உழுவதை பொன்னேர் ஓட்டுதல்(கட்டுதல்) என்றும், ஆன்றோர்களையும் ஆன்மீகத் தலைவர்களையும் சிறப்பிக்க பொன்னால் செய்யப்பட்ட நாணயங்களைக் கொண்டு அபிடேகம் செய்வதனை **'கனகாபிடேகம்'** செய்தல் எனவும் பொற்பித்தல், பொற்பூச்சு, பொற்புறுத்தல் எனப் பல செயல்களின் பெயர்களையும் குறிப்பிட்டுள்ளனர்.

திருக்கோயில்களில் உள்ள திருமேனிகளுக்கு விசேட காலங்களில் பொற்காசுகளைக்கொண்டும், பொன் நகைகளைக் கொண்டும் செய்யப்படும் அபிடேகத்திற்கு **'சொர்ணாபிடேகம்'** எனப்பெயர் வழங்குகின்றது.

சூரியன் எழும்போதும், விழும்போதும் தோன்றும் பொன்னிறக் கதிர்களால் இமயமலை (பனிமலை) பொன் நிறமாகக் காட்சியளிப்பதனைக் கொண்டு அம்மலைக்குப் பொன்மலை என்றே பெயர் வழங்கப்படுவதாலும்; பொருள்கள் மஞ்சள் நிறமாக இருப்பதனை பொன்னிறம் எனவும், சூரியன் தோன்றும்போதும், மறையும் முன்பும் காணும் ஒளியினை பொன்னொளி(பொன்மை) என்று நிறத்தைக் குறிப்பிடவும், இவ்வாறு பல வகையிலும், சிறப்பாகக் காணும் பலவற்றை ஏற்றியும் போற்றியும்

பொன்னை முன்வைத்துப் புகழ்ந்து சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

ஆன்றோர்களின் கருத்துகளை எடுத்தாளும் போது பொன் மொழி எனவும், பொருள்களைப் பாதுகாத்தலை வலியுறுத்த பொன்போல் காக்க வேண்டும் என்றும், பொருள்களின் விலையை அதிகமாக வைத்து விற்பதனை பொன்விலையாக உள்ளது என்றும், பெண்களை சிறப்பிக்க பொற்கொடியார்கள், பொன்மகள், பொற்றொடி மகளிர், பொன்னி என்றும் பொன்னை வைத்து சிறப்பித்துக் கூறியுள்ளனர்.

பொன்னான பழ(பொன்) மொழிகள் :

1. *"போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து"*
2. *"பொன் வைக்கும் இடத்தில் பூ வைத்தல்"*
3. *"பொன் கொடுத்து பெண் எடுத்தல்"*
4. *"பொற்குடத்திற்கு பொட்டிட்டுப் பார்க்க வேண்டியதில்லை"*
5. *"பொன் தேடி மண் புதையார்"*
6. *"சொன்ன முடையோர் பகை கொள்ளற்க"*

– இவை அனுபவ மொழிகள்.

7. *"பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியார்"*

– நாலடியார் : 162.

8. *"பொன் மலர் நாற்றம் உடைத்து"*

– நீதிநெறி விளக்கம் : 5.

9. *"பொன்னையன்றிப் பூண் இல்லை, பூணையன்றிப் பொன் இல்லை"*

– வள்ளலார் சாத்திரம் – 'பதி, பசு, பாச விளக்கம் : 9.

10. *"பொன் குலாவு மணிக்கலன்"*

– சிவஞான சித்தியார் – பரபக்கம் : 58.

11. *"சுடச் சுடரும் பொன் போல ஒளிவிடும்"*

– திருக்குறள் : 267.

12. *"பொற் கொழுக் கொண்டு வரகுக்கு உழுவது என்?"*

– திரு உந்தியார் : 38.

13. "பொன்னிறம் கட்டியினும் பூணினும் நின்றாற் போல்"

– திருக்களிற்றுப்படியார் : 79.

14. "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்"

15. "பொன்னொளிர் பாரத நாடு"

– பாரதியார்.

16. "பொன் மலையைச் சேர்ந்தசிறு புன்காக்கைப் புள்ளினங்கள்
தன்னிறமும் பொன்னிறமாய்ச் சாருமால்"

– வள்ளலார் சாத்திரம் – சிவஞானப் பிரகாச வெண்பா : 98.

17. "பொன் பெறும் கற்றான் பொருள் பெறு நற்கவி"

– சிறுபஞ்சமூலம் : 56.

18. "சுடினும் செம்பொன் தன்னொளி கெடாது"

– நறுந்தொகை : 24.

19. "பொன்னின் குடம் உடைந்தால் பொன்னாகும்"

– மூதுரை : 18.

20. "பொற் பிளவோடு ஒப்பாரும் போல்வரே"

– மூதுரை : 23.

21. "பொன் மாரி பொழிகின்ற புயலே"

– திருப்போரூர் சந்நிதி முறை : 395.

22. "விரிபசும்பொன் ஒண் கலத்தில் உண்டோ ஒலி"

– நீதி வெண்பா : 35.

23. "பொன் போல் பொறுமையுளார்"

– திருவருட்பா : 2018.

24. "பொன் வண்ணம் பூணினும் கண்டமையால்"

– வள்ளலார் சாத்திரம் – சிவாகமக் கச்சி மாலை : 20.

25. "பொன் எங்கே பிறந்தாலும் எள்ளார்"

– நீதிவெண்பா : 1.

26. "பொன்னாகப் போற்றிக் கொளல் வேண்டும்"

– நாலடியார் : 225.

27. "மாசறச் சுட்டறிப பொன்னின் நலம் காண்பார்"

– நான்மணிக்கடிகை : 5.

28. "பொன்னை அரித்தெடுக்கும் பொன்னரிப்பன் போல் ஆசான்"

– வள்ளலார் சாத்திரம் – ஞான விளக்கம் : 72.

29. "*தன்னுடம்பு, தாரம், அடைக்கலம், பொருள் இவை நான்கும் பொன்னினைப் போல் போற்றிக் காத்துய்க்க*"

– *ஆசாரக்கோவை : 65.*

30. "*தங்கமானது தழலில் நின்றுருகி மருகினும் தன்னொளி மழுங்கிடாது*"

– *குமரேச சதகம் : 7.*

31. "*தங்க மக மேருவை அடுத்திடும் காக்கையும் சாயல் பொன் மயமே தரும்*"

– *குமரேச சதகம் : 20.*

32. "*பொன்னே அனைய அருள் தந்தாய் பொற்பார் திருத்தாள் தொழத்தந்தாய்*"

– *திருப்போரூர் சந்நிதி முறை : 700.*

33. "*கற்றான் பொன் பெறுவான்*" – *அனுபவ மொழி*

34. "*மாசறு பொன்னே*"

– *சிலம்பு*

35. "*யானை இருந்தாலும் ஆயிரம் பொன் இறந்தாலும் ஆயிரம் பொன்*"

36. "*மின்னுவது எல்லாம் பொன்னல்ல*" – *அனுபவ மொழி.*

எனப் பல பழமொழிகள் பொன்னை முன் வைத்து சிறப்பிக்கத் தோன்றியுள்ளன.

சேரமான்பெருமாள் நாயனார் இயற்றிய நூல்களுள் ஒன்றினுக்குப் 'பொன் வண்ணத்தந்தாதி' என்றும், திருவிளையாடல் புராண நூலின் படலங்களுள் ஒன்றினுக்கு 'தருமிக்கு பொற்கிழி அளித்த படலம்' என்றும், திருவாசக நூலின் பதிகங்கள் இரண்டினுக்கு 'பொற் சுண்ணம்', 'பொன்னூசல்' என்றும் தலைப்புகள் பொன்னை முன்வைத்து இடப்பட்டுள்ளன.

பொன்னின் உயர்வு :

பொன் ஒரு மதிப்பு மிக்க உலோகமாகும். சில இடங்களில் மட்டும் மண்ணுடன் கலந்து தங்கத் துகள்களாகப் பூமியில் இருப்பதை வெட்டி எடுத்துப்

பிரிக்கின்றனர். அரிதாகக் கிடைக்கிறது. பிரித்தெடுக்க உழைப்பும் செலவும் அதிகம் தேவைப்படுகின்றது. கிடைப்பது மிகவும் குறைவு. உபயோகிப்பாளரின் தேவை அதிகம். எனவே அதன் மதிப்பு அதிகமாகிறது. தங்கத்துடன் சிறிதளவு *(10:1)* செப்பு உலோகத்தைச் சேர்த்தால் பொன்னாகிறது.

பொன்னை மெல்லிய கம்பியாக நீட்டலாம்; தகடாக அடிக்கலாம், எளிதில் துளையிடலாம்; உருக்கிப் பற்ற வைத்து விரும்பும் எவ்வித அணிவகைகளையும் எளிதாகச் செய்யலாம். எவ்வளவு காலம் நிலத்தில் புதைந்திருந்தாலும் அதன் தன்மை குன்றாது. தேவைக்கு வாங்கலாம், விற்கலாம், அடகு வைத்துப் பொருள் பெறலாம். பொன்னை வைத்திருப்பவர்களை மக்கள் மதித்துப் போற்றுகின்றனர்.

"ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்குவார்" என்று பெரிய புராணம் கூறும் ஞானியரைத் தவிர மற்றவர்கள் அனைவரும் பொன்னை விரும்பிப் போற்றிப் பாதுகாக்கின்றனர். உலகியலில் கூறப்படும் மூன்று வித ஆசைகளில் பொன்னாசை ஒன்றாகும். உலகினர் பொன்னை நினைந்து வெகுவாகத் தேடுவர். பொன்னுக்கு வீங்கி (புட்டாலம்மை) என்னும் தாடை வீங்கும் ஒரு நோய் கூட பொன்னுக்கு ஆசைப்படுகின்றதாம்.

பொன் அதிகம் கிடைக்கும் அல்லது வைத்திருக்கும் நாடுகளைப் பிற நாடுகள் மதிக்கின்றன, போற்றுகின்றன. பொன்னைக் கொடுத்து எப்பொருளையும் வாங்க முடியும் உலகு உள்ளளவும் பொன்னின் மதிப்பு கூடுமே அன்றிக் குறைவு படாது. பொன்னை உலகினர் என்றும் போற்றுவர்.

அக்கால ஆட்சியாளர்கள் காலத்தில் நாணயங்கள் பொன்னால் செய்யப்பட்டு புழக்கத்தில் இருந்துள்ளது. அவற்றைச் சிலர் தங்களின் எதிர் காலத் தேவை கருதியும், பாதுகாப்புக்காகவும் பாத்திரத்திலிட்டு பூமியில் புதைத்து வைத்தனர். வைத்தவர்களால் எடுக்கப் படாதவை தற்போது நிலத்தைத் தோண்டும்போது கிடைப்பதையே **'புதையல்'** என்கின்றனர்.

இப்படிப்பட்ட பல காரணங்களால் பொன் உலோகம் மிகவும் மதிப்பு வாய்ந்ததாக உள்ளது என்பது புலனாகின்றது.

இவ்வாறு பலவகை சான்றுகளிலிருந்தும் பொன்னின் உயர்வும், சிறப்பும், மதிப்பும், குணமும், மேன்மையும், மங்கலமும், பயனும், புகழும், அழகும், பெருமையும், நலமும் நமக்கு நன்கு விளங்குகின்றது.

பொன்னூர் :

பலரும் ஏற்றிப் போற்றும் மேலான சிறப்புத் தன்மைகள் பலவற்றைக் கொண்ட உலோகமான பொன்னின் பெயரைக் கொண்டு இவ்வூர் விளங்குகின்றது. இது மிகவும் சிறப்புடையதாக உள்ளது. பொன்+ஊர்=பொன்னூர். **பொன்னூர்** என்னும் சொல்லுக்கு செல்வ வளம் மிகுந்த, மங்கலம் பொருந்திய, அழகு நிறைந்த, சிறந்த ஊர் எனப் பொருள் கொள்ளலாம்.

உலோகப் பெயர் கொண்ட ஊர்கள்

பொன்(பொன்னூர்), வெள்ளி (கீழ்வெள்ளியூர்), ஈயம்(பாதிரி), செம்பு(செம்பூர், செம்பேடு), இரும்பு (இரும்பேடு), ஆகிய உலோகப் பெயர் கொண்ட ஊர்கள் இவ்வூரிலிருந்து 20 கி.மீ. சுற்றளவில் அமைந்துள்ளது பெரு வியப்பைத் தருகின்றது. இவை ஐம்பொன் பெயர் கொண்ட ஊர்களாகும்.

பொன்னை உருக்க உதவும் பொருள்

விலை மதிப்புள்ள உலோகமான ‘பொன்’ என்னும் பெயர் கொண்ட இவ்வூருக்கு அருகில் பொன்னை உருக்கவும், பற்றவைத்து இணைக்கவும் உதவும் ‘வங்காரம்’ என்னும் பொருளின் பெயர் கொண்ட ‘வங்காரம்’ என்னும் ஊர் (இவ்வூருக்கு) வடக்கே 2 கி.மீ. தூரத்தில் அமைந்துள்ளது குறிப்பிடத் தக்கதாக உள்ளது.

இயற்கை வளம்

ஊரின் மேற்கில் 336 ஏக்கர் பரப்பளவு கொண்ட பெரிய ஏரி ஒன்றும், கிழக்கிலும், தெற்கிலும் இரு சிறிய ஏரிகளும் உள்ளன. போதிய மழைபெய்து நீர் நிரம்பினால் ஆண்டு முழுதும் நீர்ப்பாசனம் தடையின்றி நடைபெறும். அதனால் நில வளம் கொண்ட இவ்வூர் ஆண்டு முழுதும் பசுமையாகக் காட்சியளிக்கும்.

பெரிய ஏரிக்கு மேற்கில் 1676 ஏக்கர் பரப்பளவு உள்ள பெரிய காடு ஒன்று உள்ளது.காடு எக்காலத்தும் பசுமையான தோற்றமளிக்கும்

பல வகையான மரம் செடி கொடிகளும், மருத்துவத்துக்குப் பயன்படும் பலவகை மூலிகைகளும் இருக்கின்றன. காட்டின் பராமரிப்பை அரசின் காட்டு இலாகா செயல்படுத்துகின்றது. காட்டினை ஒட்டி ஊருக்கு வடமேற்கு திசையில் மலை ஒன்று உள்ளது. ஏரி, காடு, மலை இம்மூன்றும் இவ்வூருக்கு அழகும் பெருமையும் சேர்க்கின்றன.

பொன்னூர் மலை :

இங்கிருந்து 3 கி.மீ. தொலைவிலும் வந்தவாசி சேத்துப்பட்டு சாலையின் அருகிலும் மலை அமைந்துள்ளது. இவ்வூர் எல்லையில் அமைந்திருக்கும் அம்மலைக்கு கனககிரி, நீலகிரி பர்வதம் எனப் பெயர் வழங்குகின்றது. கனகம்-பொன், மலையும் பொன்மலை என்னும் பெயருடன் வழங்குவது சிறப்பாக உள்ளது.

சமணப் பெரியார் 'ஆசாரியர் குந்த குந்தர்' தங்கித் தவம் செய்ததன் நினைவாக அவருடைய திருப்பாதங்கள் மலை உச்சியில் (அமைக்கப்பட்டு) உள்ளது.

தொழில் வளம் :

அதிக மக்கள், அவசியத் தேவையான உணவைத் தரும் உழவுத் தொழில் செய்கின்றனர். உழவுத் தொழிலுக்கு அடுத்து இரண்டாவது முக்கியத் தேவையான உடைதரும் நெசவுத் தொழில் நடைபெறுகின்றது. பருத்தி, பட்டு நெசவுத் தொழிலில் பலர் ஈடுபட்டுள்ளனர். மற்றும் பல வகையான தொழில்கள் நடைபெறுகின்றன.

பிற வசதிகள் :

குடிநீர் வசதி, மின்சாரம்,அஞ்சல், தொலைபேசி, கூட்டுறவு சங்கங்கள், கூட்டுறவுக் கடைகள், காவல் நிலையம், நூலகம், மருத்துவ மனை, போக்குவரத்து ஆகியன அரசால் செய்து தரப்பட்டுள்ளது.

கல்வி வசதிக்காக மழலையர் பள்ளிகள், தொடக்கப்பள்ளி, மற்றும் உயர் நிலைப்பள்ளி உள்ளது. பொன்னூர் எல்லையில் மலைக்கு அண்மையில் வந்தவாசி சேத்துப்பட்டு சாலை அருகில் திருவள்ளுவர் பொறியியல் கல்லூரி தனியாரால் நடத்தப்பட்டு வருகின்றது. மேலும் மலை அடிவாரத்தில் (தனியார்) குந்த குந்தர் தொழிற் பயிற்சிப் பள்ளி இயங்கி வருகின்றது. இக்கல்வி நிறுவனங்களில் உள்ளூர் வெளியூர் மாணவர்கள் பயில்கின்றனர். பரந்த மலையும், காடும், இக்கல்வி நிறுவனங்களும் பொன்னூருக்கு அணி சேர்ப்பவைகளாகவும் ஊரின் பெயரை பறைசாற்றுபவைகளாகவும் அமைந்துள்ளன.

சிவத்தல இருப்பிடம் :

இவ்வூர் பொன்னூர், மண்ணூர், மடவிளாகம் என மூன்று பகுதிகளாக வழங்கியதாகச் செவி வழிச் செய்தி மூலம் அறிய முடிகிறது. சிவத்தலம் அமைந்துள்ள பகுதி 'மடவிளாகம்' என அழைக்கப்பட்டதாகத் தெரிகிறது.

ஊரின் வடகிழக்குத் திசையில் ஒரே வளாகத்தில் சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் அமைந்திருக்கின்றன. 5430 சதுர மீட்டர் பரப்பளவுள்ள நிலத்தின் மத்தியில் 2985 சதுர அடி பரப்பளவில் சிவத் தலமும், 1470 சதுர அடி பரப்பளவில் பெருமாள் தலமும் அமைந்துள்ளன. ஊரின் வடகிழக்கு மூலையில் சிவன், பெருமாள் கோயில்கள் அமைந்திருப்பது ஊருக்கு வளம் சேர்க்கும் என்பது ஆன்றோர் அனுபவ மொழியாகும்.

தலங்களின் பழமை

சிவத்தலம் : தேவார திருவாசகப் பாடல்கள் அருளிய நால்வர் பெருமக்களுள் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகளின் தேவாரத்தில் வைப்புத்தல வரிசையில் இத்தலம் பாடப்பட்டுள்ளது.

சுந்தரரின் காலம் கி.பி. 807 முதல் 825. இன்றைக்கு 1177 ஆண்டுகளுக்கு முற்பட்ட சுந்தரரால் பாடப்பெற்றதும், கற்றளி ஏற்படுவதற்கு முன்பே பராசர முனிவராலும், பிரம தேவனாலும் வழிபடப் பட்டதுமான இத்தலம் மிகவும் பழைமை வாய்ந்தது. ஏறக்குறைய 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனக் கருத இடம் உள்ளது.

கோயிலின் கட்டிடம் ஏற்பட்ட காலம் பல்லவர்களின் ஆட்சிக் காலமாகையால் இன்றைக்கு 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம்.

பெருமாள் கோயில் :

இக்கோயில் பல்லவர்கள் காலத்தில் கட்டப்பட்டு, சோழ மன்னர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. சம்புவராய மன்னர்கள் காலத்தில் மீண்டும் சீரமைக்கப் பட்டுள்ளது. சுமார் 1300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

தேவாரத் தலங்கள்

தேவாரத் திருப்பதிகங்கள் பெற்ற தலங்கள் 275. தேவார வைப்புத்தலங்கள் 249. வைப்புத்தல வரிசை என்பது தலத்துக்கு வாராமல், தலத்தின் பெருமை அறிந்து ஓரிடத்திலிருந்து பாடப்பட்டவையாகும். இதில் வைப்புத் தல வரிசையில் இவ்வூர் அமைந்துள்ளது. தொண்டை நாட்டில் தேவாரப் பாடல் பெற்றனவாக 32 தலங்களும், தேவாரத்தில் இடம் பெற்ற தலங்களாகச் சிலவும் உள்ளன. அவற்றுள் இதுவும் ஒன்று.

பொன்னூர் பெயர் கொண்ட வேறு ஊர்

மயிலாடுதுறைக்கு அருகில் சோழ நாட்டு வடகரைத் தலமான 'திருஅன்னியூர்' தற்போது பொன்னூர் என வழங்கப்படுகின்றது. இத்தலம் திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தரால் பாடல் பெற்ற தலமாகும்.

சுந்தரமூர்த்தி சுவாமிகள் 'பொன்னூர் நாட்டுப் பொன்னூர்' எனக்குறிப்பிட்டு பாடியுள்ளதாலும், இக்கோயில் கல்வெட்டிலும் பொன்னூர் நாட்டில் உள்ள பொன்னூர் என்று குறிப்பிட்டுள்ளதாலும் வந்தவாசியை அடுத்துள்ள இவ்வூரே வைப்புத் தலவரிசையில் பாடப்பெற்ற ஊராகும் என அறிய முடிகிறது.

தொண்டை நாடு

'ஆதொண்டன்' என்னும் பேரரசன் ஆண்ட பகுதியாகையால் தொண்ட மண்டலம் எனப் பெயர் பெற்றது. (மண்டலம் - நாட்டின் பெரும் பகுதி). பின்னர் அப்பகுதியை சோழ அரசு படையெடுத்து வெற்றி கொண்டதனால் (இராச கேசரி ஆதித்ய சோழன் ஆட்சிக் காலத்தில் கி. பி. 894 இல் தொண்டை நாடு சோழர் ஆட்சிக்கு உட்பட்டது எனத் தெரிகிறது) தொண்டை மண்டலம், செயங்கொண்ட சோழ மண்டலம் என அழைக்கப்பட்டது.

தொண்டை நாடு பிற்காலத்தில் பல்லவ நாடு என்று வரலாற்றில் பெயர் பெற்றது. இதற்கு தொண்டை மண்டலம், தொண்ட மண்டலம் எனவும் பெயர் வழங்கிற்று.

இன்றைய காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை, வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மாவட்டங்களும், கடலூர் மாவட்டத்தின் சில பகுதிகளும், சித்தூர் மாவட்டமும் அன்றைய தொண்டை மண்டலமாக இருந்திருக்கிறது. தொண்டை நாட்டின் தென் எல்லையாக தென்பெண்ணை ஆறும், வட எல்லையாக வட பெண்ணை ஆறும், மேற்கே மைசூர் நாடும், கிழக்கே கடலும் எல்லைகளாக, இருந்ததாகத் தெரிகிறது.

பொன்னூர் நாடு

தொண்டை மண்டலத்தில் 24 கோட்டங்களும், 79 நாடுகளும் அடங்கியிருந்தன. அவற்றுள் ஜெயங்கொண்ட சோழ மண்டலம், வெண்குன்றம் கோட்டம் என்பது ஒன்றாகும். இது ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் ஒரு மாவட்டமாக இருந்துள்ளது.

இக்கோட்டத்தின் ஒரு பகுதியாக பொன்னூர் நாடு இருந்திருக்கிறது. பொன்னூர் நாடு இவ்வூரைத் தலைமை இடமாகக் கொண்டு விளங்கியதால் இவ்வூர் 'பொன்னூர் நாட்டுப் பொன்னூர்' என வழங்கப்பட்டது. இது இக்கோயில் கல்வெட்டில் காணப்படும் செய்தியாகும்.

சுந்தரர் பாடலிலும் அவ்வாறே அமைந்துள்ளது. அக்காலத்திலேயே 79 நாடுகளில் ஒன்றாக, பல ஊர்களையும் உள்ளடக்கிய ஒரு நாட்டின் தலைமை இடமாக பொன்னூர் விளங்கியிருந்தமையால் அன்றே இவ்வூர் பெரிய ஊராக சிறப்புற்று இருந்திருக்கின்றது என்பது விளங்குகின்றது.

பொன்னூர் சிவத்தலம் 'பொன்னூர் நாட்டுப் பொன்னூர்' என சுந்த்ரர் தேவாரத்தில் குறிப்பிடப்படுகின்றது.

பொன்னூர் பற்று

சோழர்கள் ஆட்சிக் காலத்தில் 'நாடு' என வழங்கப்பட்ட வருவாய்த் துறை அமைப்பு முறை, சம்புவராய மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் வருவாய்த் துறையின் பிரிவைக் குறிக்க 'பற்று' என்னும் சொல் பயன்படுத்தப் பட்டுள்ளது. பற்று என்பது வரித்தண்டல் நிர்வாகப் பிரிவின் அமைப்பாக விளங்கியது எனத் தெரிகிறது. அவர்கள் ஆட்சிக்கு உட்பட்ட பகுதியை பல பற்றுகளாகப் பிரித்திருந்தனர். அதில் **'பொன்னூர்'** ஒரு பற்றின் தலைமை இடமாக இருந்துள்ளது.

ஒரு பற்றின் கீழ் பல ஊர்கள் சேர்க்கப்பட்டு, இதில் அடங்கிய பெரிய ஊரோ அல்லது முக்கியமான ஊரோ தலைமை இடமாகக் குறிக்கப்பட்டது. **40** பற்றுகள் அடங்கிய பெயர்ப் பட்டியலைத் தேசூருக்கு அடுத்துள்ள திருமால்பாடியில் உள்ள முதலாம் இராசநாராயண சம்புவராயரின் ஆட்சியின் 16 வது ஆண்டுக்கால கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது. (கி. பி. 1355). அப்பட்டியலில் முதலாவதாக பொன்னூர் பற்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ்வகையில் இவ்வூரைச் சுற்றியுள்ள பல சிற்றூர்களை உள்ளடக்கி, பொன்னூரைத் தலைமை இடமாகக் கொண்டு 'பொன்னூர் பற்று' என விளங்கியுள்ள செய்தி அக்கல்வெட்டு மூலம் நமக்குத் தெரிய வருகின்றது. சம்புவராய மன்னர்கள் காலத்திலும் வருவாய்த்துறைப் பகுதி ஒன்றின் தலைமை இடமாக பொன்னூர் விளங்கியுள்ளதால், அக்காலத்திலேயே இவ்வூர் பெரிய ஊராக இருந்துள்ளது என்பது தெரிகின்றது.

இலக்கியம் :

பொன்னூர் தேவாரம்
சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளியது.
திருநாட்டுத் தொகை
திருச்சிற்றம்பலம்

தென்னூர் கைம்மைத் திருச்சுழியல் திருக்கானப்பேர்
பன்னூர் புக்குறையும் பரமற்கிடம் பாய்நலம்
என்னூர் எங்கள் பிரான் உறையும் திருத்தேவனூர்
பொன்னூர் நாட்டுப் பொன்னூர் புரிசை நாட்டுப் புரிசையே.

பாடலின் பொருள்

மிகவும் சிறப்பித்துக் கூறப்படுகின்ற திருத்தலங்களில் எழுந்தருளியிருக்கும் எங்கள் சிவபெருமானுக்கு இடமாய் விளங்கும், வணங்கி வாழ்த்தும் புகழை உடைய ஊர்கள் எந்த ஊர்கள் என்றால்; அவை எங்கள் பெருமான் விரும்பித் திருக்கோயில் கொண்டிருக்கும் தென்னூர், புகழ்நிறைந்த கவ்வைக் கடல் என்னும் தீர்த்தம் கொண்ட திருச்சுழியல், திருக்கானப்பேர், திருத்தேவனூர், பொன்னூர் நாட்டைச் சேர்ந்த பொன்னூர் திருத்தலம், புரிசை நாட்டில் உள்ள புரிசைத் தலம் ஆகியனவாகும்.

(தென்னூர், தேவனூர்,பொன்னூர், புரிசை இவை தேவார வைப்புத் தலங்கள்.)

புரிசை என்னும் ஊர் வந்தவாசியிலிருந்து செய்யாறு செல்லும் சாலை அருகில் உள்ளது. புரிசையும் புரிசை நாட்டின் தலைமை இடமாக விளங்கியிருக்கின்றது. அங்கு ஒரு சிவத்தலம் உள்ளது.

கோயில் கட்டிய அரசர்கள் மற்றும் காலம்

சிவன் கோயிலின் பழைமை

ஏறத்தாழ 1300 ஆண்டுகளுக்கு முன்பே பல்லவ மன்னர்கள் காலத்தில் இத்திருக்கோயில் கட்டப்பட்டுள்ளது. இக்காலத்தில் வாழ்ந்த சுந்தரமூர்த்தி சுவாமிகளால் இத்திருக்கோயில் பாடல் பெற்றுள்ளது இதற்கு சான்றாக அமைகிறது. மேலும் பல்லவர் காலக் கோயில்களில் வாயில் காப்போர் (துவாரபாலகர்) சிலைகள் அமைக்கப்படவில்லை. இக்கோயிலிலும் அச்சிலைகள் இல்லாதிருப்பது ஒரு சான்றாக உள்ளது.

பின்னர் ஆட்சிக்கு வந்த சோழ மன்னர்கள் காலத்தில் கோயில் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அக்கால கட்டத்தில் கோயில் கட்டிட அமைப்பு மாற்றம் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

அதன் பின்னர் ஆட்சிக்கு வந்த விஜயநகர மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் சபா மண்டபத்தைக் கட்டி கோயில் விரிவுபடுத்தப்பட்டுள்ளது தெரிகிறது. அம்மன் சந்நிதியின் முன்னால் அமைந்துள்ள சபா மண்டபத்தின் தூண்களின் அமைப்பைக் கொண்டும்; அவற்றின் மேல், மண்டபத் தளத்தின் கீழ் அமைத்துள்ள வரிசையான சிறிய அளவிலான சிற்பங்களை வைத்தும் இதைத் தெரிந்து கொள்ள முடிகிறது.

வெவ்வேறு காலகட்டத்தில் ஆட்சி செய்த மூன்று அரச மரபினர் ஆட்சியின் கீழ் இக்கோயில் திருப்பணி நடைபெற்றுள்ளது விளங்குகின்றது.

பெருமாள் கோயிலின் பழைமை

பல்லவர்கள் ஆட்சிக் காலத்திலேயே பெருமாள் கோயிலும் கட்டப்பட்டுள்ளது. பல்லவ கோப்பெருஞ்சிங்கதேவன் கல்வெட்டு இதை உறுதிப்படுத்துகின்றது. பின்னர் ஆட்சிக்கு வந்த சோழ அரசர்கள் காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பட்டுள்ளது. இப்போதுள்ள கோயிலின் சிற்ப அமைதியின் மூலம் இதைத் தெரிந்து கொள்ள முடிகின்றது.

இக்கோயில் மீண்டும் வென்று மண்கொண்ட சம்புவராயரின் 14வது ஆட்சி ஆண்டில் கி. பி. 1336 இல் புதுப்பிக்கப்பட்டுள்ளது. அழகப்பெருமாள் கோயில் 'ஸ்ரீ விண்ணகர்' எனப் பெயரிடப்பட்டது.

இச்சம்புவராயர் தன் ஆட்சிக் காலத்தில் பொன்னூர், வலையாத்தூர், காங்கேயநல்லூர், திருக்கச்சூர் ஆகிய ஊர்களில் கோயில் கட்டியுள்ளார்.

கோயில் வாயிற்படியில் உள்ள பல்லவர், பாண்டியர் கால கல்வெட்டுக்கள் அம்மன்னர்கள் காலத்தில் பொறிக்கப்பட்டதை மறுபடியும் தனிக்கல்லில் வெட்டப்பட்டு சுவரில் பொருத்தப்பட்டவைகளாக இருக்கலாம். அல்லது பழைய நிலைப் படியையே வைத்து, தாங்கள் அமைத்த கோயிலில் பொருத்தி இருக்கலாம். இதிலிருந்து பழைய கோயில் இம்மன்னர் காலத்தில் புதுப்பித்துக் கட்டப்பட்டது என்பது தெளிவாகின்றது.

இக்கோயில் வளாகத்தில் சிவன் கோயிலின் வட திசையில் 7 அடி உயர மகாவிஷ்ணு சிற்பம் ஒன்று உள்ளது. இதுவே பெருமாள் கோயிலின் பழைய மூலவர் ஆகும்.

இவற்றிலிருந்து பல்லவர் காலத்திலேயே சிவன் கோயிலும், பெருமாள் கோயிலும் இருந்து, இரண்டும் சோழ மன்னர்கள் காலத்தில் புதுப்பிக்கப்பட்டது எனத் தெரிகிறது.

அதன்பின் விசய நகர மன்னர்கள் காலத்தில் சிவன் கோயிலும், சம்புவராய மன்னர்கள் காலத்தில் பெருமாள் கோயிலும் மறுசீரமைப்பு செய்தமையும் விளங்குகின்றது.

பண்டைய அமைப்பு

முற்காலத்தில் தோன்றிய கோயில்கள் யாவும் மலைகளின் மீதும், ஆற்றங்கரைகளிலும், கடற்கரைகளிலும், காடுகளிலும், மரங்களின் கீழும் ஏற்படுத்தப்பட்டவைகளாகும். (இறை உருவங்களை கட்டிடங்கள் இன்றியே அமைத்து வழிபட்ட நிலை.)

நாளடைவில் இவ்விடங்கள் மரத்தாலும், செங்கற்களாலும், சுண்ணாம்புச் சாந்தாலும் அமைக்கப்பட்ட திருக்கோயில்களாக மாறின. அதன் பின் பல மூர்த்திகளையும் உள்ளடக்கிக் கோயிலின் அமைப்பு பெரிதாக்கப்பட்டது. நாளடைவில் செங்கற்களால் கட்டப்பட்ட கோயில்கள் பழுதுபடவே பின்னர் வந்த

மன்னர்கள், காலத்தால் அழியாத கருங்கற்களால் பல இடங்களிலும் ஆலயம் அமைத்தனர்.

அவ்வகையில் இத்தலமும் கட்டப்பட்டிருக்க வேண்டும். கற்றளி கட்டுவதற்கு முன் இருந்ததனையே பராசர முனிவரும், பிரமதேவனும் வழிபட்டிருத்தல் வேண்டும். சுந்தரர் தேவாரத்தில் இத்தலத்தைப் பற்றிப் பாடியுள்ள காலம் கற்றளி தோன்றிய பின் ஆகும். இராட்டிரகூட மன்னர்களின் ஆட்சிக்கால கல்வெட்டு (கி. பி. 917) இருப்பதன் மூலம் இதை அறிய முடிகின்றது.

சிவத்திருத்தல அமைப்பு

கோயில் பல அடுக்குகள் கொண்ட நீண்ட சதுர அமைப்புடையது. வெளிச் சுற்று மட்டும் கொண்டுள்ள ஒரு திருச்சுற்றுடைய அமைப்புள்ளது. கோயிலின் முகப்பு நுழைவாயில் தெற்கு நோக்கி உள்ளது. இராச கோபுரம் அமைக்கப்படவில்லை.

கருவறை

மூலவர் சந்நிதி கிழக்கு நோக்கி அமைந்துள்ளது. 68 சதுர அடி பரப்புக் கொண்ட சதுர வடிவ கருவறையில் இலிங்கத் திருமேனி அமைந்துள்ளது. வட்ட வடிவ கலைநயம் கொண்ட ஆவுடையார். சிறிய பாணம், ஆவுடையார் தாழ்வானது. அழகான திருமேனி. தீப ஆராதனை செய்யும்போது சிவலிங்கத் திருமேனியில் ஒளி (சோதி) பிரதி பலிப்பாகத் தெரிவது அழகிய காட்சியாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட கல்லில் சிவலிங்கத் திருமேனியின் பாணம் இழைத்து அமைக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பு அம்சமாகும்.
வழிபடுவோருக்கு அமைதியும், வளமும், அருளும் நல்கும் சந்நிதானம்.

கருவறை வெளிச் சுவரில் மூர்த்தங்களை வைக்க மாடங்கள் (தேவகோட்டங்கள்) அமைக்கப்பட்டுள்ளன. ஆனால் இப்போது சிலைகள்

ஏதும் இல்லை. கருவறைகள், அர்த்த மகா மண்டபங்கள் இவற்றின் மேல்தளம் அடித்தளம் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. சபா மண்டபத்தின் அடித்தளம் செங்கல் கப்பியிட்ட காரைத் தளமாக உள்ளது.

தல இறைவன் பெயர்கள்

கல்வெட்டுகளில் தல இறைவன் பெயர் பராசுரேசுவரம் உடைய நாயனார், பராசுலேசுவரமுடைய நாயனார், திருப்பிரமீசரம் உடைய நாயனார், திருப்பரமீசுரம் உடைய நாயனார் என்று காணப்படுகின்றது. திருக்காமீசுவரர் என்றும் வழங்கப்படுகின்றார். வழிபடுவோர்க்கு அன்பையும், இன்பத்தையும் தந்து தன் மீது பற்றினை வளர்க்கும் ஈசர் என்பது இதன் பொருளாகும். (ஈசுவரன் - சிவன், கடவுள், தலைவன்; நாயனார் - சிவன், கடவுள், பெருமையிற் சிறந்தோன், தலைவர்)

பராசர முனிவர் வழிபட்டதனால் பராசுரேசுவரர் என்றும், பிரமன் வழிபட்டதனால் திருப்பிரமீசர் என்றும் அழைக்கப்படுகின்றார்.

விமானம்

அடித்தளத்திலிருந்து கூரைப்பகுதி வரை 10 அடி உயரத்துக்கு கருங்கல்லாலும் அதன்மேல் (கருவறையின் மீது) 20 அடி உயரம் கொண்ட சுதையால் அமைந்த மூன்று தள விமானம் (தூபி) அமைக்கப் பட்டுள்ளது. விமானத்தின் கிழக்கில் விடை மீதமர்ந்த பார்வதி உடனாய சிவபெருமான் உருவமும், தென் திசையில் முயலகனை மிதித்துள்ள நிலையில் கல்லால மரத்தின் கீழ் அமர்ந்துள்ள தென்முகக் கடவுள் உருவமும், மேற்கில் திருமாலின் உருவமும், வடக்கில் நான்முகன் உருவமும், பல நூறு ஆண்டுகளுக்கு முன் சுதையினால் செய்தது இடிபாடடைந்த நிலையில் இருந்தும், இன்றும் கூர்ந்து நோக்குவாரை வியப்பில் ஆழ்த்தும் அழகிய காட்சியினைத் தருகின்றது.

மண்டபங்கள்

கருவறைக்கு முன் அர்த்த மண்டபம் உள்ளது. அதில் சிறிய நந்தியும் பலிபீடமும் உள்ளது. அர்த்த மண்டபத்தில் சுரங்கம் ஒன்று உள்ளது. அது கிணறு என்றும் கூறப்படுகின்றது. அர்த்த மண்டபத்துக்கு முன் மகா மண்டபம் உள்ளது. அதற்கு முன் சபா மண்டபம் அமைந்துள்ளது. அம்மண்டபம் வெளிப்புறத் தூண்களை உள்ளடக்கி செங்கல் சுவரால் அமைக்கப்பட்டுள்ளது.

திருமேனிகள்

சபா மண்டபத்தில் மேற்குச் சுவரினை ஒட்டியும், தெற்குச் சுவரினை ஒட்டியும் பரிவார தெய்வங்களின் சிலைகள் அமைந்துள்ளன. தெற்கு நோக்கும் நிலையில் சண்டேசுவரர் புடைப்புச் சிற்பமாக விளங்குகின்றார். அடுத்ததாக கிழக்கு நோக்கிய நிலையில் மிகுந்த கலை நயத்துடன், மயில் மீது அமர்ந்த உருவமாக ஆறுமுக சுவாமி காட்சி அளிக்கின்றார். பன்னிரு கரங்களுடன் பின்னால் திருவாசி அமைந்துள்ள கோலத்தில் (வள்ளி தெய்வயானை இன்றி) வழிபடுவோருக்கு திருவருளை வாரி வழங்கும் அழகுடன் காட்சி தருகின்றார்.

கருவறைக்குச் செல்லும் வாயிலின் இடப்புறத்தில் தல விநாயகர், நான் முகன் (பிரம்மா), விஷ்ணுதுர்க்கை, சூரியன் திருமேனிகள் அமைந்துள்ளன. வடக்கு நோக்கிய நிலையில் பைரவர், சாமுண்டி அம்மன், சமய குரவர் நால்வரில் மாணிக்கவாசகர், திருநாவுக்கரசர் சிலைகளும் புத்தி விநாயகர் சிலையும் அமைந்துள்ளன. இவைகள் யாவும் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் மிகுந்த அழகுடன் விளங்குகின்றன.

புத்தி விநாயகர் சிலை தன் மடிமீது ஒரு பெண் உருவத்தைத் தாங்கி இருப்பது போன்று அமைந்திருப்பது கலை நயத்துடன் சிறப்பாக உள்ளது. இது போன்ற சிலை மிக அபூர்வமாகத்தான் காணப்படும்.

வடக்கு சுவரில், சற்று உயரமான இடத்தில் சிறிய உருவிலான விநாயகர் சிலை புடைப்புச் சிற்பமாக வடிக்கப்பட்டு அழகுடன் காட்சி தருகின்றது.

திருக்கோயிலில் வாயில் காப்போர், நவக்கிரகம் இவை இல்லை.

அம்மன் சந்நிதி

பல்லவர் ஆட்சிக் காலத்தில் சிவன் கோயில்களில் உமாதேவிக்குத் தனிக்கோயில் எடுக்கப்படுவதில்லை. எனவே இக்கோயிலில் சிவன் கோயில் கட்டப்பட்ட காலத்திற்குப் பின்னர், விஜய நகர மன்னர்கள் ஆட்சிக்காலத்தில் அம்மனுக்கு தனிச்சந்நிதி கட்டப்பட்டிருக்க வேண்டும்.

மண்டபங்களின் உயரப் பகுதியில் அமைந்துள்ள விஜயநகர மன்னர்களின் கால சிற்பங்களின் அமைப்பு இதை உறுதிப்படுத்துகின்றது. இச்சந்நிதியில் எங்கும் கல்வெட்டோ, அம்மனின் திருப்பெயரோ பொறிக்கப்படவில்லை. அம்மன் எதிரில் பலி பீடமோ, எந்த வாகனத்தின் உருவமோ காணப்படவில்லை.

அம்மன் சந்நிதி சிவன் கோயில் மண்டபத்தை ஒட்டியே தனிக்கருவறையில் தெற்கு நோக்கி அமைந்துள்ளது. 49 சதுர அடி பரப்பில் உள்ள கருவறையில் நின்ற திருக்கோலத்தில், அடைக்கலம் தருதல் (அபயம்), வேண்டுவன தருதல் (வரதம்), பற்றுகளை நீக்குதல்(பாசம்), ஆணவத்தை அழித்தல் (அங்குசம்) ஆகிய நான்கு திருக்கரங்களுடன் அம்மன் காட்சி தருகின்றாள். காண்போரைக் கவரும் வகையில் அழகுடன் கருணை மழை பொழியும் கண்களுடன் அருள் தருகின்றாள்.

அம்மன் திருப்பெயர் சாந்த நாயகி. பெயருக்கேற்ப வழிபடுவோர்க்கு அமைதியையும், குளிர்ச்சியையும் தரும் தலைவியாகக் காட்சி தருகின்றாள். சாந்தம் - அமைதி, குளிர்ச்சி, தயவு; நாயகி - பெருமையில் சிறந்தவள், தலைவி. அம்மன் கருவறைக்கு முன் அர்த்த மண்டபமும்,

மகா மண்டபமும் உள்ளது. இதற்கு முன் சபா மண்டபம் அமைந்துள்ளது. அம்மண்டபத்தின் வெளிப்புறத் தூண்களை உள்ளடக்கி செங்கல் சுவராக மண்டபம் அமைந்துள்ளது.

ஈசுவரன் சந்நிதி முன் மண்டபமும், அம்மன் சந்நிதி முன் மண்டபமும் "ட" வடிவ அமைப்புடன் சபா மண்டபமாக இணைந்துள்ளது. ஓரிடத்தில் நின்றபடியே சுவாமியையும், அம்மனையும் ஒரு சேர வணங்கலாம். இரண்டு கருவறைகளின் தரைப்பகுதி மூன்று நிலைகளாக படிப்படியாக உயர்ந்துள்ளதால், தொலைவில் இருந்தபடியே சிவலிங்கத்திருமேனியையும் அம்மன் திருமேனியையும் ஒரு சேர அழகுடன் கண்டு தரிசிக்க வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வமைப்பு சில கோயில்களிலேயே அமைந்திருக்கும். கருவறை வெளிச்சுவர்களில் எந்த மூர்த்தங்களும் அமைக்கப்படவில்லை. மாடங்கள் மட்டும் அமைக்கப்பட்டுள்ளன.

தினமும் கோயிலுக்கு வருவோர் அமர்ந்து செல்ல நுழைவு வாயிலுக்கு இருபுறமும் திண்ணை அமைக்கப்பட்டுள்ளது.

நந்தி மண்டபம்

கோயிலின் கிழக்குச் சுவரில் மூலவருக்கு நேர் எதிரில் சாளரம் அமைக்கப்பட்டு, சுவருக்கு வெளியில் இருக்கும் நான்கு தூண்கள் கொண்ட சிறிய மண்டபத்தில் இலிங்கத் திருமேனியை நோக்கும் நிலையில் அதிகார நந்தி அமைக்கப்பட்டுள்ளது. அதன் பின்னால் மேடையில் பலிபீடம் உள்ளது.

தனி மண்டபம்

கோயிலின் தெற்குச் சுவருக்கு அருகில் (வெளியில்) 100 சதுர அடி பரப்பளவு கொண்ட தரைப் பகுதி உயரமாக

அமைக்கப்பட்ட தனி மண்டபம் (வடக்கு நோக்கி) இடிபாடான நிலையில் உள்ளது.

அபிடேக நீர்க்கிணறு

கோயிலின் வடக்குச் சுவற்றிலிருந்து 15 அடி தூரத்தில் சிறிய கிணறு ஒன்று உள்ளது. அதிலிருந்து நீர் எடுக்கப்பட்டு திருமேனிகளின் அபிடேகத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது. கிணற்றுக்குச்செல்ல வடக்குச் சுவரில் சிறிய நுழை வாயில் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

திருமாலின் சிலை

கிணற்றுக்கு மேற்கே திருமாலின் (மகாவிஷ்ணு) சிலை ஒன்று மேற்கு நோக்கிய நிலையில் நின்ற திருக்கோலத்தில் நெடிய உருவில் (7 அடி உயரம்) அழகுடன் காட்சியளிக்கின்றது. இதுவே பெருமாள் கோயிலின் பழைய மூலவர் எனத் தெரிகிறது. தனிக்கோயிலாக நிறுவி இடிபாடு அடைந்து தற்போது சிலை மட்டும் தனியாக உள்ளது என அறிய முடிகின்றது.

திருக்குளம்

விழாக் காலங்களில் இறைவன் திருமேனிகளின் நீராட்டலுக்கும், கோயிலுக்குச் செல்வோர் தங்களைத் தூய்மை செய்து கொண்டு உள்ளே செல்ல வேண்டும் என்பதற்கும், அன்பர்கள் புனித நீராடியபின் வழிபாட்டுக்குச் செல்வதற்கும், தெப்பல் திருவிழா நடைபெறவும் திருக்கோயில்களில் திருக்குளம் அமைக்கப்படுவது அக்கால மரபு. மற்றும் அக்குளங்களில் நீராடுதலினால் வினைகள் நீங்கும் என்பதும் பாடல்களில் உள்ள கருத்தாகும்.

"அத்தன் இறைவன் அமலேசன் அமர் ஆலயத்தின் அருகுறுநீர்
சுத்தம் அசுத்தமாயினும் நற்சுரர்கள் பரவு கங்கை யென்றே
புத்தி புரிந்து அங்குஅத் தடத்தின் புனலுள் படிவோர் யாரேனும்
சத்த சனத்துறு பாவம் தணந்து சிறந்து தயங்குவரே".

– பழம் பாடல்.

(அமலேசன் - இறைவன்; சுரர்கள் - தேவர்கள்; படிவோர் - மூழ்குவோர்; சனத்துறு - சுற்றத்துடன்; தணந்து - நீங்கி; தயங்குவர் - வாழ்வர்.)

இதையே **"மூர்த்தி தலம் தீர்த்தம் முறையால் தொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே"** என மூன்றையும் தாயுமானவர் சிறப்பித்துக் கூறியுள்ளார்.

அதன்படி இக்கோயிலின் தென்கிழக்கு மூலையில் முகப்பு நுழை வாயிலுக்கு வலப்புறத்தில் 80 அடி நீளம் 40 அடி அகலம் கொண்ட திருக்குளம் அமைந்துள்ளது. பிரம தீர்த்தம் என வழங்கப்படுகிறது. ஒரு காலத்தில் சிறப்புடன் விளங்கியிருந்த இக்குளம் தற்போது படிகள் இடிந்து பழுதடைந்து (இப்போது) பயன்பாட்டில் இல்லை.

பூந்தோட்டம்

இதை நந்தவனம் எனவும் கூறுவர். திருக்கோயில்களைக் கட்டிய மன்னர்கள் இறைத் திருமேனிகளுக்கு மலர் பறித்து இட்டு வழிபாடு செய்வதற்காக கோயிலை ஒட்டி பூந்தோட்டங்கள் அமைத்திருக்கின்றனர். பல கோயில்களில் இன்றும் பூந்தோட்டங்கள் பயன்பாட்டில் உள்ளன.

இறை வழிபாட்டுக்கு முக்கியமாகத் தேவைப்படுவது பூக்களாகும். **"பூவார் மலர் கொண்டு அடியார் தொழுவார் புகழ்வார்"** என்பது திருஞானசம்பந்தரின் திருவாக்கு. அதற்கிணங்கவே அக்காலத்தில் பூந்தோட்டம் அமைத்தனர்.

இக்கோயிலிலும் மேற்கு மதில் சுவருக்கு வெளியில் பூந்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. செடிகளுக்கு நீர் பாய்ச்ச கிணறு ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. 540 சதுர மீட்டர் பரப்பளவில் பூந்தோட்ட நிலம் இன்றும் உள்ளது. பயன்பாடு இல்லாத நிலையில் உள்ளது.

தலமரம்

இக்கோயிலின் தலமரம் சரக்கொன்றை மரமாகும். அம்மரம் பொன்(மஞ்சள்) நிறத்தில் பூத்துக் குலுங்கி தழைத்து காட்சி தருவது மிக அழகாக இருக்கும். பூக்கள் ஓங்கார வடிவத்துடன், ஐந்து இதழ்களுடன் விளங்குகிறது. பிரணவத்தோடு உச்சரிக்கின்ற ஐந்தெழுத்தை (சிவாயநம) நினைவூட்டுகின்றது. கொன்றை மலர் சிவபெருமானுக்கு மிகவும் உகந்ததாகும். இம்மலருக்கு சிவகொன்றை, கடுக்கை, பொன்மலர், ஓங்கார மலர், இதழி என்றும் பெயர்கள் உண்டு. 'இதழி மார்பன்' என சிவனுக்குப் பெயர் உண்டு.

"மின்னார் செஞ்சடை மேல்
மிளிர் கொன்றை அணிந்தவனே "

என்பது சுந்தரர் பாடலாகும்.

(மிளிர்-ஒளிவீசும், பெருமை, மேலான)

"சரக்கொன்றை பூத்த சடைக்காட்டைப் பாரேனோ"

– பட்டினத்தார்.

(தொங்கும் சரக்கொன்றை மலர்கள் அணிந்துள்ள சிவனின் சடை முடியைத் தரிசிப்பேனோ)

தற்போது இக்கோயில் வளாகத்தில் இரண்டு சரக்கொன்றை மரங்கள் உள்ளன.

கொடிமரம்

பெருவிழாக் காலங்களில் கோயில்களில் கொடியேற்றும் வழக்கம் உள்ளது. அதற்கென கோயிலின் முகப்பில் கொடி மரம் அமைக்கப்பட்டிருக்கும். இத்தலத்தில் தற்போது கொடி மரம் இல்லை.

நித்திய பூசை

அரசினரால் ஏற்படுத்தப்பட்டுள்ள நித்திய ஒரு கால பூசை அறக்கட்டளை நிதி உதவித் திட்டத்தின் மூலம் தினமும் ஒரு கால பூசை இங்கு நடைபெற்று வருகின்றது. வருவாய் இன்றித் தவிக்கும் கோயிலாக உள்ளது.

விழாக்கள்

சுமார் 40 ஆண்டுகளுக்கு முன் ஒவ்வோர் ஆண்டும் ஆடி மாதம் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருநட்சத்திரத்தன்று (சுவாதி) இலட்ச தீபத் திருவிழா, காணும் பொங்கல் விழா, பங்குனி உத்திர திருக்கல்யாண விழா, மாதக் கிருத்திகை விழா ஆகிய விழாக்கள் நடைபெற்றுள்ளன. அவ்விழாக்கள் ஏதும் இப்போது நடைபெறுவதில்லை.

தற்போது கார்த்திகை மாத சோமவார (திங்கள்) வழிபாடு செங்குந்த மரபினராலும், மார்கழி மாத திருவாதிரை நாள் வழிபாடு விசுவகர்மா வகுப்பினராலும் நடைபெறுகின்றது. 22-06-2002 முதல் பிரதோஷ விழா நடைபெற்று வருகின்றது.

தலத்தை வழிபட்டோர்

அரிய தவத்தை உடைய முனிவர்களுள் ஒருவரான பராசர முனிவர் இத்தலத்தில் வழிபட்டுள்ளார். எனவே அவர் பெயராலேயே இத்தல இறைவன் பராசுரேசுவரர் என வழங்கப்படுகின்றார்.

பிரமதேவன் தான் செய்த பாவங்கள் நீங்குவதற்காக இத்தல இறைவனை வழிபட்டுள்ளார். அதனால் அவர் பெயராலும் இத்தல இறைவன் திருப்பிரமீசர் என வழங்கப்படுகின்றார்.

தேவார மூவர்களில் ஒருவராகிய சுந்தரமூர்த்தி சுவாமிகள் தம் தேவாரப் பாடல் மூலம் இத்தல இறைவனைப் போற்றிப் பரவியுள்ளார்.

பராசர முனிவர் வரலாறு

முனிவர்கள் :

பாசங்களை முனிந்தவர்கள் (வெறுத்தவர்கள்), மனம் அடங்கி இறை நாட்டத்திலேயே எப்போதும் இருப்பவர்கள். மனத்திற்கு அன்னியமானவற்றை அகற்றியவர்கள், கல்லாமலே எல்லாம் தெரிந்தவர்கள். பதினெண் கணத்துள் ஒரு தொகுதியினர், அருந்தவத்தோர். தெய்வத் தன்மை கொண்டவர்கள். எல்லாத் துறைகளிலும் மக்களுக்கு வழி காட்டியவர்கள்.

அரிய தவத்தை உடைய (விசுவாமித்திரர், அத்திரி, கமலமுனி, கண்வர், பிருகு, பிருங்கி, வான்மீகி போன்ற) முனிவர்களுள் ஒருவர் வசிட்டர் ஆவார். சிக்கல் திருத்தலத்தில் வெண்ணெயினால் சிவலிங்கம் அமைத்து வழிபட்டவர். திருத்தட்டாங்குடித் தலத்தில் வசிட்டருக்குச் சிலை உள்ளது. திருப்பழுவூர், கீழ்வேளூர், திருவீழிமிழலை, திருநாகேச்வரம் போன்ற தலங்களில் வழிபாடு செய்துள்ளார்.

வசிட்ட முனிவரின் மகன் சத்தி முனிவர். அவருடைய மகனாக பராசர முனிவர் அவதரித்தார். (வசிட்டரின் பௌத்திரர் பராசரர் ஆவார்.) நான்கு வேதங்களுக்கு இணையாக ஒரு சிறந்த நூலைப் படைக்க ஒரு உத்தம மகனை, ஒரு நல்ல வேளையில் அடைய விரும்பினார். யமுனையைக் கடந்து தன் இருப்பிடம் செல்ல எண்ணி ஆற்றங்கரைக்குச் சென்றார்.

அங்கு மீனவர்களின் தலைவனாகிய மச்சராசனின் மகள் மச்சகந்தி (பரிமளகந்தி, சத்தியவதி எனவும் பெயர் உண்டு.) படகைச் செலுத்திக் கொண்டிருந்தாள். படகில் சென்ற பராசர முனிவர் வானத்தில் விண்மீன்களைப்

பார்த்து அவர் நினைத்தவாறு நல்ல நேரத்தில் வீடு செல்ல முடியாத நிலையில், நடு நதியில் ஒரு திட்டை உண்டாக்கி மச்சகந்தியின் மூலம் நல்ல அறிவுள்ள ஒரு மகனை (ஒளியுள்ள குழந்தையை) உண்டாக்கினார்.

அவ்வாறு பெற்ற மகனே ஐந்தாம் வேதத் தலைவனாம் வேதவியாசர் ஆவார். வியாசர் தன் தந்தை பராசரருடன் கயிலை சென்று சிவபெருமானின் அருளாசி பெற்று, விநாயகப் பெருமானை வேண்டி எழுதச் செய்து மகாபாரத நூலினைப் படைத்தார். நான்கு வேதங்களையும், வகுத்தவர் வியாச முனிவரே ஆவார். அதனால் அவருக்கு வேத வியாசர் என்னும் பெயர் ஏற்பட்டது.

வியாசர் சீர்காழி, திருஏடகம், திருப்பழுவூர், திருநல்லூர்ப்பெருமணம், திருஉத்தரகோசமங்கை போன்ற தலங்களில் வழிபட்டுள்ளார். சுகமுனிவர் வியாசமுனிவரின் மகன் ஆவார்.

பராசர முனிவர் வழிபட்ட தலங்கள்

பராசர முனிவர் வழிபட்ட தலங்கள் கஞ்சனூர், திருப்பனையூர், திருக்களர், திருகலிக்காமூர், திருமருகல், திருஏடகம், திருநணா, திருஆனைக்கா, திருநாகேச்சுரம், திருவாஞ்சியம், திருவேற்காடு, திருவோத்தூர், பொன்னூர் முதலியனவாகும்.

இவற்றுள் கஞ்சனூர் தலத்தின் வேறு பெயர்களான பலாசவனம், பராசரபுரம், பிரமபுரி, அக்னிபுரம், கம்சபுரம், முத்திபுரி என்பனவற்றுள்; பராசரமுனிவர் வழிபட்ட தலமாகையால் அவர் பெயரால் 'பராசரபுரம்' என ஒரு பெயர் வழங்கப்படுகின்றது. மேலும் அத்தலத்தில் அவருக்கு நடராசமூர்த்தி முத்தித் தாண்டவக் காட்சி அளித்துள்ளார்.

திருமருகல் தலத்தின் உள் பிராகாரத்தில் பராசர முனிவர் பிரதிட்டை செய்து வழிபட்ட சிவலிங்கத்

திருமேனி 'பராசரலிங்கம்' என அவரின் பெயராலேயே விளங்குகின்றது.

திருப்பனையூர் மற்றும் திருக்கலிக்காமூர் திருத்தலங்களில் பிராகாரத்தில் முதலில் பராசர முனிவர் உருவச்சிலை உள்ளது. அவ்வூரில் பராசர முனிவர் பிரதிட்டை செய்து வழிபட்ட சிவலிங்கத் திருமேனி மூலவராக விளங்குகின்றார். கஞ்சனூர் திருத்தலத்தில் அவர் பெயரால் திருக்குளம் அமைந்துள்ளது.

மற்ற தலங்கள் எதிலும் அவருடைய பெயரால் மூலவர் பெயர் உள்ளதாகத் தெரியவில்லை. ஆனால் பொன்னூர் சிவத்தலத்தில் மட்டும் மூலவர் திருமேனி அவருடைய பெயரைக் கொண்டே 'பராசுரேசுவரம் உடைய நாயனார்' எனவும், 'பராசலேசுரம்' உடைய நாயனார் எனவும் வழங்கப்படுகின்றது. இது ஒரு குறிப்பிடத் தக்க சிறப்பு அம்சமாக உள்ளது. இப்பெயர்கள் இத்தல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இதிலிருந்து இத்தல மூலவரை பராசர முனிவரே அமைத்து வழிபட்டிருக்கலாம் எனத் தெரிகிறது.

"அன்னவன் நிலயம் செய்த அரன்றனைப் பராச ரேசர்
என்னவும் புகல்வார் அந்த ஈசனைப் பூசை செய்தோர்
பன்னியே துதித்தோர் யாரும் பராசரன் தன்னைப் போல
நன்னெறி பெறுவர் என்ன நவின்றனன் பின்னும் மாதோ"
– திருவோத்தூர்ப் புராணம்.

(நிலயம் - பிரதிட்டை; பன்னியே - புகழ்ந்து; நன்னெறி - நல்வழி; நவின்றனன் - சொல்லினன்)

பிரமன் வழிபட்ட வரலாறு

பிரமனின் வேறு பெயர்கள் : படைப்புத் தொழில் புரியம் பிரமதேவனை இலக்கியங்களும், புராணங்களும் பல நூறு பெயர்களால் குறிப்பிடுகின்றன. அவற்றுள் சில பிரசாபதி, விதி, வேதா, மலரோன், வேதியன், கஞ்சன், சதுர்முகன், திசைமுகன், சத்தியன், **'பொன்னன்'**,

தாமரையான், கமலவாகனன், கமலசரதன், அரிசன்னன், சாத்தன், அந்தரன், அம்பரன், அயன், வாகீசன், உலோகபாலன், விரிஞன் விமலன், அரிசுதன், அன்னவாகனன், கலைமகள் கேள்வன் என்பனவாகும்.

ஐந்தொழில்கள்

சிவபெருமான் உலகம் தொழிற்பட பிரம்மா, திருமால், உருத்திரன், மகேசன், சதாசிவன் என்ற ஐவரைப் படைத்து; அவர்களுக்கு முறையே படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்னும் ஐந்தொழில்களையும் அளித்தார். இதில் முதலாவது மூர்த்தியாகத்திகழும் பிரமதேவன், படைப்புக் கடவுளாகவும், தேவர்களுக்கு வழிகாட்டியாகவும், சிறந்த சிவபக்தனாகவும் திகழ்கின்றார்.

நான்முகன் ஆனது

ஆதியில் சிவபெருமானால் படைக்கப்பட்ட பிரமதேவன், அவரைப் போலவே எட்டு தோள்களும், ஐந்து முகங்களும் கொண்டவராக விளங்கினார். இதனால் தேவர்களும் முனிவர்களும் அவரைச் சிவபெருமானாகவே கருதி வழிபட்டனர். பிரமன் தான் சிவபெருமானுக்கு நிகரானவன் எனக்கருதி பெருமை கொண்டார். இதனால் அவருக்கு அளவுகடந்த கர்வம் உண்டாயிற்று.

இதனை அறிந்த சிவபெருமான் பைரவரைப் படைத்து அவருடைய தலையில் ஒன்றினை வெட்டி எறியும் படிப் பணித்தார். அவர் தலையில் ஒன்று வெட்டப்பட்டது. அதன் பிறகுதான் அவர் நான்முகன் ஆனார்.

யார் பெரியவர்

ஒரு முறை திருமாலுக்கும், பிரமனுக்கும் தங்களுள் யார் பெரியவர் என்ற அகந்தை ஏற்பட்டது. இருவரும் சிவபெருமானிடம் சென்று தங்கள் ஐயத்தைக் கேட்டனர்.

அவர் இவர்கள் இருவரின் கர்வத்தை அடக்க, தன்னுடைய முடியையோ அல்லது அடியையோ யார் முதலில் கண்டு வருகின்றனரோ அவர்களே பெரியவர் எனக்கூறி விண்ணுக்கும் பாதாளத்துக்குமாய் நீண்ட ஒளி உருவாய்த் தோன்றிக் காட்சி அளித்தார்.

இந்த வரலாற்றை மாணிக்க வாசகர் தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

"பிரமன் அரிஎன்று இருவரும்தம் பேதைமையால்
பரமம் யாம்பரம் என்றஅவர்கள் பதைப்பொடுங்க,
அரனார் அழல் உருவாய் அங்கே அளவிறந்து
பரமாகி நின்றவா, தோள்நோக்கம் ஆடாமோ".

– திருத்தோள் நோக்கம்–12.

திருமால் பன்றி உருவிலும், பிரமன் அன்ன உருவிலும் சென்று சிவபெருமானின் அடி முடி தேடியும் இருவராலும் காண முடியாமையை **"செந்தளிர்மா மலரோனும் திருமாலும் ஏனமோடு அன்னமாகி அந்தம் அடிகாணாதே அவரேத்த வெளிப்பட்டோன்"** என ஞானசம்பந்தர் தம் பாடலில் குறிப்பிடுகின்றார்.

(மலரோன் - பிரமன்; ஏனம் - பன்றி)

திருமால் பன்றி உருவில் சென்று சிவனின் திருவடியைத் தேடிக் காணமுடியாமல் திரும்பி வந்து தன்னால் காணமுடியவில்லை எனக்கூறித் தன் தோல்வியை ஒப்புக் கொண்டார்.

பிரமன் பெற்ற சாபம்

பிரமதேவன் சிவபெருமானின் திருமுடியைக் காண அன்னப் பறவை உருவெடுத்து மேலே சென்றார். ஆனால் திருமுடியைக் காணமுடியவில்லை. தன் தோல்வியை ஒப்புக் கொள்ளாமல், சிவபெருமான் திருமுடி மீது இருந்து கீழே வந்து கொண்டிருந்த தாழம்பூவினிடம் தான் திருமுடியைக் கண்டதாகக் கூறும்படிச் செய்தார்.

தாழம்பூவும் பொய் சாட்சி கூறிற்று. பிரமனும் முடியைக் கண்டேன் என்று பொய்யாகக் கூறினார்.

அதனால் கோபம் கொண்ட சிவபெருமான் பிரமனுக்குத் தனிக்கோயிலும், தனிப்பூசையும் இல்லாமல் போகவேண்டும் என்றும், தாழம் பூ பொய் கூறிய காரணத்தால் பூசைக்கு பயன்படக்கூடாது எனவும் சாபம் இட்டார். நான்முகனுக்குத் தனிக்கோயில் தற்போது இல்லை. தாழம் பூவையும் வழிபாட்டுக்குப் பயன்படுத்துவதில்லை. சிவாலயங்களில் கருவறையின் வடக்குக் கோட்டத்தில் பிரமனுக்கு இடம் அளிக்கப்பட்டுள்ளது.

கல்விக்கு அரசியாகிய கலைமகளின் கணவன் பிரமன். செல்வத்துக்கு அரசியாகிய இலக்குமியின் கணவன் திருமால். இருவரும் கல்வியாலும், செல்வத்தாலும் இறைவனைக் காணமுடியும் என அகந்தை கொண்டு சிவத்தின் அடி முடி தேடிக் காணமுடியாது தோல்வியுற்றுத் திரும்பினர்.

இதிலிருந்து கல்வியாலோ செல்வத்தாலோ இறைவனைக் காண முடியாது என்பதும், அகந்தை நீங்கிய அன்புள்ளம் ஒன்றினால் மட்டும்தான் இறைவனை அடைய முடியும் என்னும் தத்துவக் கருத்து நமக்கு விளங்குகின்றது.

பிரம்ம தேவன் கர்வம் கொண்ட பாவம், பொய் கூறிய தவறு, சிவனை மதியாது தட்சன் செய்த யாகத்தில் கலந்து கொண்ட குற்றம் முதலான அநேக பாவச் செயல்கள் தீர பல இடங்களில் சிவலிங்கம் அமைத்து சிவபெருமானை வழிபாடு செய்தார் என புராணங்கள் கூறுகின்றன.

பிரமன் வழிபட்ட தலங்கள்

இவ்வாறு பிரமன் வழிபட்ட தலங்கள் பிரம்மபுரங்கள், பிரமபுரீசுவரங்கள் என்று அழைக்கப்படுகின்றன. நம் நாடு முழுவதிலும் பிரமன் வழிபட்ட தலங்கள் பல உள்ளன.

பொன்னூர் பிரமபுரீசுவரர், பெருநகர் பிரமபுரீசுவரர், நீலக்குடி பிரமபுரீசுவரர், சீர்காழி பிரமபுரம், திருவீழிமிழலை, கோளிலி எம்பெருமான், மழபாடி மாணிக்கம், வேதிகுடி பிரமபுரீசுவரம், கஞ்சனூர், திருஎறும்பியூர், திருவாஞ்சியம், திருச்சாத்தமங்கை, வழுவூர், அயனீச்சுரம், திருப்பனந்தாள், விரிஞ்சிபுரம், அம்பர்மாகாளம், காஞ்சிபுரம், திருவோத்தூர், அன்பிலாந்துறை, சிவபுரம், கருக்குடி, . திருப்புள்ளமங்கை போன்ற தலங்களாகும். அருந்தவர்களான சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய நால்வரும் பிரமதேவனின் திருக்குமாரர்கள் ஆவர்.

***"சிரமொருநான் கவன்பூசை செய்ததனால் அப்பரனைப்
பிரமலிங்கம் எனஎவரும் பேசுவர்அப் பிஞ்சகனைக்
கரமலர்கூப் பினர்துதித்தோர் காசினியிற் பவம்தீர்ந்து
வரமதுபெற்று இருமையினும் வாழ்வின்மிக வயங்கிடுவார்"***

— திருவோத்தூர்ப் புராணம்.

(சிரமொருநான்கவன்-நான்முகன்-பிரமன்; பிஞ்சகன்-சிவன்; காசினி-பூமி, உலகம்; பவம்- பாவவினை; இருமை-இம்மை, மறுமைப் பிறவிகள்; வயங்கிடுவார்-விளங்கிடுவர்.)

உ
சிவமயம்

சுந்தரமூர்த்தி சுவாமிகள் வரலாற்றுச் சுருக்கம்

திருக்கயிலாயத்தில் சிவபெருமானுக்கு அணுக்கத் தொண்டராய் இருப்பவர் ஆலால சுந்தரர். அவர் மலர்கொய்யும்போது ஒருநாள் இறைவியின் தொண்டு மகளிரான கமலினி, அநிந்திதை என்பார்மேல் மனம் போக்கியதால் பூவுலகில் பிறக்க நேர்ந்தது.

திருமுனைப்பாடி நாட்டில் திருநாவலூரில் ஆதிசைவ மரபில் கி. பி. 807 இல் சடையனார்க்கும், இசைஞானியார்க்கும் மகனாக ஆலால சுந்தரர் அவதரித்தார். பெற்றோர்கள் அவர்க்கு ஆரூரர் என்று பெயரிட்டனர். ஆரூரர் இளம்பருவத்தில் நரசிங்க முனையரையரால் வளர்ப்புப் பிள்ளையாக எடுத்துக் கொள்ளப்பெற்றார்.

திருமணம் நடக்கப் போகும் நேரத்தில் சிவபெருமானால் தடுத்தாட் கொள்ளப் பெற்றார். திருவெண்ணெய் நல்லூர்க் கோயிலில் இறைவன் காட்சியளித்து அடி எடுத்துத்தரப் "பித்தா பிறைசூடி" எனப் பெரிதாம் திருப்பதிகம் பாடினார். திருவதிகையில் சித்தவட மடத்தில் துயிலும் போது இறைவனால் திருவடி சூட்டப்பெற்றார். பின்பு பலதலங்களைப் பணிந்து திருவாரூரை அடைந்தார்.

திருவாரூரில் பரவையாரை மணந்தார். தேவாசிரியன் முன் நின்று அடியார்களை வணங்கித் 'திருத்தொண்டத் தொகை' பாடினார். குண்டையூரில் கிடைத்த நெல்மலையைக் கொண்டுவர ஆட்கள் வேண்டி பதிகம் பாடினார். நாட்டியத்தான்குடியில் கோட்புலியாரின் புதல்வியர்களைத் தம் புதல்வியராகவே கருதி ஏற்றுக் கொண்டார்.

திருப்புகலூரில் செங்கற்கள் பொற்கட்டிகளாக மாறும் பேறு பெற்றார். திருமுதுகுன்றத்தில் பன்னிரண்டாயிரம் பொன் பெற்று மணிமுத்தாற்றில் இட்டுத் திருவாரூர் குளத்தில் மூழ்கி எடுத்தார்.

திருவொற்றியூரை அடைந்து புற்றிடங் கொண்டாரை வழிபட்டு அவ்வூரில் தங்கி இருக்கும்போது "ஒற்றியூரினின்றும் அகலேன்" என்று சபதம் செய்து கொடுத்துச் சங்கிலியாரை மணந்து கொண்டார். ஒருநாள் திருவாரூரை நினைந்து, ஒற்றியூரினின்றும் புறப்பட்டார். சபதம் மீறியதனால் கண் பார்வையை இழந்தார்.

அடியார்கள் வழிகாட்டப் பல பதிகளையும் வணங்கிச் செல்லும்போது திருவெண்பாக்கத்தில் ஊன்றுகோல் பெற்றார். காஞ்சிபுரத்தில் வழிபட்டு இடக்கண் பார்வை மட்டும் பெற்றார். திருவாரூரை அடைந்து "மீளா அடிமை" பாடி வலக்கண் பார்வையைப் பெற்றார். பரவையார் ஊடல் கொண்டிருப்பதை அறிந்து இறைவனையே இருமுறை தூதாக அனுப்பி ஊடலைத் தணிவித்துப் பரவையாரின் மனைக்குச் சென்றார்.

இறைவனைத் தூது அனுப்பியதால் மனம் மாறுபட்ட 'ஏயர்கோன் கலிக்காமரின்' கோபத்தைத் தணிப்பதற்குச் சென்றார். அதற்குள் கலிக்காமர் உயிர் துறக்க, இறையருளால் அவரை உயிர்பெறச் செய்தார்.

சேரமான் பெருமாள் திருவாரூர்க்கு வர ஆரூரர் அவரை வரவேற்று உபசரித்தார். சில நாட்களுக்குப் பின் சேரமானுடன் தாமும் புறப்பட்டுப் பாண்டிநாடு, சோழநாடு, கொங்குநாடுகளில் உள்ள தலங்களை வழிபட்டுப் பதிகம் பாடிக் கொடுங்கோளூரை அடைந்தார். அங்கே சேரமானால் உபசரிக்கப் பெற்றுச் சிலநாள் தங்கிப் பெருநிதி பெற்றார். திரும்பி வரும் வழியில் திருமுருகன் பூண்டிக்கு அருகில் இறைவனருளால் பூதங்கள் வேடர்வடிவாய்ச் சென்று நிதியைக் கவர்ந்தன. 'கொடுகு வெஞ்சிலைப்' பதிகம் பாடி இழந்த நிதியைப் பெற்றார். பின்பு திருவாரூரை அடைந்து சில நாட்கள் தங்கி இருந்தார்.

மீண்டும் மலைநாடு செல்லக் கருதிப் போகும்வழியில் திருஅவிநாசியில் முதலையுண்ட பாலனைப் பதிகம் பாடி வருவித்தார். பின்பு அஞ்சைக்களம் சென்று வழிபட்டு வருகிற நாளில் இறைவன் வெள்ளானை அனுப்ப அதன்மீது ஏறிக் கயிலைக்குப்புறப்பட்டார். சேரமானும் குதிரைமேல் ஏறி உடன்வர ஆரூரர் தமது பதினெட்டாம் வயதில் (கி.பி.825-இல்) ஆடிச்சுவாதி நாளில் கயிலையை அடைந்தார். (சுந்தரர் அருளிய பாடல்கள் ஏழாம் திருமுறையாக வைக்கப் பெற்றுள்ளன.)

சுந்தரர் பாடிய பாடல்கள்	: 1038
பதிகங்கள்	: 100
பதிகம் பெற்ற தலங்கள்	: 94
பொது	: 6
வைப்புத் தலங்கள்	: 38

"..................................

ஆருரன் உரைத்ததமிழ்
சொல்லுதல் கேட்டல் வல்லார்
அவர்க்கும் தமர்க்கும் கிளைக்கும்
எல்லியும் நண்பகலும்
இடர்கூருதல் இல்லையன்றே "

— சுந்தரர்.

(தமர்-வேண்டியவர்; கிளை-உறவினர்; எல்லி-இரவு; கூருதல்-மிகுதல்)

"பித்தர்இறை என்று அறிந்து பேதைபால் தூது அனுப்பு
வித்த தமிழ்ச் சமர்த்தர் மெய்புகழ்வது எந்நாளோ? "

— தாயுமானவர்.

"படியிலா நின்பாட்டில் ஆரூர
நனிவிருப்பன் பரமன் என்பது
அடியனேன் அறிந்தனன்வான் தொழும் ஈசன்
நினைத்தடுத்தாட் கொண்டு மன்றித்
தொடியுலா மென்கைமட மாதர்பால்
நினக்காகத் தூது சென்று
மிடியிலா மனைகள் தொறும் இரந்திட்டும்
உழன்றமையால் விளங்கு மாறே"

– சிவப்பிரகாச சுவாமிகள்.
(நால்வர் நான்மணி மாலை)

"தேன்படிக்கும் அமுதாம்உன் திருப்பாட்டைத் தினந்தோறும்
நான்படிக்கும் போதென்னை நானறியேன் நாஒன்றோ
ஊன்படிக்கும் உளம்படிக்கும் உயிர்படிக்கும் உயிர்க்குயிரும்
தான்படிக்கும் அநுபவங்காண் தனிக்கருணைப் பெருந்தகையே"

– திருஅருட்பா.

திருஞான சம்பந்தரின் பாடல்களைத் திருக்கடைக்காப்பு என்றும், திருநாவுக்கரசரின் பாடல்களைத் தேவாரம் என்றும், சுந்தரரின் பாடல்களைத் திருப்பாட்டு எனவும் வழங்குவது மரபாகும்.

பெருமாள் திருக்கோயில்

சிவன் கோயிலுக்குத் தெற்கிலும், முகப்பு நுழை வாயிலின் மேற்கிலும் பெருமாள் கோயில் அமைந்துள்ளது. நுழைவாயில் தெற்கு நோக்கி உள்ளது. மூலவர் சந்நிதி மேற்கு நோக்கி அமைந்துள்ளது. 135 சதுர அடி பரப்பளவு கொண்ட கருவறையில் பெருமாள் சங்கு, சக்கரம், அபயம், வரதம் ஆகிய நான்கு திருக்கரங்களுடன் நின்ற திருக்கோலத்தில் உயரமான உருவ அமைப்புடன் மிகுந்த அழகுடையவராகக் காட்சி தருகின்றார்.

மூலவராகிய பெருமாள் திருவுருவம், கற்சிலை போன்ற திருவுருவ அமைப்புடனேயே, காண்பவர் கண்களுக்கு எவ்வித மாறுபாடும் தோன்றாதவாறு, அத்தி

மாத்தினால் மிகுந்த கலை நயத்துடன் செய்யப்பட்ட; திருமால் கொண்ட பத்து அவதாரங்களுள் (தெய்வப்பிறப்பு) ஒன்றாகிய மீன் (மச்ச) அவதாரக் கோலத்தில் காட்சி அளிப்பதாகக் காணப்படுகின்றது. இச்சிலை 400 ஆண்டுகளுக்கு உட்பட்டதாகத்தான் இருக்க வேண்டும் எனத் தெரிகின்றது.

இதுபோன்ற அமைப்புடைய மரத்தினால் உருவாக்கப்பட்ட; பெருமாள் திருமேனியின் கீழ்ப்பகுதி மீன் உருவில் காட்சியளிக்கும், திருவுருவச் சிலை தமிழ்நாட்டில் வேறு எங்கும் இருப்பதாகத் தெரியவில்லை. இது இக்கோயிலுக்கு உள்ள தனிச்சிறப்பு அம்சம் ஆகும். இக்காட்சி பெருமை மிகுந்த தனிச் சிறப்புடையதாக அமைந்துள்ளது. இப்பெருமாள் திருமேனிக்கு எண்ணெய் காப்பு மட்டும் இடப்படுகின்றது. அபிடேகம் செய்யப்படுவதில்லை.

பெருமாளின் பெயர் 'அழகப்பெருமாள்' எனவும், 'ஸ்ரீ கரண விண்ணகர எம்பெருமான்' எனவும் கல்வெட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது. சௌந்தர்யப் பெருமாள் என்று தற்போது வழங்கப்படுகின்றார். அருகில் இருபுறமும் திருமகள் (அ) இலக்குமி (ஸ்ரீதேவி); நிலமகள் (அ) பூமிநாச்சியார் (பூதேவி) தாயர் காட்சி தருகின்றனர். அருள்தரும் காட்சி, கருணை பொழியும் கண்கள், அடைக்கலமும், வேண்டிய வரமும் தந்து காக்கும் திருக்கரங்கள் கொண்ட உருவ அமைப்புடன் பார்க்கப் பார்க்க களிப்பினைத் தருவதாக அமைந்திருக்கின்றது.

பெருமாள் உருவத்துக்குத் தக்கபடி அவர்களின் திருமேனிகளும் உயரமாக அமைந்துள்ளன. பெருமாளுக்கு முன்னர் சிறிய வடிவில் சௌந்தர்ய வரதராசப் பெருமாள் சிலை அமைந்திருக்கின்றது இச் சிலைக்குத்தான் அபிடேகம் செய்யப்படுகின்றது.

இச்சிலை பிற்காலத்தில் அமைக்கப் பட்டிருக்கலாம் எனத் தெரிகின்றது.

அடித்தளத்திலிருந்து கூரைப்பகுதி வரை 11 அடி உயரத்திற்குக் கருங்கல்லாலும் அதன் மேல் சுதையால் ஆன இருதள (கருவரைக்குமேல்) 25 அடி உயரம் கொண்ட விமானம் உள்ளது. கருவறைக்கு முன் அர்த்த மண்டபம் அமைந்துள்ளது. அதன் முன் மகா மண்டபம் உள்ளது. இம்மண்டபத்தின் சுற்றுச் சுவர்கள் கருங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளம் கருங்கல்லால் ஆனது.

அதில் விநாயகர் (தும்பிக்கை ஆழ்வார்), விஷ்ணு சேனர், யோக நரசிம்மர், நாகபாசம் ஆகிய சிலைகள் அமைக்கப்பட்டுள்ளன. முன் மண்டபம் கல் தூண்களை உள்ளடக்கிய சுவர் செங்கற்களால் அமைக்கப்பட்டுள்ளது. அடித்தளம் செங்கல் கப்பியிட்ட காரையால் ஆனது. முன் மண்டபத்தில் பலிபீடம், கருடாழ்வார், ஆஞ்சநேயர் சிலைகள் உள்ளன. நுழைவாயிலின் இரு புறமும் திண்ணைகள் அமைக்கப் பட்டுள்ளன. கருவறை சுற்றுப்புறச் சுவர்களில் மிகுந்த கலை நயத்துடன் கூடிய சிற்ப வேலைப்பாடுகள் காண்போர் கண்ணைக் கவரும் வகையில் காணப்படுகின்றன. கருவறை சுவர்களில் மூன்று தேவ கோட்டங்களும், நடு மண்டபத்தில் இரண்டு தேவ கோட்டங்களும் அமைந்துள்ளன. இவற்றில் சிற்பம் ஏதும் இல்லை.

நித்திய பூசை

அரசாங்கத்தால் ஏற்படுத்தப்பட்ட நித்திய ஒரு கால பூசை அறக்கட்டளை நிதி உதவித் திட்டத்தின் மூலம் தினமும் ஒரு கால பூசை நடைபெற்று வருகின்றது. கோயிலுக்காக வேறு எந்த வருவாயும் இருப்பதாகத் தெரியவில்லை.

விழாக்கள்

ஒவ்வொரு ஆண்டும் வைகாசி மாத விசாக நட்சத்திரத்தன்று நடைபெற்று வந்த கருட சேவை விழா கடந்த 30 ஆண்டுகளாக நடைபெறவில்லை. வேறு எந்த விழாவும் தற்போது நடைபெறுவதில்லை.

அபிடேக நீர்க்கிணறு

பெருமாள் கோயில் திருமேனிகளுக்கு அபிடேக நீர் எடுக்கத் தனியாகக் கோயிலின் தெற்கில் ஒரு கிணறு உள்ளது. ஆனால் அது தற்போது பயன்பாட்டில் இல்லை.

கல்வெட்டுகள்

மன்னர்கள் காலத்தில் கட்டப்பட்ட பழமையான திருக்கோயில்களில் கல்வெட்டுகள் பல உள்ளன. அவற்றிலிருந்து கோயில் தோன்றிய காலம், கோயில் பற்றிய வரலாறு, கோயிலுக்கு அளிக்கப்பட்ட தானங்கள், கோயில் நிர்வாகம் ஆகியன பற்றிய தகவல்களை தெரிந்து கொள்ள முடிகிறது.

அக்கால மக்களின் வரலாறு, நாகரிகம், கலை, சமயம், பண்பாடு, பழக்க வழக்கங்கள், கிராம சபை, ஆட்சி நிர்வாகம், ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை, நாட்டு எல்லைகள், உட்பிரிவுகள் முதலியனவற்றையும், கோயில்கள் மக்களுக்குப் பயன்பட்ட முறை, அவற்றால் ஏற்பட்ட நன்மைகள், விழாக்கள் நடத்தப்பட்டதன் விவரங்கள் ஆகியன பற்றித் தெரிவிக்கும் வரலாற்றுச் சான்றுகளாக, சின்னங்களாக, காலக் கண்ணாடிகளாக, கலைப் பெட்டகங்களாக கல்வெட்டுகள் திகழ்கின்றன.

மனிதன் மறதிகளையும், நினைவுகளையும் முற்காலத்தில் காப்பாற்றித் தந்தவைகள் ஓலையும், உலோகமும் (செப்பேடுகள்), கல்லுமேயாகும். இவை வரலாற்றுப் பதிவேடுகளாகக் கருதப்படுகின்றன.

அவ்வகையில் இவ்வூர் கோயில்கள் இரண்டிலும் கல்வெட்டுகள் பல உள்ளன. அவற்றின் மூலம் பல தகவல்கள் நமக்குத் தெரிய வருகிறது. அவற்றுக்கு எவ்வித சேதமும், பழுதும் ஏற்படாமல் பாதுகாக்க வேண்டியது நம்முடைய பொறுப்பும் கடமையுமாகும்.

சிவன் கோயிலின் உள்சுவர்களிலும், வெளியிலும், வாயிற்படிகளிலும் தரைப் பகுதியிலும் மற்றும் பெருமாள் கோயில் வாயில் படிகள், உள் வெளி சுவர்களிலும், கோயிலுக்கு வெளியில் இரு கற்பலகைகளிலும் பல கல்வெட்டுகள் உள்ளன. அவற்றிலிருந்து பல மன்னர்கள் காலத்திலும் மற்றும் தனிப்பட்ட கருணையாளர்களும் வழங்கிய நன்கொடைகளின் விவரங்களும், ஊரைப்பற்றிய தகவல்களும், கோயிலைப் பற்றிய விவரமும் காணக் கிடைக்கின்றது.

பல்லவர், சோழர், பாண்டியர், சாளுக்கியர், இராட்டிரகூடர், விசயநகர ஆட்சியாளர், சம்புவராயர்கள் ஆகியோர் ஆட்சிக் காலங்களில் வழங்கிய கொடைகள், கோயில் கட்டுமானப் பணிகள் நடந்தது பற்றிய தகவல்கள் ஆகியன பற்றி அவற்றின் மூலம் நாம் தெரிந்து கொள்ள முடிகின்றது.

உ
சிவமயம்

பராசரேசுவரர் திருக்கோயிலில் உள்ள கல்வெட்டுகள்

(1928-29 ஆம் ஆண்டு அரசின் கல்வெட்டுத் துறையினரால் படி எடுக்கப்பட்டதன் நகல்)
கல்வெட்டு எண் : 401 முதல் 414 முடிய

1. கோயிலின் வடக்கு சுவரில் உள்ளவை.

விசயநகர ஆட்சி - அரியண உடையார் மகன் விருப்பண உடையார் ஆட்சிக் காலம்.

சக ஆண்டு 1305. உருத்ரோத்காரி ஆண்டு மகர இலக்கினம், பிரதமை திதி, புதன்கிழமை, சித்திரை நட்சத்திரம்.

(கி. பி. 1383)

ஜெயங்கொண்ட சோழமண்டலம், வெண்குன்றம் கோட்டம்(மாவட்டம்) சார்ந்த, பொன்னூர் நாட்டில் உள்ள பொன்னூர் பராசரேசுவரம் உடைய நாயனார் கோயிலில், சிறு புள்ளூர் உத்தம நம்பி கருஞ்சிருட்ட நயினார் என்பவரால் அமைக்கப்பட்ட மகாகணபதிக்கு நைவேதியம், மற்றும் வழிபாடுகளுக்காக பொன்னூர் கிராம சபையால் வரி விலக்கு அளிக்கப்பட்ட நிலதானம் பற்றி குறிப்பிட்டுள்ளது.

2. அதே சுவரில் உள்ளது.

சோழர் ஆட்சிக் காலம் - திரிபுவனச் சக்கரவர்த்தி குலோத்துங்க சோழ தேவர் ஆட்சியின் 19-ஆம் ஆண்டுக் காலம்.

(கி. பி. 1197)

திருவிழா நாட்களில் பொன்னூர் கோயில் மூலவரான திருப்பிரமீசுவரம் உடைய நாயனார் ஊர்வலம் நடத்துவதற்காக நிலதானம் அளித்தது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. (கல்வெட்டு முழுமை பெறவில்லை)

3. கோயிலின் வடக்கு, மேற்கு மற்றும் தெற்குப்புறச் சுவர்களில் உள்ளவை.

விசயநகர ஆட்சிக் காலம் - மகா மண்டலேசுவர சதாசிவ தேவ மகாராயர்.

சக ஆண்டு 1481, ஆனந்த வருடம், துலா இலக்கினம், தசமி திதி, திங்கட்கிழமை, சிரவண (திருவோண) நட்சத்திரம்.

(கி. பி. 1554)

சிந்தவனபூண்டி என்னும் கிராமத்தை, மடப்புறமாகத் தவறாகச்சேர்த்ததை வெங்கடப்ப இரெட்டியார் விசாரணை செய்து; அந்த கிராமத்தை 2:1 என்ற விகிதத்தில் செவ்வலிநாத குருக்களுக்கும், திருப்பிரமீசுரம் உடைய நாயனார் சுவாமிக்கும் பிரித்து அளிக்கப்பட்டதை, சந்திரகிரியைச் சார்ந்த எர்ரம்ம திம்ம இராசாவுக்கு எடுத்துக் கூறியதைப் பற்றிய தகவல் குறிப்பிடப்பட்டுள்ளது.

4. அக்கோயிலின் தெற்கு சுவரில் உள்ளது

விசயநகர ஆட்சிக் காலம் - வெங்கடபதி தேவ மகாராசர்.

சக ஆண்டு 1719. கர வருடம், மகர இலக்கினம், தசமி திதி, திருவோண நட்சத்திரம், திங்கட்கிழமை, சங்கராந்தி.

(கி. பி. 1797)

திருப்பிரமீசுவரம் உடைய நாயனார் கோயிலில் பஞ்ச கவ்வியம் வழங்குவதற்கு; பொம்மு நாயக்கராயன், வேலு நாயக்கர் நற்குணங்களுக்காக சில குறிப்பிட்ட நபர்கள் தர வேண்டிய வரிபாக்கியை, கோயிலுக்கு பயன்படுத்திக் கொள்ள வந்தவாசியைச் சேர்ந்த வெங்கலப்ப நாயக்கராயன் மற்றும் அயம் கோணப்ப நாயக்கர் அவர்களால் ஒதுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

5. அதே சுவரில்

மகா மண்டபம் கட்டுவதற்காக கச்சி ஏகம்பன் என்பவருடைய மகன் ஆண்டப்பிள்ளை, சோளிங்க தேவர் 20 கலம் நெல் மற்றும் 50 பணமும் கொடுத்ததற்காக மகாதராயர் அனுபவிக்கும் சிறப்பு உரிமைகளை அனுபவிக்கத் தகுதி உடையவராக ஆகிறார் என்று குறிக்கப்பட்டுள்ளது.

6. அதே சுவரில்

சோழர் ஆட்சிக்காலம் - இராசஇராசதேவன் 23-ஆம் ஆண்டு ஆட்சிக் காலம்

(கி. பி. 1239)

பொன்னூர் நாட்டாண்மைக்காரர் ஆளும் பிரான் விரிருந்தன் கொடுத்த தானங்களைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

7. கோயிலின் நடுவில் உள்ள மண்டபத்தின் முன் ப்க்க தெற்குச் சுவரில் உள்ளது

விசய நகர ஆட்சி

அரியண்ண உடையார் மகன் விருப்பண்ண உடையார்.

சக ஆண்டு 1305, உருத்ரோத்காரி ,வருடம் கும்ப இலக்கினம், அஷ்டமி திதி, திங்கட்கிழமை, உரோகிணி நட்சத்திரம்.

(கி. பி. 1383)

பொன்னூரில் உள்ள பராசலேசுரம் உடைய நாயனார் கோயிலில் உருத்திரமூர்த்தி, மகேசுவரர் சிலைகள் அமைந்துள்ள செங்கற்களாலான மகா மண்டபத்தை மாற்றி, கருங்கற்களால் கட்டுவதற்கு மகாதராயர் என்ற அக்கிராம கைக்கோளருக்கு குறிப்பிட்ட சிறப்பு உரிமைகளுடன் நிலம் விற்பனை செய்வது பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

8. அதே சுவரில்

விசய நகர ஆட்சி - பொக்கண்ண உடையார் மகன் பெரியபுலியயராயர்.

பல நபர்கள் கொடுத்த நன்கொடைகள் மூலம் மேற்குறிப்பிட்ட மகாமண்டபம் கட்டுவது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (கல்வெட்டு முழுமை பெறவில்லை)

9. அதே சுவரில்

விசயநகர ஆட்சி - கிருஷ்ண தேவ மகாராயர்

சக ஆண்டு *1499* சித்திரபானு வருடம், கன்னிராசி, தசமி திதி, ரேவதி நட்சத்திரம், வெள்ளிக்கிழமை

(கி. பி. 1523)

கிருஷ்ண தேவராயரை சிறப்பிக்கும் வகையில் உத்திராயண துவாதசி தினத்தன்று, மகாமண்டலேசுவர கோனேரி தேவமகாராசாவுக்காக கிருஷ்ணப்பா மற்றும் சிலரால் பராசரேசுவரம் உடைய நாயனார் கோயிலுக்கு

அளித்த சர்வமான்ய நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

10. அதே மண்டபத்தில் உள்ள தூண்களுள் ஒன்றில் உள்ளது.

இராட்டிர கூடர் (அரசு) ஆட்சி - கன்னரதேவர் ஆட்சியின் 17ஆம் ஆண்டு ஆட்சிக் காலம் (கி. பி. 956)

திருப்பிரமீசுவரம் உடையார் கோயிலுக்காக அம்ம தேவி கொடுத்த வரிவிலக்கு அளிக்கப்பட்ட நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. அதே மண்டபத்தில் உள்ள கீழ் கல் தளத்தில் 600 குழி சர்வமானிய நிலதானம் பற்றி பூர்த்தி அடையாத கல்வெட்டு உள்ளது.

11. கோயில் நடுவில் உள்ள நுழைவாயில் தூணில் உள்ளது.

திருவோத்துருடையான் பரமேசுவரபட்டன், மற்றும் பரமேசுவரபட்டன் இருள் நீக்கினான் பெயர்கள் குறிக்கப்பட்டுள்ளது.

12. அக்கோயிலின் சுற்றுச்சுவரைத் தாங்கியுள்ள கல்தூணில் உள்ளவை.

பாண்டியர் ஆட்சி - சடாவர்மன் என்னும் திரிபுவனச் சக்ரவர்த்தி சுந்தரபாண்டிய தேவன் ஆட்சிக் காலத்தின் 12-ஆம் ஆண்டு

(கி. பி. 1263)

ஸ்ரீ கரண விண்ணகர எம்பெருமான் கோயிலுக்காக பொன்னூரில் உள்ள 'ஊரர்' கொடுத்த வரிவிலக்கு அளித்த நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

13. கோயில் முகப்பு நுழைவாயிலின் (தென்புற மதில் சுவரின் வெளியில்) மேற்கில் உள்ள கற்பலகையில் உள்ளது.

பாண்டியர் ஆட்சி - திரிபுவனச் சக்ரவர்த்தி வீரபாண்டியத் தேவர் ஆட்சிக் கால 4-ஆம் ஆண்டு கார்த்திகை மாதம்.

கி. பி. 1257

பராசுலேசுரம் உடைய நாயனார் கோயிலுக்கு உண்டான நிலங்களில் மாளுவச் சக்ரவர்த்தியின் உதவியாளரான பிள்ளை ஆலவாய் உகந்தார் மற்றும் பொன்னூர் பகுதி நாட்டவர்கள் விதித்த வரிக்கு, விலக்கு அளித்தது பற்றிக் குறிப்பிட்டுள்ளது.

14. அக்கோயிலின் தோட்டத்திற்கு அருகில் உள்ள (கிழக்கு மதில் சுவரின் வெளியில் அமைந்துள்ள) கற்பலகையில் உள்ளது.

சாளுக்கியர் ஆட்சிக் காலம் - நரசிங்க தேவ மகாராயர்.

சக ஆண்டு, 1412, சாதாரண வருடம், மகர லக்கினம், பஞ்சமி திதி, உத்திரட்டாதி நட்சத்திரம், வெள்ளிக்கிழமை

(கி.பி.1490)

திம்மராச உடையார் அக்கால தேவமகாராசர்களின் சிறப்பு பற்றியும், பொன்னூரில் உள்ள திருப்பிரமீசுரம் உடையார் கோயிலில் அமைந்திருக்கும், மடவிளாகம் பகுதியில் உள்ள கோவிந்தராச பெருந்தரவுக்கு, அவ்வூர் நெசவாளர்கள் செலுத்த வேண்டிய வரிகளை செலுத்தித் தீர்த்தது பற்றியும் குறிக்கப்பட்டுள்ளது.

உ

ஸ்ரீ ராமஜெயம்

அழகப் பெருமாள் கோயிலில் உள்ள கல்வெட்டுக்கள்

(1928-29 ஆம் ஆண்டு அரசின் கல்வெட்டுத் துறையினரால் படி எடுக்கப்பட்டதன் நகல்)

கல்வெட்டு எண் 391 முதல் 400 முடிய

1. பொன்னூர் – அழகப்பெருமாள் கோயிலில் உள்ள முகப்பு வாயில் படியின் இடப்புறம் அமைந்துள்ளது.

பாண்டியர் ஆட்சி - மாறவர்மன் என்கிற திரிபுவனச் சக்கரவர்த்தி விக்கிரம பாண்டிய தேவன். ஆட்சிக்கால 07-ஆம் ஆண்டு மாசி மாதம்

(கி. பி. 1290)

ஸ்ரீ கரண விண்ணகர் எம்பெருமான் திருக்கோயிலின் நைவேத்தியத்துக்காகவும்; கோயிலின் திருப்பணி செலவுக்காகவும் கோயில் நிலங்களில் உள்ள வீடுகளுக்கு வரித்தள்ளுபடி செய்யப்பட்டு அத்தொகை மேற்கண்ட செலவுகளுக்காக ஒதுக்கிட விதர்பண சபையில் தீர்மானிக்கப்பட்டது பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

2. அதே வாயிலின் வலதுபுற நிலைப்படியில் உள்ளது

பல்லவர் ஆட்சி - காடவன் கோப்பெருஞ்சிங்க தேவன் ஆட்சியின் 21ஆம் ஆண்டு தை மாதம்.

(கி. பி. 1263)

பொன்னூர் என வழங்கும், 'அழகிய சோழ நல்லூரில்' வசித்த சோரப்பிள்ளை என்பவர் கொடுத்த தானத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. (கல்வெட்டின் மத்திய பகுதி பழுதுபட்டுள்ளது)

3. அக்கோயில் தென்புறச் சுவரில் உள்ளது.

விசய நகர ஆட்சி - மகாமண்டலேசுவர கிருஷ்ண தேவ மகாராயர்.

சக ஆண்டு 1499, சுபானு வருடம், கன்னியா இலக்கினம், தசமி திதி, இரேவதி நட்சத்திரம், வெள்ளிக்கிழமை.

(கி. பி. 1523)

இக்கல்வெட்டு முழுமை பெறாமல் மேற்கண்ட விவரங்களுடன் முடிக்கப்பட்டுள்ளது.

4. தென்புற சுவரில் உள்ளது

விசயநகர ஆட்சி - போக்கண உடையார் மகன் திருமலை உடையார்

இக்கோயிலில் சந்திர கிரகணத்தின்போது விளக்கு எரிக்கவும், நைவேத்திய செலவுக்காகவும், வண்ணகம்பாடி என்ற கிராமத்தை தானமாகக் கொடுத்தது பற்றிய தகவல் பொறிக்கப்பட்டுள்ளது.

5. அதே சுவரில் உள்ளது.

விசய நகர ஆட்சி - கம்பன உடையார்

ஆனந்த வருடம், சித்திரை மாதம் 15-ஆம் நாள்

(கி.பி.1374)

இக்கோயிலில் விளக்கு எரிக்க இலக்கும இரெட்டியாரால் கொடுக்கப்பட்ட நிலதானம் மற்றும் வரி விலக்குகள் பற்றிப் பொறிக்கப்பட்டுள்ளது.

6. இக்கோயிலின் கிழக்குப் புற சுவரில் உள்ளது.

பரிதாபி ஆண்டு ·தை மாதம் 30 ஆம் நாள்

இக்கோயிலில் விளக்கு எரிக்க ஆளும் பிள்ளை வில்வராயர் என்ற பொன்னூர் தலைவரால் கொடுக்கப்பட்ட நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

7. அதே சுவரில்

சகலலோக சக்கரவர்த்தி இராஜநாராயண சம்புவராயர் ஆட்சிக்கால 3-ஆம் ஆண்டு, ஆடி மாதம்.

(கி. பி. 1340)

இக்கோயிலில் ஒரு விளக்கு எரிக்க தொண்டை மண்டல தியாகராய முதலி பரம்பரையைச் சார்ந்த பெரும்புதூர் வீரசம்பட்டபடியராயரால் கொடுக்கப்பட்ட நில தானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

8. அதே சுவரில்

சம்புவராயர் காலம் - சகலலோக சக்ரவர்த்தி வென்று மண்கொண்ட சம்புவராயரின் ஆட்சிக்காலம் 14-ஆம் ஆண்டு ஆடி மாதம்

(கி. பி. 1336)

இக்கோயிலில் புண்ணிய விளக்கு எரிய செம்பிதரய்யர் பெருமாள் பிள்ளை என்ற பொன்னூர் தலைவரால் கொடுக்கப்பட்ட நிலதானம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

9. இக்கோயிலின் வடக்கு சுவரில் உள்ளது

பொன்னூர் ஏரியின் வடக்குப் புறம் உள்ள மதகு, திருவண்ணாமலைப் பெருமாள் - சம்பந்தாண்டார் என்ற பொன்னூர் தலைவரால் கட்டப்பட்டதாக குறிக்கப்பட்டுள்ளது.

10. அதே சுவரில்

அட்சய வருடம், ஆடி மாதம், 2-ஆம் நாள்

வந்தவாசியில் உள்ள கொப்ப நாயகரின் உதவியாளர் எல்லப்ப நாயகர் என்பவரால் விளக்கு எரிக்க ஏற்பாடு செய்யப்பட்டது பற்றி பொறிக்கப்பட்டுள்ளது. (கல்வெட்டு முழுமை பெறவில்லை)

சிவத்தலத்தைப் பற்றிய வெளியீடுகள்

இத்தலத்தைப் பற்றிய செய்திகள் கொண்ட இரு வெளியீடுகள் உள்ளன. 1994-ஆம் ஆண்டு தருமபுரம் ஆதீனத்தால் "தலச் சிறப்புகளும் தேவாரமும்" என்னும் தலைப்பில் ஐந்து ஊர்களின் சிறப்பு பற்றி ஒரு சிறு நூல் வெளியிடப்பட்டுள்ளது. (வெளியீடு எண் - 970) அதன் ஒரு பகுதியில் பொன்னூர் சிவத்தலத்தைப் பற்றி இரு பக்க அளவில் சுருக்கமாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. அதீனத்தைச் சார்ந்த குழுவினர் 10.04.1995 அன்று இக்கோயிலுக்கு வந்து வழிபாடு செய்துவிட்டுச் சென்றுள்ளனர்.

'சிவமஞ்சரி' என்னும் நூல் வரிசையில் பல தொகுதிகளை வெளியிட்டு சைவ சமயத்தைப் பரப்பி வரும் சிவநேயச் செல்வர் பூசை ச. அருணவசந்தன் அவர்கள் (சென்னை) இத்தலத்துச் சிவபெருமானை, பிரமன் வழிபட்ட செய்தியினை, பிரமன் வழிபட்ட தலங்களில் 'பொன்னூர்' ஒன்றாகும் என்று சிவமஞ்சரி நூலின் 26வது மலரில் ஒரு சிறு குறிப்பாக வெளியிட்டுள்ளார்.

நிர்வாகம்

இத்தலங்கள் இரண்டும் இந்து சமய அறநிலையத் துறையின் பராமரிப்பின் கீழ் உள்ளது. அறங்காவல் குழுக்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு கோயில் நடைமுறைகளை அவர்கள் கவனித்துக் கொள்கின்றனர்.

தலங்களின் தற்போதைய நிலை

பாடல் பெற்ற பழமையான சிவத்தலமான இத்திருக்கோயில் கடந்த சில நூறு ஆண்டுகளாக கவனிப்பார் இன்றி பழுதுபார்க்கப்படர்மல் உள்ளதால் புயல் மழை ஆகியவற்றின் தாக்குதல்களினால் மரம் செடி கொடிகள் முளைத்து வேரூன்றத் தொடங்கின. அதனால் ஏற்பட்ட வெடிப்புகளினால் சுவர்களில் உள்ள கற்கள் இடம் பெயர்ந்து சரியத் தொடங்கின. அதனால் சுவர்களில் சிதைவு ஏற்பட்டும், சில இடங்களில் இடிபாடு அடைந்தும் மேல் தளக் கற்கள் உடைந்தும் காணப்படுகின்றது. கருவறை விமானம், மண்டபங்கள், மதில் சுவர், கிணறுகள், குளம், அம்மன் சந்நிதி ஆகியனவும்; பெருமாள் சந்நிதி சுவர்கள், விமானம், மண்டபங்கள் ஆகிய இடங்களும் சீரமைக்கப்பட வேண்டியுள்ளது.

கோயிலின் வெளிப்பகுதியில் அமைந்திருந்த சந்நிதிகளோ (சுற்றாலயங்கள்) அல்லது மண்டபங்களோ இடிபாடு அடைந்து, அதன் வேலைப்பாடு அமைந்த தூண்கள் மற்றும் கோயில் பகுதிகளின் பல கற்கள் ஆங்காங்கே சிதறிக் கிடக்கின்றன.

பராமரிப்பின் அவசியம்

பல்வேறு அரசர்களின் காலங்களில் திருப்பணிகளும், பல வகையான உதவிகளும் செய்யப்பட்டு சிறந்த நிலையில் பராமரிக்கப்பட்டு வந்த இக்கோயில்களை புதுப்பிக்க வேண்டியது அனைவரின் கடமையாகும். அக்கால மன்னர்களும், அப்போதிருந்த

பொதுமக்களும் திருப்பணி செய்தும், நன்கொடை அளித்தும் பராமரித்தும் கட்டிக் காத்த கலைச்செல்வமான இக்கோயில்களை அவர்களுக்கு நன்றி செலுத்தும் வகையிலும், வருங்கால சந்ததியினருக்கு பழைமையாக இருந்த நன்னிலையில் விட்டுச் செல்ல வேண்டியதும் இக்கால மக்களின் பொறுப்பல்லவா?

கோயில்களைப் புதுப்பிப்போர் பெறும் பயன்

"மாதவர் மடங்களாதி வரதன் மந்திரங்களாதி
நாதமாம் இலிங்கமாதி நளின புட்கரணியாதிச்
சேதமுற்றிடின் முன்போல் செய்பவர்க்குறு பலன்தான்
ஓதுமுன் செய்தோர் தம்மில் ஆயிரம்குணிதம் ஓங்கும்"

— சிவபுண்ணியத் தெளிவு.

(குணிதம் - எண்பெருக்கம், மடங்கு, பங்கு)

"முரிந்து வீழ்ந்தன வெடித்தன உடைந்தன முதிய
நெரிந்த வாசிய கோபுரம் நெடுமதில் பிறவும்
தெரிந்து முன்னையிற் சீர்பெறப் புதுக்குவோர் பண்டு
புரிந்து ளோர்பெறும் புண்ணியம் நான்மடங்குறுவர்".

— காஞ்சிப்புராணம்.

"புல்லினால் வ்ருடங்கோடி புது-மண்ணால் பத்துக்-கோடி
துல்லிய செங்கல்லாலே செய்தபேர் நூறுகோடி
அல்லியங் கோதை பாகற்கு ஆலய மடாலயங்கள்
கல்லினாற் செய்தபேர்கள் கைலை விட்டகலார் தாமே".

"யாவனொரு பணிவிடையை ஆலயத்தில்
இழைக்கின்றானோ, அவனுக்கு எந்தப்
பாவ வினைகளும் நசிக்கும் பாக்கிய
-மெல்லாம் அவற்கே பல்கும்".

— கச்சியப்ப முனிவர்.

(நசிக்கும்-அழியும்; பல்கும்-பெருகும்)

பழுதடைந்துள்ள பழமையான கோயில்களின் பல பகுதிகளையும் பழுது பார்த்துப் புதுப்பிப்பவர்கள், ஆதியில் கோயிலை உருவாக்கியவர்கள் அடைந்த சிவ புண்ணியத்தை விட பலமடங்கு புண்ணியத்தைப் பெறுவார்கள் என்பது இப்பாடல்களால் நமக்கு விளங்குகின்றது.

குடமுழுக்கு

பொதுவாகத் திருத்தலங்களுக்கு பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை குடமுழுக்கு (கும்பாபிடேகம்) செய்யப்பட வேண்டும் என்பது ஆகம விதி. அப்போதுதான் கோயில் புதுப்பிக்கப்படும் வாய்ப்பு ஏற்படும். மக்களும் கோயில் மீது கவனமும் ஆர்வமும் கொண்டு வழிபாடு செய்யச் சென்று வருவர். மூர்த்திகரமும் அதிகரிக்கும்.

சுமார் 60 ஆண்டுகளுக்கு முன் இத்திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு விழா நடந்திருக்கலாம் எனத் தெரிகிறது. திருப்பணி செய்து கோயில்களைப் புதுப்பித்து குடமுழுக்கு விழா செய்ய வேண்டுவது மிகவும் அவசியமாகும்.

பிற தலங்கள்

ஆறுவழிகள் ஒன்று சேரும் இடமாகிய 'திக்காறு' (திக்கு+ஆறு) என வழங்கப்பட்ட பகுதியில் மிகப் பழைமையான அம்மன் கோயில் அமைந்துள்ளது. (தற்போது பேருந்து நிறுத்தும் இடமாக உள்ள பகுதி). சுப்பிரமணியர் ஆலயமும், அருகர் ஆலயமும் பல விநாயகர் மற்றும் அம்மன் சிற்றாலயங்களும் உள்ளன.

திசை லிங்கங்கள்

எட்டுத் திக்குப் பாலகர்கள் எனப்படுவோர் இந்திரன், அக்னி, எமன், நிருதி, வாயு, வருணன், குபேரன், ஈசானன் ஆகியோர் ஆவர். இவர்கள் திசைகளைத் தாங்கி வருவதாக ஐதீகம்.

இவர்கள் எட்டுப் பேரும் வைத்து வணங்கிய எட்டு இலிங்கங்களும் இவர்கள் பெயரால் எட்டுத் திக்குகளிலும் அமைந்திருக்கும். இவற்றுக்கு திசை இலிங்கங்கள் அல்லது திக்கு இலிங்கங்கள் எனப்பெயர் வழங்குகிறது.

அதுபோன்று இவ்வூரைச் சுற்றிலும் எட்டுத் திசைகளிலும் எட்டு இலிங்கங்கள் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. இவை யாவும் கோயில்கள் கட்டி அமைக்கப்பட்டிருந்தனவா என்பது தெரியவில்லை. தற்போது இவைகள் வெட்ட வெளியிலேயே காணப்படுகின்றன. பல நூறு ஆண்டுகளானமையால் சில இலிங்கங்கள் மண்மேடிட்டுப் புதைந்தோ அல்லது அகற்றப்பட்டோ காணாமல் போயுள்ளன.

ஊரின் கிழக்குத் திசையில் இந்திர இலிங்கம், வந்தவாசி செல்லும் சாலையின் தென்புறம், 'இலிங்கத்துக் குட்டை' எனப்படும் நீர் நிலையின் மேற்குக் கரையில் உள்ளது. இதற்கு மட்டும் தனிப்பட்டவர்களின் வேண்டுதல் நிறைவேறிய பின்பும், நிறைவேற்றத்துக்காகவும் அபிடேக ஆராதனை செய்யப்படுகின்றது.

தென் கிழக்குத் திசையில் அக்னி இலிங்கம் இவ்வூருக்கு அண்மையில் உள்ள 'நல்லேரி' கிராமத்தில் ஒரு கிணற்றின் கரையில் அமைந்துள்ளது. இதற்கு ஆண்டுக்கு ஓரிரு முறை அபிடேக ஆராதனை நடைபெறுகின்றது.

தெற்குத் திசையில் இயமலிங்கம் பொன்னூரிலிருந்து ஒரு கி. மீ தூரத்தில் தேசூர் செல்லும் சாலையில், சாலையின் கிழக்கில் சுமார் 75 மீட்டர் தூரத்தில் உள்ள விளை நிலத்தின் மத்தியில் ஒரு மேடான திட்டுப்பகுதியில்

அமைந்துள்ளது. கோமுகம் மட்டும் பழுதுபட்ட நிலையில் உள்ளது.

தென்மேற்குத் திசையில் நிருதி இலிங்கம் கோபுரங்குளம் என அழைக்கப்படும் குளக்கரைக்கு மேற்கில் இருந்துள்ளது.

மேற்குத் திசையில் வருண இலிங்கம், ஜெயினர் குளத்துக்குச் செல்லும் பாதையின் வடக்குப் புறத்தில், பாதையிலிருந்து 50 மீட்டர் தூரத்தில் அமைந்திருந்ததாகத் தெரிகிறது. ஆனால் தற்போது அங்கு பலிபீடம் மட்டுமே காட்சியளிக்கின்றது. இலிங்கம் காணப்படவில்லை.

வடமேற்குத் திசையில் வாயுலிங்கம் சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்புவரை இருந்ததாகவும் அது இப்போது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை என்றும் ஒரு பெரியவர் கூறுகின்றார்.

வடக்குத் திசையில் குபேர இலிங்கம் பொன்னூரிலிருந்து 'வங்காரம்' கிராமம் செல்லும் சாலை அருகில் இளந்தோப்பு என்னும் இடத்தின் மேற்கில் அமைந்திருந்ததாகச் செவி வழிச் செய்தி கூறுகின்றது. இலிங்கம் தற்போது காணப்படவில்லை.

வடகிழக்குத் திசையில் ஈசானிய இலிங்கம் 'குப்பம் கிராமத்துக்குச் செல்லும் வழியில் ஒரு குளத்துக்கு அருகில் இருந்த இலிங்கம் தற்போது பாணமும், ஆவுடையாரும் பிரிக்கப்பட்டு தனித்தனி இடத்தில் காணப்படுகின்றது.

பெரிய ஆலயங்களிலும், புகழ் மிக்க ஊர்களிலும் இதுபோன்ற அமைப்பு காணப்படும். இதிலிருந்து இவ்வூரும், சிவத்தலமும் அக்காலத்தில் மிகவும் சிறப்புற்றிருந்தமை விளங்குகின்றது.

மன்னர்களும் மாமனிதர்களும் திருக்கோயில்களைக் கட்டியதன் நோக்கம்.

அக்கால மன்னர்கள், காலத்தால் அழியாதிருக்க கருங்கற்களால் நாடெங்கும் கோயில்களைக் கட்டினர். கலை உணர்வும், அழகுணர்ச்சி நிரம்பியவர்களாகவும், புராண வரலாறுகளையும், அத்தல வரலாறு பற்றிய செய்திகளையும் விளக்குவனவாக பல கலைப் படைப்புகளையும், சிற்பங்களையும் (கல்லினாலும், சுதையினாலும்) கோயில்களின் பல இடங்களிலும் படைத்தளித்தனர். (கோபுரம், விமானம், தூண்கள், சுவர்கள் போன்ற பல இடங்கள்)

அவைகளைக் காண்பவர்களின் மனம் இறை உணர்வை நாடிச் செல்லும். மக்களிடையே இறை நாட்டத்தைத் தூண்டும். இறை வழிபாட்டை வளர்த்து அதனால் அவர்கள் மனம் தூய்மை அடைந்து, நல்ல குடிமக்களாக வாழச் செய்யும். பரம்பொருளின் சக்தியையும் கருணையையும் தெரிந்து, அந்த அருட்பெரும் சக்தியுடன் நம் மனத்தை ஒன்றச் செய்து உயர்வடைந்து நற்கதி பெறும் சாதனங்களாக கோயில்கள் அமைய வேண்டுமென கருதித்தான் நம் முன்னோர்கள் திருக்கோயில்களை பல ஊர்களிலும் உருவாக்கித் தந்துள்ளனர்.

அவற்றைப் பராமரித்தலும், பேணிக்காத்தலும், வழிபடுவதன் மூலம் இறையருளில் ஒன்ற வேண்டுவதும் நம்முடைய கடமையாகும்.

மக்களின் கடமை

"கோயில் விளங்கக் குடி விளங்கும்" என்பது ஆன்றோரின் அனுபவமொழி. உள்ளூர் மக்கள் தங்கள் வசதிக்கேற்ப பொருள் மற்றும் உடல் உழைப்பு செய்வதுடன் வெளியிடங்களில் உள்ள நல்லுள்ளம் கொண்டவர்களின் நன்கொடை பெற்றும், உள்ளூர்

பங்களிப்புடன் அரசின் உதவியை நாடிப் பெற்றும் கோயிலைப் புதுப்பிக்க ஆவன செய்ய வேண்டும்.

தினமும் கோயிலுக்கு ஒரு முறையாவது சென்று வரவேண்டும். முடியாதவர்கள் வாரம் ஒரு முறையாவது திங்கள், வெள்ளி, சனி ஆகிய நாட்களில் சென்று வரலாம். இப்போது ஊரில் உள்ள இளைய தலைமுறையினர் பலருக்கு சிவன், பெருமாள் கோயில்கள் எங்கு இருக்கின்றது என்றே தெரியாத நிலையாக உள்ளது. இந்நிலை தவிர்க்கப்பட வேண்டும்.

விழாக்களின் அவசியம்

முன்பு போல மாத, ஆண்டு விழாக்கள் செய்யும் நிலை ஏற்பட்டால் மக்கள் காணச் செல்வர், கோயிலும் செம்மையடையும். மக்களின் மனமும் தூய்மை பெறும். விழா நாட்களில் செப்புத் திருமேனிகள் வீதி உலா வருவது வழக்கம். தான் இருக்கும் இடமாகிய திருக்கோயிலுக்கு வந்து தன்னை தரிசிக்க முடியாதவர்களுக்கு, அவர்கள் இருக்கும் இடத்திற்குத் தானே தேடி வந்து திருக்காட்சி தந்து அருள் தருவதாக விழாக்கள் அமைகின்றன என்னும் தத்துவக் கருத்தை ஆன்றோர்கள் விளக்கி உள்ளனர். எனவே விழாக்கள் மிகவும் அவசியமாகிறது.

வழிபாட்டின் அவசியம்

வழிபாடு இல்லாத வாழ்வு 'கொழு கொம்பு இல்லாத கொடி' போன்றதாகும். **"கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்"** என்பது உலகநீதி. ஆனால் இவ்வூரில் பாடல் பெற்ற ஒரு சிவத்தலம் இருந்தும் மக்கள் தினமும் வழிபாட்டுக்குச் செல்வது அரிதாக உள்ளது.

"ஆலயம் தொழுவது சாலவும் நன்று" என்பது ஔவையாரின் அருள்மொழி. இனியாவது இவ்வூர் மக்கள் இக்கோயிலுக்குத் தினமும் சென்று வழிபடவேண்டும். அப்போதுதான் கோயிலும், மக்களின் மனமும் தூய்மையடையும்.

மனிதப் பிறவியின் மாண்பு

"வாய்த்தது நந்தமக்கு ஈது ஓர் பிறவி மதித்திடுமின்" என்பது வாகீசரின் வாய்மொழியாகும். மனிதப் பிறவி நமக்கு வாய்த்திருப்பதே பிறவி நீங்கி வீடுபேறு அடைவதற்குத்தான். இந்தப் பிறவி வாய்ப்பை மதித்து இறைவனைப் போற்றி வாழ்ந்து பிறவியை நீக்கிக் கொள்ள வேண்டும். "அரிது அரிது மானிடராதல் அரிது" என்பது ஔவை மொழி.

"புல் ஆகிப் பூடாய் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடுற்றேன்"

– மணிவாசகரின் சிவபுராணம்.

ஓரறிவுப் பிறவியிலிருந்து வளர்ந்து ஆறு அறிவு விளங்கும் இம்மனிதப் பிறவியை நாம் பெற்றுள்ளோம். வாய்த்த இப்பிறவியிலேயே இறைவன் திருவடியைக் கண்டுணர்ந்து விடுதலை பெற முற்பட வேண்டும்.

"எண்ணரிய பிறவிதனின் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிது அரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்".

– தாயுமானவர்.

இப்பிறவி தப்பிவிட்டால் எந்தப் பிறவி நமக்கு வாய்க்குமோ, வேறு எந்தப் பிறவி கிடைக்குமோ நமக்குத் தெரியாது.

"அண்டசம் சுவேத சங்கள்
உற்பிச்சம் சராயுசத் தோடு
எண்தரு நால்எண் பத்து
நான்கு நூறு ஆயிரத்தாய்
உண்டுபல் யோனி எல்லாம்
ஒழித்து மானுடத்து உதித்தல்
கண்டிடில் கடலைக் கையால்
நீந்தினன் காரியம் காண்".

– சிவஞான சித்தியார் (சுபக்கம்)

உயிர்கள் பிறப்பதற்கு ஏற்றதான முட்டை, வியர்வை, விதை, கருப்பை, ஆகிய நான்கு வகை தோற்றத்திலிருந்து உண்டாகும்; தேவர், மனிதர், விலங்கு, பறவை, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் ஆகிய ஏழுவகையான பிறப்பிலும் உண்டாகும் உயிர் வகைகள் எண்பத்து நான்கு நூறாயிரமாகும். அவற்றுள் மற்ற பிறவிகளை எல்லாம் ஒழித்து மனிதப் பிறவியை அடைவது சமுத்திரத்தைக் கையால் நீந்திக் கரை ஏறியவனின் செயல் போன்றதாகும். இம்மனிதப் பிறவியே, பிறப்பு இறப்பில் கிடந்து, உழலும் தீராத சுழற்சியினை நீக்கும் வழியாக அமைந்துள்ளது.

பிறவியின் பயன்

எனவே இறைவனை வணங்கி வாழ்த்துவதன் மூலம், உள்ளம் தூய்மை பெற்று அவன் திருத்தாளை அடைந்து முத்திப் பேற்றினை இப்பிறவியிலேயே பெறலாம்.

"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு".

– குறள் : 358.

பிறவிக்குக் காரணமாகிய அறியாமை நீங்கப் பெற்றுச் சிறப்பு என்னும் வீடுபேற்றை அளிக்கும் பரம் பொருளைக் காண்பதே அறிவாகும்.

திருக்கோயில்களுக்குச் சென்று வருவதன் மூலம் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் படிநிலைகளைக் கடந்து நம் உள்ளத்திலேயே இறைவனைக் கண்டுணரலாம். அத்தகைய நிலையை அனைவரும் அடையலாம், அடைய வேண்டும். இதுவே நாம் இவ்வுலகுக்கு வந்ததன் நோக்கமாகும்.

வழிபடு பயன்

"இரை தேடுவதுடன் இறையையும் தேடு" என்பது ஞான வாக்கியம். (இரை - உணவு; இறை - கடவுள்) ஒரு நாளின் சில மணித்துளிகளையாவது இறைவனை நினைக்கச் செலவிட வேண்டும்.

நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்வான். போற்றினர் இடர் போக்குவான். தீராத வல்வினை தீர்ப்பான். தனக்குவமை இல்லாதான் தாள் சேர்ந்தால் நம் மனக்கவலை மாறும். இறைவன் அடி சேர்ந்தால் பிறவிப் பிணியை நீக்கிக்கொள்ளலாம்.

"பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார்"

– திருக்குறள்–10.

"உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்றமும் ஆகித் தொல்வினை அடையார்"

– திருஞானசம்பந்தர்.

இறைவன் திருப்பாடல்களை உருகிப் பாடி வழிபாடு செய்பவர்கள் மட்டும் அன்றி, அப்பாடல்களை பிறர் பாடும்போது காதால் கேட்டவர்கள் ஆகிய இரு திறத்தாரும் நன்மை அடைவதோடு அல்லாமல், அவர்களின் சுற்றத்தினரும் பழவினைகள் நீங்கப் பெற்று நல்வாழ்வு பெறுவர் என்பது விளங்குகின்றது.

நிறைவுரை

பல தலங்களுக்கும் சென்று வழிபாடு செய்ய முடியாதவர்களும், பல நூல்களையும் வாங்கிப் படிக்க இயலாதவர்களும் இந்நூலின் பின் இணைப்பாகக் கொடுக்கப்பட்டுள்ள வழிபாட்டுப் பாடல்களையாவது பாடிப் பாவி இத்தலத்துக்குச் சென்று வணங்கி இறவா, பிறவாப் பெருநிலை அடைய முற்படலாம்.

"சிவன்எனும் நாமம் தனக்கே உடையசெம் மேனிஎம்மான்
அவன்எனை ஆட்கொண்டு அளித்திடு மாகில் அவன்தனையான்
பவன் எனும் நாமம் பிடித்துத் திரிந்துபன் னாள்அழைத்தால்
இவன்எனைப் பன்னாள் அழைப்பு ஒழியான் என்று எதிர்ப்படுமே"

– திருநாவுக்கரசர்.

சிவபெருமானைப் பலகால் அவன் திருப்பெயரைக் கூறி அழைத்து வந்தால் இவன் என்னைப் பலநாள் அழைத்து வருகின்றான்; நாம் இவனுக்கு காட்சி தந்தால் ஒழிய அழைப்பதை நிறுத்தமாட்டான் எனக்கருதி இறைவன் நம்முன் எதிர்ப்பட்டு (உள்ளுணர்வில் தோன்றி) நமக்கு நற்கதி அளிப்பான்.



உ
சிவமயம்

ஆன்மீக விளக்கங்கள்

திருத்தலங்களின் சிறப்பு

மக்கள் எந்த இடத்தில் கடவுள் தரிசனத்துக்காக நீண்ட காலம் தவம், தியானம், வழிபாடு, பிரார்த்தனை, பூசை ஆகியவற்றைச் செய்கின்றார்களோ, அந்த இடத்தில் இறைவனின் அருளாற்றல் கண்டிப்பாக இருக்கும். அவர்களது பக்தியின் காரணமாக அந்த இடத்தில் தெய்வீக சிந்தனை திரண்டு வருகிறது. ஆதலால் அங்கு ஆன்மீக விழிப்பும், கடவுள் காட்சியும் சுலபமாகக் கிடைக்கிறது.

இறையனுபூதி பெறும் எண்ணத்துடன் காலம் காலமாக எண்ணற்ற சாதுக்களும், ஞானிகளும், சான்றோர்களும், யோகிகளும், பக்தர்களும், மகான்களும், முனிவர்களும் இத்திருத்தலங்களுக்கு வந்து தங்கள் ஆசைகளைத் துறந்து உள்ளம் உருகி இறைவனை வழிபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்.

இத்தகைய தலங்களுக்குச் சென்று வணங்கினால் பாவம் அகலும், அகந்தை நீங்கும், ஆணவம் அடங்கும், மாயை மறையும், செருக்கு அழியும், சினம் ஒழியும், பகை ஒடுங்கும். எனவே இறைவன் எல்லா இடங்களிலும் நீக்கமற நிறைந்திருந்தாலும் அவனுடைய அருளாற்றல் தீர்த்தத் தலங்களில் அதிகமாக இருக்கிறது. பூமியில் எங்கே தோண்டினாலும் நீர் கிடைக்கும். ஆனால் கிணறு, குளம், ஏரி போன்ற இடங்களில் மிகவும் சுலபமாக நீரைப் பெறலாம் அல்லவா? அதே போலத்தான் எங்கும் உள்ள இறைவன் கோயில்களில் இல்லாமல் போவானா? பசுவின் உடல் முழுவதும் நிறைந்த பால் மடியில் வெளிப்பட்டுத் தோன்றுவது போல அக்கோயில்களில் காட்சி தருகின்றான். காற்று எங்கும் இருப்பினும் அறைக்குள் இருப்பவர் விசிறியின் உதவியை நாடுவதுபோல எங்கும்

ஆண்டவன் இருப்பினும் கோயிலுக்குச் செல்ல வேண்டியுள்ளது.

"எங்கும் சிவன் இருப்பன் ஆனாலும் ஏசற்ற
சங்கமத்தும் சற்குருவின் தன்னிடத்தும் – இலிங்கத்தும்
ஆவினுடம்பு எல்லாமும் ஆவரித்து நிற்கினும் பால்
பாவு முலைக் கண் மிகுதிப் பார் "

– சிவஞானவள்ளலார்.

(ஏசற்ற - குற்றமற்ற; சங்கமம் - சிவனடியார் திருக்கூட்டம்; ஆ -பசு; ஆவரித்து - மறைந்து; முலைக்கண் - மடியினிடம்)

திருக்கோயில் வழிபாட்டு முறை

திருக்கோயிலுக்குச் சென்று வழிபடும் ஆர்வமும், அன்பும் உடையவர்கள் தம் வசதிக்கேற்ப காலை, நண்பகல், மாலை என்னும் மூன்று வேளையும் அல்லது ஓரிரு முறையும் சென்று வழிபடலாம். இயலாதவர்கள் வாரம் ஒரு முறை அல்லது கிருத்திகை, முழுநிலாநாள், பிரதோஷம், சஷ்டி முதலிய சிறப்பு நாட்களிலும் சென்று வழிபடுதல் நல்லது.

நீராடி; தூய ஆடை உடுத்தி திருநீறு, சிவமணி(உருத்திராக்கம்) முதலிய சிவச்சின்னங்களை அணிந்து ஒருமை மனத்துடன் செல்ல வேண்டும்.

கோபுரம், விமானம்

முகப்பு நுழைவாயிலின் மேல் அமைந்துள்ளது கோபுரமாகும். இதை இராச கோபுரம் என்பர். இது பல நிலைகளைக் கொண்டு அமைந்திருக்கும்.

கருவறையின் மேல் அமைக்கப்பட்டுள்ள தூபிக்கு விமானம் என்று பெயர். விமானம் பருமையும் தூய்மையும் வாய்ந்த (தூல) இலிங்கமாகும். உள்ளே கருவறையில் உள்ள சதாசிவ இலிங்கம் நுண்ணிய (சூக்குமம) இலிங்கமாகும்.

"தூய விமானமும் தூலம் அதாகுமால்
தூய சதாசிவம் ஆகும் நல் சூக்குமம்"

–' திருமந்திரம் – 1689.

நாம் கோபுரத்தையும், விமானத்தையும் காணும் இடத்திலிருந்து அவை சிவத்தின் உருவே எனக் கருதி

"தென்னாடுடைய சிவனே போற்றி
எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி "

என மனதிற்குள் உச்சரித்து வணங்க வேண்டும்.

"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்" எனவும், "கோபுர தரிசனம் இறைவனின் பாத தரிசனம்" எனவும், "கோபுர தரிசனம் பாப விமோசனம்" எனவும் ஆன்றோர் கூறியுள்ளனர். திருக்கோபுரம், விமானம் அல்லது கோயிலைக் கண்ட இடத்திலேயே வணங்குதல் சிறப்பாகும்.

கோயிலின் வாயில் அல்லது கோபுர வாயிலை நெருங்கியதும் இருபக்கமும் உள்ள விநாயகர், முருகன் திருமுன்னிலைகளை வணங்கிய பின் பலிபீடம், நந்தி, கொடி மரம் உள்ள இடத்துக்குச் செல்ல வேண்டும்.

பலிபீடம்

நம் இழிவான எண்ணங்களை (உலகியல் சிந்தனைகள்) எல்லாம் பலிபீடத்திலேயே விட்டுவிட்டு இறைவனைப் பற்றிய எண்ணத்தோடு மட்டும் கோயிலுக்குள் செல்ல வேண்டும்; என்பதற்காகவே பலிபீடம் அமைக்கப் பெற்றிருக்கின்றது. யான், எனது (அகப்பற்று, புறப்பற்று) என்னும் இருவகைப் பற்றுகளையும் வெட்டிப் பலியாகச் செய்வதற்கு அடையாளமே அதன் அருகில் கீழே விழுந்து வணங்குதலாகும். இது சிவலிங்கத்தின் வடிவமேயாகும்.

நந்தி

உயிர், இருவகை செருக்கும் நீங்கித் தூயதாகி இறைவனை நோக்கிச் செல்வதற்கு அடையாளமாகவே பசுவின் (ஆன்மா) வடிவினதான நந்தி அமைந்துள்ளது. இறைவனல்லாத சிற்றுயிர்களின் அடையாளமே நந்தி வடிவமாகும்.

ஆன்மா எப்போதும் இறைவனையே நாட்டவேண்டும் என்பதற்காகவே (பெரும்பாலான) திருக்கோயில்களில் சிவபெருமானை நோக்கும் நிலையில் நந்தி அமைக்கப்பட்டுள்ளது. இறையருளை அன்றி வேறு சிந்தனை ஏதும் இல்லாத பக்குவப்பட்ட உயிரினையே நந்தி குறிக்கும். (தரும தேவதையே நந்தி வாகனமாக உள்ளது எனவும் கூறுவர்.) சிவபெருமானுக்கு வாகனமாக நந்தி அமைந்துள்ளதால், அதையும் சிவமெனவே கருதி வணங்கி உட்செல்ல வேண்டும்.

"பாய பலிபீடம் பத்திர லிங்கமாம்
ஆய அரனிலை ஆய்ந்துகொள் வார்கட்கே"

– திருமந்திரம் – 1689.

(பத்திரம் - நந்தி; அரனிலை - சிவாலயம்)

பரந்த பலிபீடம், நந்தி இவையும் சிவலிங்கமென அழைக்கப்பெறும்.

கொடி மரம்

இறைவன் தீயவர்களை அழித்து நல்லவர்களைக் காத்தலின் அடையாளமாகவே கோயில்களில் கொடி மரங்கள்அமைக்கப்பட்டுள்ளன. கொடி மரம் சிவத்தையும், எருதின் படம் எழுதிய துணிக்கொடி ஆன்மாவையும், தர்ப்பையால் செய்யப்பட்ட கொடிக் கயிறு பாசத்தையும் குறிக்கும். பாசம் நீங்கி உயிர் சிவத்தை அடைதல் வேண்டும் என்னும் மேலான தத்துவத்தை விளக்கவே திருக்கோயில்களில் கொடி மரம் ஓங்கி உயர்ந்து நிற்கிறது.

கொடியேற்றுதல்

ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறும் பெருவிழாக்காலங்களில் (பிரம்மோற்சவம்) கொடியேற்றப்படுவது வழக்கம். ஆன்மா பாசத்திலிருந்து நீங்கி இறையருள் வழி நின்று மேல் நிலையான முத்தி நிலையை அடைவதைக் குறிப்பதே கொடியேற்று விழாவாகும்.

தலமரம்

பண்டை நாளில் திருக்கோயில்கள் கட்டப்படாத காலத்தில் முனிவர்களும், மகான்களும்(தவத்தவர்) மரங்களின் அடியில் இறைவனின் திரு உருவங்களையோ அல்லது சின்னங்களையோ அமைத்து தவம், தியானம் செய்தனர். அந்தந்தத் தலத்தில் எம்மரத்தின் கீழ் இருந்து தவம் செய்து சித்தி பெற்றார்களோ அம்மரங்களே அவ்வத் தலத்துக்குரிய தலமரமாகப் போற்றப்பட்டு வழிபடப்படுகின்றன. அவற்றையும் நாம் வணங்கிச் செல்ல வேண்டும்.

விழுந்து வணங்குதல்

பலிபீடத்திற்கு தென்கிழக்கு மூலையில் வடக்கு நோக்கிக் கீழே விழுந்து ஆண்கள் எட்டு உறுப்புகள் (அட்டாங்க) நிலந்தோயும் வணக்கமும்(தலை, கை இரண்டு, காது இரண்டு, மோவாய், புயங்கள் இரண்டு); பெண்கள் ஐந்து உறுப்புகள் (பஞ்சாங்க) வணக்கமும் (தலை, கை இரண்டு, முழந்தாள் இரண்டு) செய்ய வேண்டும். கோயிலுக்குள் வேறு எந்த இடத்திலும் கீழே விழுந்து வணங்குதல் கூடாது.

வழிபடு முறை

இடப்பக்கமாக உள்திருச்சுற்றுக்குச் சென்று வலம் வரும்போது 63 நாயன்மார்களையும், தென்மேற்கு மூலையில் எழுந்தருளியுள்ள தல விநாயகரையும்,

தென்முகக் கடவுளையும் (தட்சணாமூர்த்தி), மூலவருக்குப் பின் அமைத்திருக்கும் திருமாலையும், அடுத்துக் கிழக்குத் திசை நோக்கியுள்ள முருகன், திருமகள், கலைமகள், இவர்களையும் வழிபடுதல் வேண்டும்.

பின் வடதிசை நோக்கியுள்ள நான்முகக் கடவுளையும்(பிரமன்), துர்க்கையையும் வணங்கிய பின் தெற்கு நோக்கியுள்ள நடராசர் முன்னிலைக்குச் சென்று வழி படல் வேண்டும்.

பின்பு முழுமுதற் கடவுள் இலிங்கமாகிய சோதி வடிவில் மூலவராக எழுந்தருளி உள்ள கருவறை (மூலத்தானம்) சென்று திருமுறைப் பாடல்களைப் பாடி வணங்குதல் வேண்டும். முடியாதவர்கள் பஞ்சபுராணப்படி ஐந்து பாடல்களேனும் பாடுதல் வேண்டும்.

மீண்டும் உள்திருச்சுற்றை வலமாக வந்து வடபகுதியில் அபிடேக நீர் விழுமிடத்தில் வீற்றிருக்கும் சண்டேசுவரரின் நிட்டை கலையாமல் வலது கை பெருவிரல், ஆள்காட்டி விரல், நடுவிரல் மூன்றினையும் சின்முத்திரை போல் ஒருங்கிணைத்து இடது கை உள்ளங்கையில் ஒலி வராமல் மும்முறை ஒற்றி எடுத்து சிவ தரிசனப் பலனைத் தருமாறு வேண்டி வணங்க வேண்டும். பின்னர் அம்மன் சந்நிதிக்குச் சென்று வணங்க வேண்டும்.

மீண்டும், பலிபீடத்திற்கு அருகில் வந்து கீழே விழுந்து வணங்கி வடக்கு நோக்கி அமர்ந்து கண்கள் மூடி சிறிது நேரம் தியானித்தல் வேண்டும்.

எல்லாக் கோயில்களிலும் மேலே குறிப்பிட்டுள்ள எல்லாத் தெய்வத் திருவுருவங்களும் இருக்காது. இருக்கும் மூர்த்திகளை அந்தந்த மூர்த்திகளுக்குண்டான பாடல்களைப் பாடி உள்ளன்புடன் உருகி வழிபட வேண்டும். கோயிலுக்குள்ளே அருள் நெறித் தொடர்பு இல்லாத வேறு வீண் பேச்சுக்களை பேசுதல் கூடாது.

இறைவனை வேண்டுதல்

திருக்கோயில் வழிபாட்டின் போதும் தத்தம் குறைகளை, தேவைகளை மட்டும் கூறி, வேண்டி ஆண்டவனை வழிபடாமல், உலகெங்கும் உள்ள மக்களின் மற்றும் எல்லா உயிர்களின் பொது நலத்துக்காகவும்; எங்கும் அருள் நெறி உணர்வு பெருகி, போரும் பூசலும் நீங்கி, பசியும், பிணியும் இன்றி அமைதியும் அன்பும் நிலைக்கவும், மழை அளவாகப் பெய்து எங்கும் வளம் சிறக்கவும் வேண்டிக் கொண்டு இறுதியில் வாழ்த்துக் கூறுதல் வேண்டும்.

கோயில் இடங்களைத் தூய்மையாக வைத்தல், வைக்க உதவுதல், பூமாலை தொடுத்துக் கொடுத்தல் முதலியன சிறந்த தொண்டுகளாகும்.

வழிபாட்டுப் பொருள்கள் பற்றிய விளக்கம்

தீபம்

தீபம் என்னும் சொல்லுக்கு விளக்கு என்பது பொருள். நமக்கு இறைவனின் தன்மையை விளங்க வைப்பது. ஒளியைக் கொடுப்பதாகவும், மங்கலப் பொருளாகவும் விளக்கு விளங்குகின்றது. விளக்கின் ஒளியைக் காணும்போது இறைவனின் நினைவு ஏற்பட வேண்டும். இறைவன் சோதி வடிவாகவே உள்ளான். இது பற்றியே தீபத் திருவிழா கொண்டாடப் படுகின்றது. ஒளித் திரட்சியாக ஓங்கி நிற்கும் இறைவனுக்கு முன்னால் பக்தி என்ற உள்ளச் சுடரின் சின்னமாக, காணிக்கையாக ஒளி விளக்கு விளங்குகின்றது.

"சோதியே! சுடரே! சூழ்ஒளி விளக்கே!" என இறைவனை மணிவாசகர் போற்றுகின்றார்.

"சுடர்மணி விளக்கின் உள்ளொளி விளங்கும்
தூயநற் சோதியுட் சோதி! "

– திருமாளிகைத்தேவர்.

"தீப மங்கள சோதி நமோநம"

– அருணகிரியார்.

(நம - வணக்கம்)

விளக்கு ஏற்றாமல் எந்த வழிபாட்டுச் செயலையோ, மங்கல நிகழ்ச்சிகளையோ தொடங்குதல் கூடாது.

மலர்

மலர்கள் உள்ளத்தை மலர்ச்சியடையச் செய்து இறைவன் திருமுன் குவியச் செய்யும். மணம், நிறம், அழகு, மென்மை, குளிர்ச்சி, கவர்ச்சி முதலியன கொண்டவை பூக்கள். அவற்றை இறைவனுக்கு அணிவிக்கும்போது நம் மனம் குளிரும். அமைதியும், சாந்த உணர்வும் கிட்டும். ஒருமைப்பாட்டு உணர்வு கிடைக்கும். மலரின் மென்மை போன்று குழைந்த நெஞ்சம் அமையும். **"தொழுது தூமலர் தூவித் துதித்து நின்று"** வழிபட வேண்டுமெனத் திருநாவுக்கரசர் பாடல் கூறுகின்றது.

தேங்காய்

தேங்காய் - ஆன்மா(உயிர்) இறைவனை வழிபடச் செல்வது பற்றிக் குறிக்கும்.

மூன்று கண்கள் : ஆன்மாவை மூடியிருக்கும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களைக் குறிக்கிறது.

தேங்காய் ஓடு - ஆன்மாவைப் பந்தித்து நிற்கும் பாசங்களின் கடினத் தன்மையைக் குறிக்கும். இறைவனுக்கு முன் வைக்கும்போது மட்டை, நார், ஓடு நீக்கிப் படைக்கிறோம். அவ்வாறே பற்று, பந்தம், பாசம் ஆகிய தளைகளை நீக்க, இறைவனுடைய காட்சி கிடைக்கும் என்பது கருத்து.

தேங்காயைக் கருவியின் துணையின்றி கையால் உடைக்க முடிவதில்லை. அதுபோல மனிதனை

மூடியிருக்கும் பாசங்களை எளிதில் விலக்க முடியாது என்ற தன்மையைக் குறிக்கும். அருட்குருவாகிய இறைவன் துணை தேவை.

வெண்மையான பருப்பு - பாசங்கள் நீங்கிய தூய ஆன்மாவைக் குறிக்கும்.

பழங்கள்

பழம் என்ற சொல்லுக்கு கனி என்றும் ஒரு பொருள் உண்டு. நம் உள்ளத்தைக் கனிவித்து, இறைவன் திருவடியை அடையும் ஞானநிலையை நமக்கு அருள வேண்டிக் கனிகளைப் படைக்கின்றோம்.

பழங்கள் அடியார்களின் நல்வினைப் பயன்களைக் குறிக்கும். நாம் செய்யும் வினைகள் யாவும் நன்மை தருவனவாக அமைவதற்காகப் படைப்பதாகும். தாங்கள் படைக்கும் பழங்களின் இனிமைச் சுவை போன்று தங்களின் வாழ்வும் இனிமை உடையதாக அமைய இறைவனை வேண்டிப் படைப்பதாகும்.

வெற்றிலைப் பாக்கு

அமைதி (சத்துவம்), ஆட்சி (இராசதம்), அழுந்தல்(தாமதம்) ஆகிய முக்குணங்களைக் குறிக்கும். நாம் அமைதி பெற வேண்டும் என வேண்டவே இவற்றைப் படைக்கிறோம்.

கற்பூரம்

இதனைச் சூடம் என்றும் கூறுவர். இறைவனோடு இரண்டறக் கலக்கும் பக்குவம் வாய்க்க, ஆன்மா இறைவனை வேண்டுவதைக் குறிக்கும். கற்பூரம் முதலில் கண்ணுக்குப் புலப்படும் பருப்பொருளாக இருக்கிறது எரியும்போது சுடர் வடிவாகிறது. எஞ்சி நிற்பது எதுவும் இல்லை. அதுபோல ஆன்மாவும் சிவபரம் பொருளில் கலக்க வேண்டும் என்பது கருத்து.

இறைவன் கற்பூர சோதியாக, கற்பூர மணமாக விளங்குகின்றான் என்றும், இறைவன் திருமுகத்தில் கற்பூரமணம் வீசுகிறது என்றும் வள்ளலார் கூறுகின்றார்.

"கற்பூர வாசம் வீசும் பொற்பாந் திருமுகத்தே"

– அருட்பா – 2979.

தூபம்

இறைவன் திருமுன் நறுமணப் புகையைக் காட்டுவது தூபமாகும். இறைவன் நமக்கு மன அமைதியையும், தூய்மையையும் தரவேண்டும் என்பதற்காக தூபம் இடப்படுகின்றது. நறுமணப் புகை மேல் நோக்கிச் செல்வது போல நம் சிந்தனையும் உயர்வானதாக அமைந்து மேல் நோக்கிச் செல்ல வேண்டும் என்பதை விளக்குகின்றது.

"சலம் பூவொடு தூபம் மறந்தறியேன்"

என்பது அப்பர் பெருமானின் வாக்கு ஆகும்.

விபூதி – திருநீறு – வெண்ணீறு

தீவினைகளை நீறு படுத்துவதனால் 'திரு நீறு' எனவும், அழியாத செல்வத்தைக் கொடுப்பதனால் 'விபூதி' எனவும், ஆன்மாக்களிடம் உள்ள மலமாசை (பாசம்) கழுவுவதால் 'சாரம்' என்றும், அறியாமையை அழித்து ஞானத்தைத் தருவதால் 'பசிதம்' எனவும் பெயர் வந்தது. இதனை அணிபவருக்கு மேலான செல்வத்தைக் கொடுக்கும் தன்மையது. ஐந்தெழுத்தை ஓதி உணர்ந்து திருநீறு பூசிக் கொள்ள வேண்டும்.

"கங்காளன் பூசும் கவசத் திருநீற்றை
மங்காமல் பூச மகிழ்வரே யாமாகில்
தங்கா வினைகளும் சாரும் சிவகதி
சிங்கார மான திருவடி சேர்வரே "

– திருமந்திரம் – 1638.

(கங்காளன் - சிவபெருமான்; கவசம் - மெய்யுறை, உடலுக்குப் பாதுகாப்பு தரும் கருவி; சிங்காரம் - அழகிய)

திருநீற்றை அணிவதனால் நம்முடைய தீய வினைகள் நீங்கி, சிவகதி பெற்று சிவபெருமானின் திருவடியைச் சேரும் முத்திநிலை கைகூடும்.

"பாடற்கு இனிய வாக்களிக்கும் பாலும் சோறும் பரிந்தளிக்கும்
கூடற்கு இனிய அடியவர்தம் கூட்டம் அளிக்கும் குணம் அளிக்கும்
ஆடற்கு இனிய நெஞ்சே நீ அஞ்சேல் என்மேல் ஆணைகண்டாய்
தேடற்கு இனிய சீர் அளிக்கும் 'சிவாயநம' என்று இடுநீறே"

– திருவருட்பா.

குங்குமம்

குங்குமம் பெண்களின் மங்கலச் சின்னம். பெண்களின் நெற்றியின்மேல் நேர் வகிட்டின் தொடக்க இடம் இலட்சுமி வாழும் இடமாகக் கூறுவர். நேர் வகிட்டிலும் நெற்றியிலும் குங்குமம் இட்டுக் கொண்டால் பெண்கள் பிற ஆடவரின் மனத்தில் ஆசையைத் தூண்டாதவாறு தடுக்க முடியும். மந்திரம், தந்திரம், யந்திரம் போன்றவற்றிலிருந்தும் சுத்தமான குங்குமம் அணிந்தவர்கள் காப்பாற்றப்படுகிறார்கள். ஏன் என்றால் கெடுதிகள் வாராது காக்கும் இலட்சுமி குங்குமத்தில் வாசம் செய்கின்றாள். ஆண்களும் குங்குமம் அணிந்து கொள்ளலாம்.

கடவுள், இறைவன், ஆலயம், கோயில் விளக்கம்

கடவுள்

கடந்தும் உள்ளவன், உள்ளத்திலும் உள்ளவன். உள்ளும் புறத்தும் உள்ளவன்ஆவான். எல்லா உயிர்களின் உள்ளிருந்து, அவை செய்த வினைக்கு ஏற்றபடி அவற்றைச் செலுத்துகின்றான்.

இறைவன்

எல்லாப் பொருள்களாய்இருந்து, எல்லா உயிர்களிலும் தங்கி இருக்கின்றான். ஆணவத்தை அழிப்பவன் என்று பொருள், இறு+ ஐ=இறை-ஆணவத்தை முடித்து வைப்பவன் இறைவன்.

ஆலயம்

ஆலயம் = ஆ + இலயம் என்னும் இரு சொற்களை உடையது. இதன் பொருளாவது ஆ-ஆன்மா, நினைவு, உடன்பாடு; இலயம்(லயம்) - ஒடுங்குமிடம், இரண்டறக் கலத்தல், ஒன்றுதல், ஞானமே திருமேனியாக உடைய கடவுள் நிலை, ஐக்கியமாதல், தன் முனைப்பு அழிதல் ஆகியன.

நம் உடலில் உள்ள ஆன்மாவானது தன்முனைப்பு (ஆணவம்)அழிந்து, ஞானமே திருமேனியாக உடைய இறைவனுடன் இரண்டற்று ஒன்றுவதற்கு ஏற்ற வழிகாட்டியாக உள்ள இடமே ஆலயமாகும். ஆன்மா இலயிக்குமிடம்.

கோயில்

கோயில்=கோ+இல், கோ-மேன்மை, பெருமையில் சிறந்தோன், தலைமையானவன், முத்தி, தந்தை; இல்-வாழும் இடம், தங்கும் இடம், முத்தி. மேன்மை பொருந்திய முத்தியை *(சுவர்க்கம்)* தருகின்ற உலகுயிர்களின் தந்தையாகிய இறைவன் வாழுமிடமே கோயிலாகும். "இல் அடைந்தார்க்கு இல்லாதது ஒன்றில்லை" என்பது திருமந்திரம்.

இறைவனின் பெருமைகளும்அவன் உயிர்களுக்கு அளிக்கும் கருணைத் திறமும்

1. உலக மக்களுக்கு அருள் செய்வதற்காகவே ஊர்தோறும் கோயில் கொண்டுள்ளான்.

2. இறைவன் திருவருளாகிய செல்வமும் அது பெற்று வாழும் வாழ்வுமே இன்றியமையாதன.

3. பல்வேறு இடங்களிலும் பல்வேறு தன்மையில் எழுந்தருளியுள்ளான்.

4. அவனைச் சேராதார் நன்னெறிக்கண் சேராதார், தீ நெறிக்கே சேர்கின்றார்.

5. அவனைப் பற்றி நின்றார் எக்காலத்தும் இறவாப் பெருநிலையை அடைந்து இன்புறுவர்.

6. அவனுடைய திருவடியைக் கண்ட கண்களால் மற்றவற்றைக் காண்டல் சிவ பக்தர்க்கு அழகன்று.

7.அவனே என் தலைவன் என எண்ணி வாழ்தல் வேண்டும்.

புலன்களின் தீமை

1. கண்-விட்டில் பூச்சி விளக்கு ஒளியைப் பழம் என்று எண்ணி காட்சிப் புலனால் செத்து மடிகின்றது *(ஒளி)*

2. காது-மான் சிங்கத்தின் ஒலி கேட்டுப் பயந்து வெளியே வந்து இறையாகின்றது(ஒலி)

3. தோல்-யானை பள்ளத்தின் அருகில் இருக்கும் பெண் யானையைத் தழுவச் சென்று பள்ளத்தில் விழுந்து மனிதனுக்கு அடிமையாகிறது *(ஊறு-தொடு உணர்வு)*

4. நாக்கு-மீன் சுவைப் புலனுக்கு அடிமையாகி தூண்டிலில் உள்ள இரைக்கு ஆசைப்பட்டு அகப்பட்டு மடிகின்றது. *(சுவை)*

5. மூக்கு-மலர்களின் மணத்தால் கவரப்பட்டு வண்டுகள் சில மடிகின்றன *(வாசனை)*

ஆனால் மனிதனோ ஐம்புலன்களாலும் ஈர்க்கப்பட்டு கெட்டு அலைந்து ஒழிகின்றான். எனவே புலன்களைக் கட்டுப்படுத்தி வாழவேண்டும்.

"சென்ற இடத்தில் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால் உய்ப்பது அறிவு"

– குறள்–422

மனம் போன போக்கே போக விடாமல் தடுத்துத் தீயவற்றினின்றும் விலக்கிக் காத்து, நல்லதன்பால் செலுத்தி அறவழி செல்வது அறிவாகும்.

"மனம் போன போக்கெல்லாம் போக வேண்டாம்"

– உலகநாதனார்.

பிறவியின் காரணம்

இப்பிறப்பில் முழுவதும் தமது அறிவை மருளிலே (உலக மயக்கம்) அழுத்தி வைத்துத் தொலைத்தமையாலே திரும்பவும் பிறவிக்கு வரும்போது அந்த அறியாமையோடேயே பிறந்து துன்புறுவார்கள்.

இவ்வறியாமை தொலையும் வரையில் அருட்பெருங்கடலாகிய ஆண்டவன் உயிர்களை இடைவிடாது பிறவிக்கு வரச் செய்து மாயா சக்கரத்தில் வைத்து சுழற்றிக் கொண்டே இருப்பான்.

இப்பரு உடம்பில் இருந்து கொண்டே நாம் இடைவிடாமல் முயன்று நமது அறிவை உலக மயலில் இருந்து (மருள்) நீக்கி இறைவனது அருளிலே செல்ல விடவேண்டும். எவ்வளவு விரைவாக நாம் அறிவை மருளில் இருந்து நீக்கி அருளிலே படிவிக்கின்றோமோ அவ்வளவு விரைவில் நாம் இப்பிறவித் துன்பத்தைப் போக்கிப் பேரின்பத்தில் முழுகி நிலை பெயராது இருப்போம்.

"இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு"

– குறள் : 352.

மயக்கத்தினின்று நீங்கிய குற்றமற்ற தெளிந்த மெய்ஞ்ஞான முடையவர்க்கு அறியாமையாகிய இருள் நீங்கப் பெற்றுப் பேரின்பமயமான வீடும் கிட்டும்.

நம் நினைவை எந்நேரமும் ஓயாமல் கடவுள் நினைவில் இருத்துவது ஒன்றாலே தான் நம் சிந்தனை அருளில் செல்லும்.

இருவினைகள்

நல்வினை (புண்ணியம்)

யான் எனது என்று எண்ணாமல், சொல், செயல், சிந்தனை ஆகிய எதனாலும் தனக்கோ, பிறர்க்கோ தற்காலத்திலோ, பிற்காலத்திலோ, அறிவிற்கோ உடலுக்கோ துன்பம் தராது, விழிப்போடு இருந்து துன்பங்கள் நீக்கும் வகையில் தூய்மையுடன் பிற உயிர்களுக்குச் செய்யப்படும் நற்செயல்கள் யாவும் புண்ணியங்களாகும்.

தீவினை (பாவம்)

யான் எனது என எண்ணி ஒருவரது சொல், செயல், சிந்தனை இவைகளில் தூய்மையின்றி எதனாலேனும் தனக்கேனும், பிறருக்கேனும் அன்றைக்கோ, பிற்காலத்திலோ, உடல் உணர்ச்சிக்கோ, பகுத்தறிவுக்கோ, பிற உயிர்களுக்குத் துன்பம் விளைவிப்பதாக இருந்தால் அத்தகைய தீய செயல்கள் (பாவம்) தீவினைகள் எனப்படும்.

மனிதப் பிறவி

மனிதப் பிறவி உலகில் இறைவனால் படைக்கப்பட்ட எல்லா உயிர்களிலும் உன்னதமானது. உணர்வுநிலை மற்ற படைப்புகளிடையே காணப்படுவதை விட மனிதரிடையே அபரிமிதமாய் அமைந்துள்ளது.

அவ்வுணர்வு நிலை மிகுதியால்தான் மனிதன் இறைவனை அறிய முடிகிறது. எனவே மனிதப் பிறவியின் முக்கிய நோக்கம் இறைவனை அறிதலும் அடைதலும் ஆகும் என உணர்ந்து அதற்கான வழிகளில் ஈடுபட வேண்டும்.

"உடம்பினைப் பெற்ற பயனாவது எல்லாம்
உடம்பினில் உத்தமனைக் காண்"

– ஔவைகுறள்.

(உத்தமன்-இறைவன்)

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரான்அடி பேணார்"

–திருமந்திரம் 2052

(பிரான்-சிவபெருமான்)

உள்ளத்தில் இறைவன் வெளிப்படுதல்

கண் (பார்த்தல்), காது (கேட்டல்). மூக்கு (முகர்தல்), நாக்கு (சுவைத்தல்), தோல் (உணர்தல்). ஆகிய ஐந்தையும் அவ்வவற்றின் வழிச் செல்லாது தடுத்து, நம் வழி நிறுத்தி உள்ளத்தைத் தூய்மைப் படுத்த வேண்டும். காமம், மோகம், செருக்கு, பொறாமை, கோபம், பேராசை ஆகிய ஆறு உட்பகைவர்களையும் நீக்கி, அலை அற்ற நீர் போல் உள்ளம் தெளிவுற்று தூய்மை பெற்றால் இறைவன் அங்கே அருள் ஒளி வடிவில் தோன்றிக் காட்சி தருவான்.

"திரையற்ற நீர்போல் சிந்தை தெளிவார்க்குப்
புரையற்று இருந்தான் புரிசடையோனே"

திருமந்திரம்–2915.

(புரை-மறைவின்றி, புரிசடையோன்-சிவபெருமான்)

நினைப்பவர் மனம் கோயிலாக் கொள்வான்

எந்த ஆன்மா தூய்மை பெற்று, நீதிக்கும் நேர்மைக்கும் முதன்மை தந்து, இறை உணர்வில் இடையறாது எந்நேரமும் நினைந்து நினைந்து முழுகி நிற்கின்றதோ, அதனிடத்தில் இறைசக்தியாகிய அருள் சிறப்பாய் வந்துபாய்கிறது. இறையுணர்வும் அற உணர்வும் எப்போதும் இணைந்தே செல்லும். அதனால் இறைக் காட்சியும் கிட்டும்.

"நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்"

"என்னுளே உயிர்ப்பாய் புறம் போந்து புக்கு
என்னுளே நிற்கும் இன்னம்பர் ஈசனே"

– அப்பர் சுவாமிகள்

"இமைப் பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க"
– மாணிக்கவாசகர்.

"நெஞ்சமே கோயில்"

– தாயுமானவர்.

ஐந்தெழுத்து அருள் நிலை

'சிவாயநம' இம்மந்திரம் ஐந்து பொருளைக் குறிக்கும் சி-சிவம், வ-அருள், ய-உயிர்(ஆன்மா), ந-மறைப்பாற்றல், ம-ஆணவ மலம்.

ஐந்தெழுத்தில் இறை (பதி), உயிர் (பசு), தளை (பாசம்) என்னும் மூன்றும் ஐந்து வகையாக நிற்கின்றன. 'சி,வ,ந', பதியின் கூறு, 'ய' பசுவின் கூறு, 'ம' பாசமாகிய மலத்தின் கூறு.

ஒளி அலைகளை ஒன்று குவிப்பதன் மூலம் உலோகங்களைக் கூடத் துளையிடுவது போல (லேசர் மூலம்), ஒலி அலைகளைத் தொடர்ந்து வெளியிடுவதால் (சிவாயநம மந்திர உச்சரிப்பால்) நாம் நினைத்த பயனைப்

பெறமுடியும். ஒலி அலைகளுக்கு அச்சக்தி ஏற்படுகின்றது. மந்திர உச்சரிப்பினால் மன அமைதி கிட்டி, தீய நினைவுகள் விலகி இறை உணர்வு ஏற்படுகின்றது. அதனால் உள்ளொளி பெருகி பிறவியிலிருந்து விடுபடலாம்.

"எழுத்தை அழுத்தும் எழுத்தறியாரே"

திருமந்திரம்–2673

இவ்வைந்தெழுத்து பிற எழுத்துக்களைப் போன்ற எழுத்தாகாது. அது பிறப்பினுக்குரிய விதி எழுத்தைத் தோன்றாது அழுத்தும் (மாற்றும்) படைக்கலமாகிய எழுத்தாகும். எனவே நாமும் எப்போதும் உள்ளன்புடன் ஓதிவரவேண்டும்.

இறைவனின் ஐந்தொழில்கள்

1. படைத்தல்

மாயையின் மூலமாக உயிர்களுக்கு உடல், கருவி, உலகு, நுகர்பொருள்கள் ஆகியவற்றைத் தருவது படைப்பாகும். ஆணவம் என்னும் அறியாமை இருளில் அழுந்திக் கிடக்கும் உயிர்களுக்கு அனுபவமும், அதன் வழி அறிவும் பெற்று மலபரிபாகம் வருவித்தற் பொருட்டு சடமாகிய உடலைச் சித்தாகிய உயிருடன் பொருத்துதல்.

2. காத்தல்

உடலையும் கருவிகளையும் யான் என்றும், உலக நுகர்பொருள்களை எனது என்றும் கருதும் உயிர்கள், இன்பங்களை அனுபவிக்குமாறு செய்தல் காத்தலாகும். அவ்வினைகளை ஒழித்து, உயிர் அனுபவம் பெறும் பொருட்டு ஒரு கால அளவு வரை இறைவன் நிலைநிறுத்துகின்றான்.

3. அழித்தல் (துடைத்தல்)

உயிர்களால் காணப்பட்டவற்றை ஒடுக்குதல் துடைத்தலாகும். ஆருயிர்களின் இளைப்பை ஒழித்தற் பொருட்டு அவன் தோற்றுவித்தவற்றை மீண்டும் மாயையில் 'ஒடுக்குதல். பிறப்பு இறப்பு என்பன உடல் பற்றிய நிலைமாற்றங்களே.

4. மறைத்தல்

பிறப்பு இறப்புகளில் பலநாள் உழன்றும் வெறுப்பு ஏற்படாமல் உலகப் பற்றுக் கொள்ளும் ஆன்மாக்களுக்குத் தன்னைக் காட்டாமல், உலகத்தையே உயிர்கள் நோக்கியிருக்குமாறு இறைவன் செய்தலே மறைத்தல் ஆகும். இன்ப துன்ப அனுபவங்கள் மூலம் செருக்கு நீங்கி, அறிவு பெற்று, இறைவனை அறியும் பக்குவம் வரும் வரை அவ்வினை நுகர்வுகளில் அழுத்தி அவன் தன்னை உயிரிடமிருந்து மறைத்து வைக்கின்றான்.

5. அருளல்

உயிர்களை முற்றும் அறியாமையிலிருந்து மீட்டு மலமகற்றி நலமுறுத்தி முழுமையுறச் செய்து இன்ப அளவில் நிலை பெறச் செய்தல். உலகியல் நாட்டம் குறைந்து, இறையியல் நாட்டம் மிகுந்து பக்குவம் அடைந்த ஆன்மாக்களுக்கு இறைவன் அருள்புரிந்து தன் திருவடியில் கூட்டிப் பேரின்பப் பெருவாழ்வு (முத்தி) கொடுத்தல் அருளல் ஆகும்.

சிவலிங்கத்தின் சிறப்பு

இலிங்கம் என்றால் குறியீடு (சின்னம்) என்று பொருள். சிவன் என்றால் பரம்பொருள். எனவே சிவலிங்கம் என்பது பரம்பொருளாக சிவனைக் குறிக்கும் குறியீடாகும். கண்ணுக்குப் புலப்படாத அருவத் திருமேனிக்கும், கண்ணுக்குப் புலப்படும் உருவத்

திருமேனிக்கும், மூலமான இருப்பிடமாகிய சிவபெருமானை அறிந்து வழிபடுவதற்கு அடையாளமாக விளங்குவதே இலிங்கம்.

"காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய்
நீணாகம் அணிந்தார்க்கு நிகழ்குறியாம் சிவலிங்கம்
நாணாது நேடியமால் நான்முகனும் காணநடுச்
சேணாரும் தழற்பிழம்பாய் தோன்றியது தெளிந்தாராய்".

– பெரியபுராணம்.

அருவுக்கும் உருவுக்கும் காரணமாக விளங்குவது சிவலிங்கம் ஆகும். திருமாலும், பிரம்மனும் பிணங்கிய போது (மாறுபட்ட தருணம்) இடையில் ஒளி வடிவாய் நின்ற குறிப்பும் சிவலிங்கத்தையே குறிக்கிறது. இறைவன் அருட்பெருஞ்சோதி வடிவானவர். சோதி மேல் நோக்கி நிற்கின்றது. அது ஆன்மாவில் உயிருக்கு உயிராய் விளங்குகின்றது. ஆன்மா அறிவுப் பொருள். ஆன்மாவுக்கும் சிவத்துக்கும் இடையில் அருள் ஒளிர்கின்றது.

ஆன்ம சோதி, அருட்சோதி, சிவசோதி என்ற இம்மூன்றும் ஒன்று கூடியதே சிவலிங்கமாகும். சிவலிங்கத்தின் அடிவட்டம் ஆன்ம சோதி, சிவலிங்கத்தினை சூழ்ந்திருக்கின்ற ஆவுடையார் அருட்சோதி, மேல் நோக்கி இருக்கின்ற சிவலிங்கம்(பாணம்) சிவசோதி. இந்த மூன்றும் சேர்ந்து நமக்குச் சிவலிங்கமாகக் காட்சி அளிக்கின்றது. ஆன்மா (உயிர்), சிவபெருமானின் அருளைப் பெற்று சிவசோதியில் கலக்க வேண்டும் என்னும் தத்துவம் சிவலிங்க உருவத்தில் அமைந்துள்ளது.

சிவலிங்கம், நந்தி, பலிபீடம்

இறைவன் திருஅடையாளமே சிவலிங்கமாகும். இறைவன் அல்லாத மற்ற உயிர்களின்அடையாளமே நந்தி வடிவமாகும். அவ்வுயிர்களினால் நீக்கப்பட்ட அறியாமையாகிய யான் எனது என்னும் செருக்காகிய பசு பாசங்கள் தங்கி மங்குமிடமே பலியிடும் மேடை (பலிபீடம்) ஆகும்.

இக்கருத்தினை நன்கு விளக்கி பதி, பசு, பாச முப்பொருள் உண்மையினை அறிவிக்கும் பொருட்டே சிவலிங்கம், நந்தி பலிபீடமும் அமைந்த திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன.

"ஆய பதிதான் அருட்சிவ லிங்கமாம்
ஆய பசுவும் அடலேறு எனநிற்கும்
ஆய பலிபீடம் ஆகும்நற் பாசமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்துகொள் வார்கட்கே".

– திருமந்திரம் – 2372.

கோயிலில் சிவசந்நிதியில் இரண்டு நந்திகள் உண்டு. ஒன்று கோயிலின் முன் உள்ளது. இன்னொன்று சிவலிங்கத்தின் அருகில் உள்ளது. முன் பகுதியில் உள்ள நந்திக்குப் பலிபீடம் முகத்தின் பக்கம் உள்ளது. சிவலிங்கத்துக்கு அருகில் உள்ள நந்திக்குப் பலிபீடம் வாலின் பக்கம் பின்னால் அமைந்திருக்கும்.

இதன் பொருள் (என்னவென்றால்) சிவம் ஆன்மாவுக்குத் தூரமாய் இருக்கும் பொழுது பாசம் ஆன்மாவின் முன்னால் இருக்கும். சிவத்தை ஆன்மா நெருங்கினால் பாசம் பின்னோக்கிச் சென்று மறைந்து விடும் என்பதாகும்.

அதாவது ஆணவம் உள்ளவர்களுக்குப் பாசம் முந்தியும், ஆணவம் நீங்கித் தன்னையும் கடவுளையும் அறியும் அறிவு முதிர்ந்தபின் பிந்தியும் இருக்கும் (பாசம் பின் தள்ளப்படும்) என்பதே. பாசம் நீங்கப் பெற்றவர்கள் இறைவனடியைச் சேர்ந்து விடுவர்.

இறைக் காட்சி (ஆன்ம தரிசனம்)

"தன்னைஅறிந்து இன்பமுற வெண்ணிலா வே–ஒரு
தந்திரம்நீ சொல்லவேண்டும் வெண்ணிலா வே"

– திருஅருட்பா.

தனக்குத் தலைவனாகிய இறைவனை உணர்ந்து இன்பம் அடைய, நீயோர் உபாயத்தை எனக்குச் சொல்ல

வேண்டும் என வள்ளலார் நிலவைப் பார்த்துக் கேட்கின்றார்.

உயிராகிய தன்னையும் தான் வாழும் உலகத்தையும் கண்டு இரண்டுக்கும் உள்ள தொடர்பையும், இத்தொடர்பை உண்டாக்கிய இறைவனுக்கும், உலக உயிர்களிடம் அவனுக்குள்ள தொடர்பையும் எண்ணி அறிதலே தன்னை அறிதலாகும்.

. தான் சார்ந்திருக்கும் உடம்பின் வேறான தன்மையையும், தன்னைச் சார்ந்திருக்கும் இறைவனின் தன்மையையும் பிரித்துணர வேண்டும். தன்னை உணர்ந்த அறிவு கொண்டு, தன்னுள் ஒளிந்திருக்கும் தலைவனைத் தேடி உணர வேண்டும். இதுவே இறைக் காட்சியாகும்.

"தன்னை அறியத் தனக்கு ஒரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தான்இருந் தானே"

– திருமந்திரம் 2375.

தலைவனாகிய சிவபெருமானை அறிய, உயிராகிய தனக்கு எப்போதும் பிறப்பு இறப்புகளாகிய கெடுதல் உண்டாகாது. தனக்குரிய தலைவனை அறியாமையினால் தீவினைகளைச் செய்து பிறந்து இறந்து கெடுகின்றான். தன்னை அறியும் தனி அறிவை அறிந்த பின் சிவனை வழிபடுவார்கள். அப்படி உள்ளன்புடன் வழிபடுவதனால் அச்சிவபெருமான் அவர்கள் நல்லுள்ளத்தில் தானே வந்து அருட்காட்சி தந்து அங்கு வசிப்பான்.

"தன்னை அறியும் அறிவுதனைப் பெறில்
பின்னைப் பிறப்பில்லை வீடு".

– ஔவை குறள்.

(வீடு - முத்திநிலை)

"தன்னையும் தனக்கு ஆதாரத் தலைவனையும் கண்டானேல்
பின்னைஅத் தலைவன் தானாய் பிரமமாய் பிறப்புத் தீர்வான்
உன்னைநீ அறிந்தா யாகில் உனக்கொரு கேடும் இல்லை".

– கைவல்ய நவநீதம்–20.

முத்தி நிலை

உயிர்கள் இறைவன் திருவடியைச் சென்றடைதலே திருவடிப் பேறாகும். கலப்பால் சிற்றுயிரும் பேருயிரும் ஒன்றாக உள்ளன. பொருள் தன்மையால் அவ்விரண்டும் பெறுவானும் பேறுமாய் நிற்கும். பெறுவான் - சிற்றுயிர்; பேறு -பேருயிர் (இறைவன்). ஆன்மாவும் சிவனும் திருவருளால் வேறற நின்றும், இரண்டும் ஒன்று கூடும் கூட்டமே (சேர்க்கையே) ஒன்றுதலாகும்.

திருவருளால் சிற்றுயிரும் பேருயிரும் ஒன்றெனலும் இன்றி, இரண்டெனலும் இன்றி இரண்டற்கும் பொதுவாய்ப் புணர்ந்து வேறற நிற்கும் மெய்ம்மை விளங்கும். சிவமும் உயிரும் பொருள் தன்மையால் வேறாகவும், கலப்புத் தன்மையால் ஒன்றாகவும், உயிர்க்கு உயிராதல் தன்மையால் உடனாகவும் நிற்கும்.

"ஒன்றாலும் ஒன்றா(து); இரண்டாலும் ஓசையெழா(து)
என்றால், ஒன்று அன்று; இரண்டு இல்".

– திருவருட்பயன் – 75.

உயிரும் இறையும் ஒரு பொருளே என்றால் முத்தியில் அவை ஒன்றாக வேண்டுவது இல்லை. இரண்டு என்றால் பேரின்பம் உண்டாகாது. ஆதலின் அவை இரண்டும் முத்தி நிலையில் வேறு அற (இயைந்து) நிற்பதால் ஒன்று என்பதும் இல்லை; இரண்டு என்பதும் இல்லை. இரண்டு அல்லாதது (அத்துவிதம்) எனக் கூற வேண்டும்.

இதுவே ஒன்றோடொன்று கூடிப் பெறுவானும் பேறுமாய் வாழ்வதொரு தன்மையாகும். இதுவே சிவப்பணியும் திருவடிப்பேறும் ஆகும். கட்டு நிலையில் உயிர் ஆணவத்துடன் வேறற நிற்பது போல், ஒட்டு நிலையில் சிவத்துடன் வேறற நிற்கும்.

உயிர் இறைவன் திருவடிக்கீழ் அடங்கிச் சிவானந்த ஞானவடிவாகி என்றும் மாறாத பேரின்பத்தை நுகர்ந்து கொண்டிருக்கும். பிறவியற்ற முத்தி நிலை இதுவேயாகும்.

ஆருயிர் சிவனடிக்கீழ் அடங்கும்; அடங்கவே இருவரும் ஒருவராய் நிற்பர். இருவர் கலப்பும் பாலும் தேனும்; மலரும் மணமும்; உப்பும் நீரும் கலந்த கலப்பினை ஒக்கும்.

இவ்வுணர்வு அனுபவத்தால் தெரிவதன்றி, எண்ணத்தால் எண்ணவும் சொல்லாற் சொல்லவும் இயலாதது.

"ஊமைகண்ட சொப்பனம் போன்று உள்ளே அறிவதன்றி
நாமிதெனச் சொற்றிடவும் நண்ணுமோ"

– சிவஞான வள்ளலார்.

(சொற்றிடவும் - எடுத்துச் சொல்லவும்;
நண்ணுமோ - முடியுமோ)

முத்திப் பேறு என்பது உயிர் இறைவனின் திருவடி நிழலில் இருந்து என்றென்றும் மாறாத பேரின்பத்தை நுகர்வதே ஆகும். இத்திருவடிப் பேற்றால் பிறவிப் பிணி உடன் நீங்குதலும், பேரின்ப நுகர்வு என்றும் ஓங்குதலும் உண்டாகும்.

உச்சிக் கால நிழல், நீரில் தோன்றி அழியும் நீர்க் குமிழி, தீயினில் கற்பூரம் போன்று ஆருயிர் பிறவாநிலை எய்தும் பேறு வாய்ந்த பொழுது திருவருளில் கலந்து விடும். இதுவே முத்திப்பேறு (திருவடிப்பேறு) ஆகும்.



உ
சிவமயம்

திருமுறைகளின் சிறப்பு

சிவபெருமான் கயிலை மலையில் இருந்து தன் காது குளிரக் கேட்டு மகிழ்ந்த நூல் நம் திருமுறைகள். 'திருக்கயிலாய ஞான உலா', 'பொன்வண்ணத்து அந்தாதி' ஆகிய நூல்களைச் சேரமான்பெருமாள் நாயனாரிடம் கேட்டு மகிழ்ந்தார்.

திருமுறைகள் அனைத்தும் பக்தி இலக்கியங்கள் ஆகும். நாயன்மார்களாலும், தவ முனிவர்களாலும், சிவபக்திமான்களாலும், அருளிச் செய்யப் பெற்றவையாகும். திருவாசகத்தை மணிவாசகர் சொல்லத் தம் திருக்கரத்தினால் எழுதி 'மகிழ்ந்து' சிறப்பித்தவர் சிவபெருமான்.

எடுத்துள்ள இம்மானிடப் பிறவியைப் பயன்படுத்தி, பிறவாப் பெருநிலையாகிய சிவபதவியை அடைந்து மாறிலா இன்பத்தை அடைவதற்கு திருமுறைகள் நமக்குப் பெரிதும் உதவுகின்றன. ஆன்ம விடுதலை ஒன்றே முடிந்த நிலையாகும்.

"நெக்கு நெக்கு நினைப்பவர் நெஞ்சுளே
புக்கு நிற்கும் பொன்னார் சடைப்புண்ணியன்"

"மனத்தினால் மருகற் பெருமான் திறம்
நினைப்பினார்க்கு இல்லை நீள்நில வாழ்க்கையே"

என்பன திருநாவுக்கரசரின் திருவாக்கு ஆகும். எப்போதும் சிவச்சிந்தனையுடன் இருப்பவர்களுக்கு மறுபிறவி இல்லை என்பது தெளிவாகிறது.

பாடல்கள் ஒரு தலத்தைக் குறித்துப் பாடப்பட்டதானாலும், அவை எல்லாத் திருத்தலங்களுக்கும் பொருந்துபவைகளேயாகும். எத்தலத்திலும் முழுமுதற் கடவுளான சிவபெருமானே

கோயில் கொண்டுள்ளான். நமக்கு அருகில் உள்ள எத்தலத்திற்குச் சென்றும், எங்கிருந்தும் (வீடுகளிலும்) எத்தலத்துப் பாடல்களையும் பாடிப்பரவி பயன்பெறலாம். அவ்வத் தலங்களுக்குத்தான் செல்ல வேண்டுமென்பதில்லை.

"எங்கேனும் இருந்து உன்அடியேன் உனை நினைந்தால்
அங்கே வந்து என்னோடும் உடனாகி நின்றருளி
இங்கே என் வினையை அறுத்திட்டு எனை ஆளும்
கங்கா நாயகனே கழிப்பாலை மேயவனே".

– சுந்தரர்.

இறைவனை வழிபடுவது மன அமைதிக்கும், மகிழ்ச்சிக்குமாகும். நிலையில்லாது உலக பந்தங்களில் கட்டுண்டு அலைந்து திரியும் மனம், ஆலய வழிபாட்டினாலும், இறை வழிபாட்டினாலும் அமைதி பெறும். திருமுறை வழிபாடு வினையையும், பாவத்தையும் நீக்கியருளும். அதனால் சிவகதி கிடைக்கும்.

"நினைப்பார்தம் வினைப்பாரம் இழிப்பான் கண்டாய்"

"தொழுவார் அவர் துயராயின தீர்த்தல் உன்தொழிலே"

இவைகள் அப்பர் பெருமானின் அருள் வாக்கு.

"தன்னடைந்தார்க்கு இன்பங்கள் தருவானை "

"பரவின அடியவர் படுதுயர் கெடுப்பவர் ".

– திருஞானசம்பந்தர்.

"பாடுவார் பசிதீர்ப்பாய் பரவுவார் பிணிகளைவாய்"

– சுந்தரர்.

"இப்பிறவி ஆட்கொண்டு இனிப்பிறவாமே காத்து".

"முன்னை வினைஇரண்டும் வேரறுத்து முன்னின்றான்".

–மாணிக்கவாசகர்.

இருபத்தேழு அருளாளர்கள் அருளிய பன்னிரு திருமுறைப்பாடல்கள் மொத்தம் 18,357 ஆகும். அவற்றுள் திருமுறைக்கு ஒரு பாடலும், மற்ற அருளாளர்கள் அருளிய

பாடல்கள் சிலவும் உரையுடன் இங்கு கொடுக்கப்பட்டுள்ளன. இவற்றை மனமுருகித் தினமும் ஓதி வழிபட்டால் நாமும் நற்கதி பெறுவோம் என்பது உறுதி.

திருமுறைப் பாடல்கள்

திருஞானசம்பந்தர் அருளிய முதல் மூன்று திருமுறைகள்.

முதல் திருமுறை (திருக்கோளிலி பதிகம்)

1. *"நாளாய போகாமே நஞ்சணியும் கண்டனுக்கே*
ஆளாய அன்புசெய்வோம் மடநெஞ்சே அரன்நாமம்
கேளாய்நம் கிளைகிளைக்கும் கேடுபடாத் திறம் அருளிக்
கோளாய நீக்கும்அவன் கோளிலிஎம் பெருமானே".

வாழ்நாட்களை வீணாகக் கழிக்காமல், விடத்தை அடக்கியுள்ள திருநீலகண்டனாக விளங்கும் சிவபெருமானுக்கே உரிய ஆளாகி அன்பு செய்வோமாக. பேதைமை உடைய நெஞ்சமே! அரனுடைய திருப்பெயரைக் காதுகுளிரக் கேட்பாயாக; அது நம் வழிவழியாக வரும் தலைமுறையினருக்கும், அழிவில்லாத உயர்நியைில் நிலைத்த பொருளாய் இருந்து துன்பங்களை நீக்கும். அத்தகைய பெருமான் திருக்கோளிலி என்னும் திருத்தலத்தில் உறைகின்றான்.

2. இரண்டாந் திருமுறை(திருவெண்காட்டு பதிகம்)

"உண்டாய் நஞ்சை உமையோர் பங்கா என்றுஉள்கித்
தொண்டாய்த் திரியும் அடியார் தங்கள் துயரங்கள்
அண்டா வண்ணம் அறுப்பான் எந்தை ஊர்போலும்
வெண்தா மரைமேல் கருவண்டு யாழ்செய் வெண்காடே"

பாற்கடலில் தோன்றிய நஞ்சினை உட்கொண்டு தேவர்களையும் மற்ற உயிர்களையும் காத்தருளிய உமை ஒரு பாகனே! என்று மனம் உருகிப் போற்றித் தொண்டு புரியும் அடியவர்களுக்குத் துன்பங்கள் நெருங்காதவாறு அருள் புரிந்து காக்கும் எம் தந்தையாகிய சிவபெருமான் விளங்கும் ஊரானது; வெள்ளைத் தாமரை மலர்மீது கருமைநிற வண்டுகள் அமர்ந்து தேன் உண்டு மகிழ்ந்து யாழின் இசை போன்று ஒலி எழுப்புகின்ற வளமை மிகும் திருவெண்காடு ஆகும்.

3. மூன்றாம் திருமுறை (பொது)

"தும்மல் இருமல் தொடர்ந்த போழ்தினும்
வெம்மை நரகம் விளைந்த போழ்தினும்
இம்மை வினைஅடர்த்து எய்தும் போழ்தினும்
அம்மை யினுந்துணை அஞ்செ ழுத்துமே".

தும்மல், இருமல் முதலிய நோய்கள் இடைவிடாது தொந்தரவு கொடுத்து நம்மை வருத்தினாலும், கொடுமையான நரகத்துக்குச் சென்று துன்பம் அனுபவிக்க நேர்ந்தாலும், முற்பிறவிகளில் செய்த பழைய வினைகள் இப்பிறவியில் வந்து நெருங்கித் தாக்கினாலும், இப்பிறவியிலும் அடுத்த பிறவியிலும் நமக்கு நல்ல துணையாக வந்து காப்பது 'சிவாயநம' எனும் மந்திரமாகும்.

4. திருநாவுக்கரசர் அருளிய நான்கு, ஐந்து, ஆறாம் திருமுறைகள்.

நான்காம் திருமுறை (திருப்பாதிரிப்புலியூர் பதிகம்)

"கருவாய்க் கிடந்துஉன் கழலே நினையும் கருத்துடையேன்
உருவாய்த் தெரிந்துஉன்றன் நாமம் பயின்றேன் உனதருளால்
திருவாய் பொலியச் சிவாய நமவென்று நீறுஅணிந்தேன்
தருவாய் சிவகதி நீபா திரிப்புலி யூர்அரனே".

திருப்பாதிரிப்புலியூர் தலத்தில் வீற்றிருக்கும் சிவபரம்பொருளே! இம்மண்ணுலகில் பிறந்து தேவரீரின் திருவடிகளையே நினைந்திருக்கும் கருத்துடையவன் ஆனேன். உம்முடைய திருப்பெயரினைத் தெரிந்து உமது திருவருளால், வாயின் செம்மை விளங்க 'சிவாயநம' என்று ஓதித் திருவெண்ணீறு அணிந்தேன்; எனக்குப் பிறவியற்ற சிவகதி நிலையைத் தந்தருள்வாயாக.

மனத்தால் சிந்தித்தல், வாயினால் திருப்பெயரைக் கூறுதல், உடலில் நீறணிதல் ஆகிய மூன்றினாலும் (மனம், மொழி, மெய்) இறைவனை வணங்க வேண்டும்.

5.ஐந்தாம் திருமுறை (திருவண்ணாமலைப் பதிகம்)

"தேடிச் சென்று திருந்தடி ஏத்துமின்
நாடி வந்துஅவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண்ணாமலை கைதொழ
ஓடிப் போம்நமது உள்ள வினைகளே".

திருவண்ணாமலையில் எழுந்தருளியிருக்கும் சிவபெருமானை மனதார எண்ணிச் சென்று, அப்பெருமானின் தூய மலர்ப்பாதங்களைப் போற்றி வழிபாடு செய்யுங்கள்; பக்தியில் திளைத்து மெய்ம்மறந்து கூத்தாடுங்கள்; கசிந்து உருகித் திருப்பாடல்களைப் பாடுங்கள்; கைதொழுது வணங்குங்கள். அப்படிப்பட்ட நிலை கைவருமானால், அப்பெருமான் நமது உள்ளத்தைத் தம் திருக்கோயிலாகக் கொண்டு எழுந்தருளி நம்மை ஆட்கொள்வான். நம்முடைய வினைகள் யாவும் நம்மை விட்டு ஓடிப்போகும்.

6. ஆறாந்திருமுறை (தனித்திருத்தாண்டகம்)

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொரு ளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓர் ஊரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாய்என் நெஞ்சம் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம்முத்தும் நீ
இறைவன் நீ ஏறூர்ந்த செல்வன் நீயே.

சிவபெருமானே! எனக்குத் தந்தையும் தாயும் தலைவரும் ஆனவர் நீயே. மிகுந்த அன்புடைய மாமன் மாமியும் நீரே. ஒப்புவமையாகக் கருதப்படும் மனைவியும், விளங்கும் எல்லாப் பொருள்களும் ஆனவர் நீயே. குலம், சுற்றம், ஊர் மற்றும் நான் உண்பனவும் அனுபவிப்பனவும் ஆகிய யாவற்றையும் ஆக்குபவர் நீரே. என் உள்ளத்தில் துணையாக இருப்பவரும்; பொன், மணி, முத்து போன்ற மதிப்புள்ள பொருள்களாக விளங்குபவரும் நீரே ஆவீர். இடப வாகனத்தில் எழுந்தருளி எனக்குக் காட்சி தரும் இறைவனும் நீரேயாக விளங்குகின்றீர்.

7. சுந்தரமூர்த்தி சுவாமிகள் அருளிய ஏழாந் திருமுறை (திருவாரூர்த் திருப்பதிகம்)

அந்தியும் நண்பகலும் அஞ்சுபதம் சொல்லி
முந்தி எழும்பழைய வல்வினை மூடாமுன்
சிந்தை பராமரியாத் தென்திரு வாரூர்புக்கு
எந்தை பிரானாரை என்றுகொல் எய்துவதே.

காலை, மாலை நேரங்களிலும், நடுப்பகலிலும், ஐந்தெழுத்தை நாவால் உச்சரித்துக் கொண்டு சிவபெருமானை மனத்தில் அன்புடன் இருத்தி, முன்பு செய்த கொடிய வினைகள் வந்து மனத்தைக் கலக்கி,

அறிவு கலங்குமாறு தாக்குவதற்கு முன்பே இனிய திருவாரூர் சென்று, தலைவனாகிய எம்பெருமானை என்று நான் சென்று அடைவேன்.

அஞ்சுபதம் - **'சிவயநம'** என்னும் ஐந்தெழுத்தும் தனித்தனி சொல்லின் முதலெழுத்தாகும். அவை முறையே சிறப்பு, வனப்பு, யாப்பு, நடப்பு, மறைப்பு எனப்படும். இவற்றை முறையே சிவன், சத்தி, சீவன், திரோதாயி, மலம் என்பர்.

8. மாணிக்கவாசகர் அருளியது :-

எட்டாந் திருமுறை (திருவெண்பா)

முன்னை வினைஇரண்டும் வேரறுத்து முன்னின்றான்
பின்னைப் பிறப்பறுக்கும் பேராளன் – தென்னன்
பெருந்துறையின் மேய பெருங்கருணை யாளன்
வருந்துயரம் தீர்க்கும் மருந்து.

என்னுடைய முற்பிறவிகளில் நான் செய்த நல்வினை தீவினை இரண்டும் என்னை வந்து தாக்காது, அவைகளின் வேரை முழுதும் அறுத்து; என்னுடைய எதிரில் வந்து எனக்குக் காட்சியளித்தான். இனிவரும் பிறப்பினையும் தொலைத்த பெருமை உடையவனும், திருப்பெருந்துறைப் பதியில் இருக்கும் பெருங்கருணையாளனும் ஆகிய சிவபெருமான் இனிமேல் எனக்கு வரும் எவ்வித துன்பங்களையும் தீர்க்கும் மருந்தாவான்.

9. சேந்தனார் அருளிய திருப்பல்லாண்டு (கோயில்)

ஒன்பதாந் திருமுறை

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு
பெற்றேன்; பெற்றதார் பெறுவார் உலகில்?
ஊரும் உலகும் கழற
உளறி உமைமண வாளனுக்கு ஆட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே.

(பாடல் எண் - 7)

சிறந்த புகழும், திருவருட் செல்வமும் மிக விளங்கச் சிவலோகத்தைத் தனது இடமாக உடைய தலைவனது சிவந்த திருவடியின்கீழ் இருந்து, பிறர் எவரும் பெறுதற்கரிய ஞானத்தைப் பெற்றேன். இவ்வுலகினில் நான் பெற்ற பேற்றை யார் பெற வல்லவர் என்று ஊரில் உள்ளவர்களும், உலகத்தவர்களும் புகழ்ந்து பேசவும்; உமாதேவியின் கணவனாகிய சிவபெருமானுக்கு ஆட்பட்ட தன்மையினை இவ்வுலகில் உள்ளவர்களும் தேவலோகத்தில் உள்ளவர்களும் அறிந்து போற்றும் வகையில் பக்தி மேலீட்டினால் நாக்குக் குளறி, அச்சிவபெருமானைப் புகழ்ந்து பல்லாண்டு வாழ்க எனக்கூறி நாம் போற்றுவோம்.

10. திருமூலர் அருளிய திருமந்திரம் (சரியை)

பத்தாந் திருமுறை

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே.

(பாடல் எண் - 1518)

சிவபெருமானின் மெய்யடியார்கள் உய்யுமாறு, ஆங்காங்கு வெளிப்பட்டருள்கின்ற திருநாடு, திருநகரம், திருக்கோயில் முதலியவற்றை மிகுந்த அன்பால் தேடித் திரிந்து தொழுவர். அப்படித் தொழுபவர்களுக்கு உள்ளும் புறமும் இன்றியமையாதன முறையே பாடுதலும் பணிதலும் ஆகும். அவ்வகை செய்வார் உள்ளங்களைச் சிவபெருமான் தன் திருக்கோயிலாகக் கொண்டு அவர்கள் மனத்தில் எழுந்தருள்வான்.

11. சேரமான் பெருமாள் நாயனார் அருளியது

(பொன்வண்ணத்தந்தாதி)

பதினோறாந் திருமுறை

வேண்டிய நாள்களில் பாதியும்
கங்குல் மிக அவற்றுள்
ஈண்டிய வெந்நோய் முதலது
பிள்ளைமை மேலது மூப்பு
ஆண்டின் அச்சம் வெகுளி
அவாஅழுக் காறு இங்ஙனே
மாண்டன சேர்தும் வளர்புன்
சடை முக்கண் மாயனையே.

மக்களுக்கு விதிக்கப்பட்ட ஆயுளின் மொத்த நாட்களில் பாதி இரவில் தூங்கிக் கழிந்து விடுகின்றது. மீதி உள்ள நாட்களில் பெருகிவரும் கொடிய நோய்கள் வருத்துகின்றன. பிள்ளைப் பருவமும், அதன் பின்னர் முதுமைக் காலமும்; பயம், கோபம், பேராசை, பொறாமை, என்னும் இவற்றோடு இறப்பும் வரும். ஆகையால் இதை உணர்ந்து, நீண்ட சிவந்த சடையுடைய மூன்று கண்களைக் கொண்டுள்ள சிவபெருமானை சேர்வதுவே அறிவுடைமையாகும்.

12. சேக்கிழார் அருளியது :–


(பத்தராய்ப் பணிவார் புராணம்)
பன்னிரண்டாந் திருமுறை.

"நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடும் மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணமிக்கார்".

(பாடல் எண்- 7)

நிற்கும் போதும், உட்கார்ந்திருக்கும்போதும், படுத்திருக்கும்போதும், நடக்கும் போதும், உணவு. உண்ணும் போதும், மற்றும் எச்செயல்களைச் செய்யும் போதும்; அம்பலத்தில் ஆடல் புரியும் சிவவெருமானின் மலர்ச் சிலம்படியை ஒருபோதும் (கண நேரமும்) மறவாது இருத்தலே குறைவுபடாத பக்தி உணர்வு உடைய நற்குணமிக்க திருத்தொண்டர்கள் செய்கையாக அமைந்திருக்கும்.

திருச்சிற்றம்பலம்.



உ

சிவமயம்

மாணிக்கவாசகர் அருளிய சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

(மூலம்)

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க

இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க

கோகழி ஆண்ட குருமணிதன் தாள்வாழ்க

ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க.

வேகம் கெடுத்துஆண்ட வேந்தன் அடிவெல்க

பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க

புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க.

கரம்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க

சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல்வெல்க.

உ

சிவமயம்

சிவபுராணம்

(எளிய உரை)

சிவபெருமானின் (திருமேனிகளில் ஒன்றான அம்பலவாணரின்) திருஉருவாகவே விளங்குவதும், சிவத்துக்கே உரித்தானதும், நான்கு வேதங்களின் நடுநாயகமாக மெய்ப்பொருளாக விளங்குவதும், ஓதுவார் நாவினுக்கு அருங்கலமாக விளங்குவதும், நன்னெறியாகிய முத்தி நிலையைக் காட்டுவதும், மாமந்திரமுமாகிய **'நமச்சிவாய'** என்ற திரு ஐந்து எழுத்து வாழ்க; அவ்வைந்தெழுத்தின் பொருளாய் (ஒலிவடிவில்) விளங்கும், தலைவனாக விளங்கி நிற்கும் இறைவனது திருவடி வாழ்க. கண் இமைக்கும் ஒரு கண நேரமும் என் உள்ளத்தினின்றும் அகலாதவனுடைய திருவடி வாழ்க; திருப்பெருந்துறை(திருக்கோகழி) தலத்தில் ஞான குருவாக எழுந்தருளி அடியேனின் பாசத்தன்மையை நீக்கி ஆட்கொண்டருளிய நாதனாகிய மாணிக்க மணியின் மலரடி வாழ்க. சிவபெருமானைச் சென்று அணுக வைக்கும் ஞான நூல்களின்(ஆகமப்) பொருளாய் விளங்கி நின்று அணுகி அருள் புரிபவனுடைய திருவடி வாழ்க. ஒருவனாக இருந்தே அடியார்களின் பொருட்டு பல உருவங்களை உடையோனாய், எப்பொருளிலும் தங்குவோனுடைய திருவடி வாழ்க.

அடியேனை தொடக்க காலம் முதல் (அநாதியாய்) தொடர்ந்து வரும் ஆணவத்தால் விளையும் வினையின் விரைவை அறவே ஒழித்து ஆண்டருளிய தலைவனுடைய திருவடிகள் வெற்றி பெறுக. பக்குவப்பட்ட உயிர்களின் பிறவியை அறுத்து மாற்றுகின்ற சடைமுடியை உடைய சிவபெருமானது வீரச்சிலம்பு (பூண்) அணிந்த திருவடிகள் வெற்றி பெறுக. அன்பர் அல்லாதார்க்கு எட்டாதவனான இறைவனுடைய மென்மையான திருவடிகள் வெற்றி அடைக. யாவும் நின்செயலே என்று செயலடங்கி நின்று கை கூப்பித் தொழும் அன்பர்கள் உளத்தேகண்டு மகிழும்படியான திருவடிகள் வெற்றி பெறுக. தமது தலையால் வணங்கும் மெய்யடியார்களை உயர்ந்த சிவத்தியில் இருத்துகின்ற சிறப்புடையோனுடைய திருவடி வெற்றி பெறுக.

ஈசன் அடிபோற்றி எந்தைஅடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடிபோற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி

ஆராத இன்பம் அருளும்மலை போற்றி
சிவன்அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் 'சிவபுராணம்' தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற்கு எட்டா எழில்ஆர் கழல்இறைஞ்சி,
விண்நிறைந்தும் மண்நிறைந்தும் மிக்காய்,
விளங்குஒளியாய்,
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்.

உயிராக நிற்கும் சிவபெருமானது திருவடிக்கு வணக்கம். எமது ஞான குருவினுடைய திருவடிக்கு வணக்கம். ஒளி வடிவினனுடைய திருவடிக்கு வணக்கம். சிவபரம்பொருளின் சிவந்த திருவடிக்கு வணக்கம். அடியவர்களின் அன்பு வலையில் நிலைபெற்று விளங்கும் மாசற்றவனுடைய திருவடிக்கு வணக்கம். மாயாகாரியமாகிய பிறவிப் பிணியை வேருடன் களைகின்ற இறைவனது திருவடிக்கு வணக்கம். சிறப்புப் பொருந்திய திருப்பெருந்துறையில் வீற்றிருந்தருளும் நமது கடவுளது திருவடிகட்கு வணக்கம். தெவிட்டாத பேரின்ப சுகத்தை மெய்யடியார்களுக்கு உதவுகின்ற மலைபோன்ற திருவருளுடையவனுக்கு வணக்கம்.

சிவமூர்த்தியாகிய அப்பெருமான் அடியேனுடைய நினைவினுள் நிலை பெற்றிருக்கின்றபடியால், அப்பெருமானுடைய திருவருளினாலே உள்ளம் மகிழ்ந்து அவனுடைய திருவடிகளைத் தொழுது, அவன் திருவுள்ளம் உவகையடையும்படி சிவனது தொடக்கமும் முடிவும் இல்லாத பழைமை முறைமையினை**(சிவபுராணம்)**. முன்னைய எண்ணற்ற பிறவிகள் தோறும் அனுபவித்து எஞ்சிய வினை வகை யாவற்றையும் விட்டொழிக்கும் பொருட்டு அடியேன் சொல்வேன்.

நெற்றிக் கண்ணையுடைய சிவபெருமான் தனது திருவருளாகிய அருட்கண்ணால் வழிகாட்ட அவ்வழியே அப்பெருமான் திருமுன்பு வந்தடைந்து, மனத்தால் நினைப்பதற்கும் எட்டாத அழகு நிறைந்த அவனது திருவடிகளைத் தாழ்ந்து வணங்கி; விண்ணுலகம், மண்ணுலகம், முழுவதும் மிகுந்து பரவி அவ்வளவில் அடங்காமல் அதற்கு அப்பாலும் மேம்பட்டு நிறைந்தவனே! சிறந்த பேரொளி வடிவினனே! எண்ணிக்கையின் அளவைக்கடந்து எல்லையற்று விரிந்தவனே! உனது பெரும் புகழினை, தீவினை உடையேன் ஆகிய நான் புகழ்ந்து துதிக்கும் வகை இன்னதென்று ஒன்றையும் அறியாதவனாக இருக்கின்றேன்.

புல்ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரம்ஆகிப்
பல்விருகம் ஆகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்துஇளைத்தேன், எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டுஇன்று வீடுற்றேன்
உய்யஎன் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
"ஐயா!", என ஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே.

வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினஎல்லாம் போய் அகல வந்தருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

புல்வகைகளாகவும், பலவகைச்செடி வகைகளாகவும், புழுக்களாகவும், மரங்களாகவும், பலவகைப்பட்ட விலங்குகளாகவும், பறவைகளாகவும், பாம்புகளாகவும் பிறந்தும், கற்களாகவும்(கல் மலை குன்று போன்று அசைவற்று உயிர்கள் இருக்கும் ஒருவகைப் பிறப்புநிலை), மனிதர்களாகவும் பேய்களாகவும், பூதர், சித்தர் முதலிய கூட்டங்களாகவும் வலிய அரக்கராகவும் முனிவர்களாகவும். வானவர்களாகவும், படைக்கப்பட்டு வந்துள்ள அசையும் அசையாப்பொருள்களான இவற்றுள் எல்லாப் பிறவிகளிலும் பிறந்து மிகவும் மெலிவடைந்தேன் எம்முடைய தலைவனாகிய சிவனே!

உண்மைப்பொருளாக விளங்குபவனே! உண்மையாகவே உன்னுடைய அழகிய திருவடிகளைக் கண்டு இன்று பிறவிப் பிணியிலிருந்து நீங்கி விடுதலை அடைந்தேன்; அடியேன் கடைத்தேற வேண்டி என் மனத்தில் பிறவிக் கடலைக்கடக்குமாறு செய்து முத்தி அளிக்க வல்ல தனி மந்திரமாகிய **'ஓம்'** என்னும் பிரணவமயமாய் விளங்கிய பரம் பொருளே! மாசற்றவனே! எருதின் மீது ஊர்ந்தவனே! அறிவு (சமயமுதல்) நூல்கள் இறைவனை அறியமுடியாமல் நின்று ஏங்கி, தலைவனே என்று துதிக்க, உயர்ந்தும் ஆழ்ந்தும் (அழுந்தியும்) அகன்றும் (விரிந்தும்) நுட்பமாகவும் நின்ற பெருமானே!

வெம்மை உடையவனே! குளிர்ச்சி உடையவனே! உயிர்களின் ஆன்மவடிவில் விளங்கும் தலைவனாகிய தூயவனே! பொய்யாகத் தோன்றும் இவ்வுலக வாழ்வு அகன்று போமாறு, குருவடிவாக வந்து அருள்புரிந்து உண்மை அறிவுவடிவாகி ஒளிர்கின்ற உண்மை ஒளியே! எவ்வகையான மெய்யறிவும் இல்லாத எனக்குப் பேரின்பத்தை அருளுகின்ற சிவபெருமானே! அறியாமையைப் போக்குவிக்கும் பேரறிவாய் விளங்குபவனே.

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தால் போலச்
சிறந்துஅடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள்ஓர் ஐந்துஉடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை

தோற்றமும் எல்லையும் முடிவும் இல்லாதவனே! எல்லா உலகங்களையும் உயிர்களையும் படைப்பாய் (உயிர்களுக்கு வேண்டியவற்றைத் தோற்றுவித்தல்); காப்பாற்றுவாய் (அறியாமையைத்தேய்த்து அறிவு வளரச் செய்தல்); ஒடுக்குவாய் (உடல், கருவிகள், உலகு, உண்பொருள்களை நீக்குதல்); முடிவில் பக்குவ ஆன்மாக்களுக்கு அருளையும் தருவாய் (பக்குவம் வருவித்தல்); வினைகளைப் போக்கி பிறவி நோயை ஒழிப்பாய் (பலன் தருவித்தல்-பேரின்பம் வழங்குதல்); அடியேனை உனது திருத்தொண்டில் புகுமாறு செய்வித்து, உன்னை அடையும் செம்மையாகிய நெறியைத் தருபவனே! மலரின் மணத்தைவிட நுட்பமானவனே! (மலர் மணம்போல் அடியவர் உள்ளத்தில் இறைவன் இருப்பன்) வணங்காதவர்க்கு (சாராதார்க்கு) தூரமாயும், அடைந்தவர்க்கு (அன்பர்களுக்கு) அருள் புரிபவனாயும் உள்ளவனே! சொல்லுக்கும் நினைவுக்கும் எட்டாமல் அப்பாற்பட்டு அந்தரங்கமாக (மறைவாக) உள்ளவனே!

கறந்த பாலுடன் சருக்கரையும் தேனும் கலந்தது போல மிகுந்த அன்புடையவரது மனத்தினுள்ளே தேன் போன்று இனிதாக ஊற்றெடுக்குமாறு நிலைத்து விளங்கி; யானெடுத்த இப்பிறவியை ஒழிக்கின்ற பெருமையில் சிறந்த எம்சிவனே! ஒப்பற்ற படைப்பு முதலிய ஐந்தொழிலுக்குக் காரணமாகிய ஐந்து உருவங்களைக் கொண்டவனே (ஐம்பெரும் பேராற்றல் பொருள்களான மண், நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகியவற்றில் கலந்திருந்து அவற்றின் நிறங்கள் ஆகிய பொன்மை, வெண்மை, செம்மை, கருமை, புகைமை ஆகியவற்றைப் பெற்றிருப்பவன் இறைவன் எனவும் கூறுவர்). (நிறம்-உடல், வண்ணம்) தேவர்கள் உன்னைக் காண வேண்டிப் போற்றவும் அவர்களுக்கு வெளிப்படாமல் மறைந்திருந்தவனே எம் சிவபிரானே! கொடிய தீவினையேனாகிய என்னை.

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறம்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன்ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துஉள் உருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயில் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயில் சிறந்த தயாஆன தத்துவனே
மாசுஅற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன்ஆர் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றுஅறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சம்கெடப்

அறிவை மறையுமாறு மூடிய ஆணவ இருள் நீங்கும் பொருட்டு நல்வினை தீவினை என்னும் கடினமான இரு கயிறுகளால் கட்டி (அரிதாகிய பாசத்தினால் கட்டி) வெளியே தோலினால் மூடி, எவ்விடத்தும் நிறைந்துள்ள புழுக்களும் அழுக்குகளும்(மலசலம், எலும்பு, நரம்பு, இரத்தம் முதலியன) தெரியாமல் இருக்கும்படி மறைத்து, ஒன்பது வாயில்களிலும் (துவாரங்கள்) அழுக்கு ஒழுகுகின்ற உடம்பாகிய குடிசையை வருந்தும்படி (கலங்குமாறு) ஐம்புலன்களும் வஞ்சகம் (கொடுமை) புரிய;

அதனால் விலங்கு குணமான (எதிரில் நின்று தடுக்கும் குணம்) மாறுபடுகின்ற மனத்தினால், சிவபெருமானே உன்னிடம் கலந்த அன்பு மேலிட்டு மனம் கரைந்து உருகுகின்ற, நன்மை (உயர்வு) இல்லாத சிறியவனாகிய என்னை ஆட்கொள்ளும் பொருட்டு மனம் இரங்கி அருள்புரிந்து, நிலவுலகில் குருவடிவாக எழுந்தருளிவந்து, திருமால் தேடியும் எட்டாத நீண்ட ஒளிபொருந்திய திருவடிகளைக் காட்டி, நாயிலும் கடைப்பட்டு இழிவாகக் கிடந்த அடியேனுக்குப்;

பால் நினைந்து ஊட்டும் தாயினும் சிறந்த அருள்வடிவான உண்மைப் பொருளான கடவுளே! களங்கம் ஒரு சிறிதும் இல்லாத ஒளிமிகுந்த தீச்சுடர் போன்றவனே! ஒளி மயமானவனே! தேன்போன்று இனிமை நிறைந்த அமுதம் போன்றவனே! கைலாயபதியே! பந்த பாசங்களை (மும்மலங்களை) அறுத்துக் காத்தருளுகின்ற ஞான ஆசிரியனே! அன்போடு திருவருள் செய்து என் மனத்திலுள்ள சிறுமை (மாயம்) கெடுமாறு.

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவுஇலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே, உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே, துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்துஎன்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வும்இலாப் புண்ணியனே
காக்கும்எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றுஇன்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடர்ஒளியாய்ச் சொல்லாத நுண்உணர்வாய்

என் நெஞ்சை விட்டு நீங்காது நிலைத்து நின்று நிலைபெற்ற பேரருள் வெள்ளம் பெருக்குஎடுத்து ஓடும் நதியே! தெவிட்டாத இன்பக்கடலே (அமுதமே)! அளவற்ற பெருமைகளை உடைய பெருமானே! ஆராயாதவர் மனத்தில் விறகில் தீ மறைந்திருப்பது போல மறைந்து நிற்கின்ற ஒளி மயமானவனே! என் மனத்தை நீர் போன்று உருக(நெகிழ)ச் செய்து உடற்கு உயிர்போல என் உயிரின்கண் நிறைந்திருக்கின்ற இறைவனே! தனக்கென இன்பமும்(மகிழ்வும்); துன்பமும் (துயரமும்) இல்லாதவனே! அவைகளை உயிர்களின் ஈடேற்றம் கருதி பெற்றிருப்பவனே!

உன்னிடம் அன்புடையவர்களிடம் அன்பனாக இருப்பவனே! எல்லாப் பொருள்களும் ஆகியும், அவை அனைத்திலும் பற்றாது வேறாகி நிற்கும் ஒளிவடிவினனே! அடர்ந்த இருள் மயமாயும் இருப்பவனே! யாவருடைய புறக்கண்களுக்கும் தெரியாமல் உள்ள பெருமையுடையவனே! எப்பொருள்களுக்கும், எல்லா உலகங்களுக்கும் முதற் பொருளாக விளங்குபவனே! முடிவும் நடுவும் ஆகியும், அவைகள் அல்லாதவனாகியும் இருப்பவனே! காந்தம் இரும்பை இழுப்பதைப்போல இரும்பு மனத்தவனாகிய என்னை வலிந்து இழுத்து ஆண்டு கொண்டருளிய எமது ஞானகுருவாகிய கடவுளே! கூரிய மெய்யறிவினால் (உண்மைஞானம்) உளங்கொண்டு உணர்வாருடைய நினைவினாலும்;

காண்பதற்கு அரிதாகிய காட்சியே! நுட்பமாக உணர்வதற்கும் அரிதான மிக நுண்மையான உணர்வு மயமானவனே! இறத்தலும்(அழிதல்), பிறத்தலும் (உண்டாதல்), அவற்றின் கூடுதலும் (தொடர்பும்) இல்லாத புனிதப்பொருளே! உயிர்கள் எல்லாவற்றையும் தோன்றாத் துணையாக நின்று காத்தருளும் இறையவனே! காணுதற்கெட்டாத பேரொளி மயமானவனே! அடியவர்க்கு அருள்புரிகின்ற பேரின்பப் பெருக்கே! எமது தந்தையாகிய கடவுளே! நிலைபெற்று மிகுந்து நிற்கும் பேரொளிப் பிழம்பே! இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன் இவன் இறைவன் என்று சொல்லவொண்ணாத நிலையில் மிக நுட்பமாக உள்ளத்தில் உணர்வதால் மட்டும் அறிந்து கொள்ளும் பெருமை உடையவனாகி;

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குஉடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன்எம் ஐயா! அரனே! ஓ என்றுஎன்று


போற்றிப் புகழ்ந்துஇருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள்இருளில் நட்டம் பயின்றுஆடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

இடம், காலம், உயிர்கள், குணம், பிறப்பு முதலிய பலவகை மாறுபாட்டை உடைய இவ்வுலகில் வேறுவேறு நிலையினர்க்கு வெவ்வேறு உருவாய் (மூர்த்தியாக) வந்து காட்சியளித்து, மெய்ஞ்ஞானியரால் அறியக்கூடிய நிச்சயப்பொருளானவனே! தெளிந்தவர்க்குத் தெளிவான பொருளே! என்னுடைய மனத்தில் ஊற்றெடுத்துச் சுரந்து பெருகிவரும் உண்பதற்கு இனிய அரிதான அமிர்தம் போன்றவனே! என்னை அடிமையாகக் கொண்டவனே! வேறுவேறு வகையாக ஐம்பெரும் பொருள்களால் (பூதங்கள்) திரிவுபட்டுள்ள புலால் உடம்பினுக்குள் கிடக்கும் துன்பத்தை இனிப் பொறுக்கமாட்டேன் எமது தலைவனே! சிவபெருமானே! ஓ என்று பலவகையிலும் அலறித் துதித்து,

பலகால் முறையிட்டு வணங்கி உனது கீர்த்தியைப் புகழ்ந்த வண்ணமாகவே இருந்து அப்புகழ்ச்சியின் பயனால் பொய்மை(திரிபுணர்ச்சி) நீங்கி, மெய்யுணர்வு பெற்று ஞான வடிவாய் நின்றவர்கள் திரும்பவும் இவ்வுலகினிடம் வந்து வினையால் வரும் பிறவியை எடுக்காமல், வஞ்சனையைச் செய்யும் ஐம்புலன்களுக்கு உறைவிடமாகிய இவ்வுடம்பினால் உண்டாகும் கட்டினை (பாச பந்தங்களை) அழித்து ஒழிக்கவல்லவனே, உயிர்களின் இளைப்பைப் போக்கும் முற்றழிப்புக்குப்பின் எல்லா உயிர்களும், உணர்வும் செயலும் அற்று, அறியாமையாகிய இருளில் அழுந்திக் கிடக்கும் காலத்தில் இளைப்பு நீங்கிய உயிர்களின் நலத்தின் பொருட்டு யாவற்றையும் வழங்கி அருள நடு இரவில் இடைவிடாது பலகாலும் திருக்கூத்தை ஆடுகின்ற தலைவனே! (**"இரவாடும் பெருமானை என் மனத்தே வைத்தேனே"** - திருநாவுக்கரசர். **"இரவு எரியாடும் எம்மான்"** - காஞ்சிப்புராணம்). தில்லையம்பலத்துள் ஐந்தொழில் ஆடல் செய்பவனே! செந்தமிழ் சிறந்து விளங்கும் ஞானம் பொருந்திய பாண்டிய வளநாட்டைப் பதியாக உடையவனே!

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து. 95

திருச்சிற்றம்பலம்



பலவகைத் துன்பங்களுக்கு இடமாகிய பிறவியை ஒழிப்பவனே! ஓவென்று இரக்கத்தினால் கதறி, வாக்கினாற் சொல்லிப் புகழ்வதற்கும் அரியவனை, இயன்றமட்டும் பலகாற் புகழ்ந்து அவனது திருவடிகளில் அடங்கியிருந்து, திருவருள்மயமாக நின்று சொல்லிய சொல்மாலையின் **(சிவபுராணப்பாடலின்)** பொருளை உணர்ந்து துதிக்க வல்லவர்கள் (தவமுடையவர்கள்) யாவரும் சிவ உலகுக்குச் செல்வார்கள்; சென்றதோடு அமையாமல் பலரும் வணங்கித் துதிசெய்யப் பணிவுடையராய் சிவபெருமான் திருவடியின் கீழ்ப் பேரின்பம் அனுபவித்துக் கொண்டு இருப்பார்கள்.

திருச்சிற்றம்பலம்



விநாயகர் வணக்கம்

விநாயகனே வெவ்வினையை வேர்அறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான்–விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனும் ஆம்; தன்மையினால்
கண்ணில் பணிமின் கனிந்து.

–கபிலதேவ நாயனார்.

நம்முடைய தீவினைகளின் வேரை அறுக்கும் வல்லமை உடையவனும், நம் பொருட் பற்றை(பாசங்களை) நீக்க வல்லவனும், ஆகாயத்தில் உள்ள தேவர்களுக்கும், மண்ணுலகில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இறைவன் விநாயகப் பெருமானே ஆவான். இத்தன்மைகளினால் நன்மைகளைப் பெற எண்ணினால் மேலான அத்தலைவனை உள்ளம் உருகி அன்புடன் வணங்குவோம்.

முருகப்பெருமான் வணக்கம்

காக்கக் கடவிய நீகாவாது இருந்தக்கால்
ஆர்க்குப் பரம்ஆம் அறுமுகவா–பூக்கும்
கடம்பா முருகா கதிர்வேலா நல்ல
இடம் காண் இரங்காய் இனி.

–நக்கீரதேவர்.

ஆறுமுகம் கொண்ட வள்ளலே! என்னைக் காத்தருள வேண்டிய கடமைப்பட்ட நீயே பாதுகாக்காது இருந்து விட்டால் வேறு யாரால் காத்தருள முடியும். கடம்ப மலர் மாலையை அணிந்துள்ள முருகப்பெருமானே! ஒளியுடைய வேலைத் தாங்கியவனே! எனக்கு அருள்தர இதுவே ஏற்ற சமயமாகும் எனவே இப்போதே கருணைபுரிந்து உம்முடைய திருவருளைத் தர வேண்டுகிறேன்.

அம்மை வணக்கம்

கரும்புமுரல் கடிமலர்ப்பூங் குழல் போற்றி
உத்தரியத் தொடித்தோள் போற்றி
கரும்புருவச் சிலைபோற்றி கவுணியர்க்குப்
பால்சுரந்த கலசம் போற்றி
இரும்பு மனம் குழைத்துஎன்னை எடுத்தாண்ட
அங்கயற்கண் எம் பிராட்டி
அரும்பும்இள நகை போற்றி ஆரணநூ
புரம் சிலம்பும் அடிகள் போற்றி.

–பரஞ்சோதி முனிவர்.

இனிய ஒலி எழுப்பும் வண்டுகள் சூழ்ந்துள்ள மலர்களை அணிந்துள்ள கூந்தலுக்கு வணக்கம். மேலாடையும் ஆபரணங்களையும் அணிந்த திருத்தோள்களுக்கு வணக்கம். கருமைநிறப் புருவம் அமைந்த கண்கள் கொண்ட அழகிய திரு உருவமே வணக்கம். திருஞான சம்பந்தருக்கு பால் சுரந்தளித்த மார்பகங்களை உடையவளே வணக்கம்.

வலிய இரும்பு மனத்தை உடைய என்னை இளகச் செய்து ஆண்டு கொண்ட மதுரை மீனாட்சித்தாயே, நின் திருமுகத்தில் தோன்றும் புன்னகைக்கு வணக்கம். அழகிய காற்சிலம்புகள் ஒலிக்கும் திருவடிகளைப் போற்றுகின்றேன், என்னைக் காத்தருள 'வேண்டுகின்றேன்.

பெருமாள் வணக்கம்

தாழ்சடையும் நீள்முடியும் ஒண்மழுவும் சக்கரமும்
சூழ் அரவும் பொன்நாணும் தோன்றுமால்–சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து.

–பேயாழ்வார்.

நீண்டு தவழும் சடையும் (தலைமயிர்), ஒளி பொருந்திய உயர்ந்த தலைக் கிரீடமும், அழகிய மழு என்னும் ஆயுதமும், சக்கராயுதமும், உடலைச் சுற்றி உள்ள பாம்புகளும், மார்பில் விளங்கும் பொன் சரடும்(நமக்குத்) தோன்றுமானால்; நாற்புறமும் பாய்ந்தோடும் அருவிகள் சூழ்ந்துள்ள திருவேங்கட (திருப்பதி) மலை மேல் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இறைவன் சிவபெருமானாகவும், திருமாலாகவும் (ஓர்உருவில்) ஒரு சேரக் காட்சியளிப்பான்.

அகலில் அகலும் அணுகில் அணுகும்
புகலும் அரியன் பொருவல்லன் எம்மான்
நிகரில்அவன் புகழ் பாடி இளைப்பிலம்
பகலும் இரவும் படிந்து குடைந்தே.

–நம்மாழ்வார்.

நாம் இறைவன் உணர்வினை மறந்தோமானால் நம்மிடம் இறைவன் நெருங்கமாட்டான். அருள்துணை கொண்டு அவனை நாம் நெருங்கினால் (உள்ளன்புடன் வழிபட்டால்), அவனும் விருப்புடன் நம்மை நெருங்கிவருவான். அவனுடைய தன்மைகள் எடுத்துச் சொல்வதற்கு இயலாதது. அப்படிப்பட்ட ஒப்பில்லாத அருளாளனுடைய திருப்புகழினைப் பாடுவதில் சோராமல் (இடைவிடாமல்) இரவு பகல் எந்நேரமும் அவன் வசமாகித் திளைத்து அவன் திருவருளைப் போற்றுவோமாக.

தருதுயரம் தடாயேல்உன்
சரண்அல்லால் சரண்இல்லை
விரைகுழுவும் மலர்ப்பொழில்சூழ்
வித்துவக்கோட்டு அம்மானே
அரிசினத்தால் ஈன்றதாய்
அகற்றிடினும் மற்றுஅவள்தன்
அருள்நினைந்தே அழும்குழவி
அதுவேபோன்று இருந்தேனே.

–குலசேகராழ்வார்.

திருமாலே! எனக்கு வருகின்ற துன்பங்களை நீ நீக்கவில்லை என்றால், உன்னுடைய திருவடிப்புகல் அல்லாது வேறு புகலிடம் (சென்றடையும் இடம்) எனக்கு இல்லை. தேன் துளிர்க்கும் மலர்ச் சோலைகள் சூழ்ந்துள்ள வித்துவக்கோடு என்னும் தலத்துப் பெருமானே! தாய் தன் குழந்தையை கோபத்தினால் அடித்து விரட்டினாலும் மறுபடியும் அவளுடைய அன்புக்கே அக்குழந்தை ஏங்கி அழுவதைப் போல நான் உன்னுடைய திருவருளையே நாடுகின்றேன். என்னைக் காத்தருள வேண்டுகின்றேன்.

தெளிதாக உள்ளத்தைச் செந்நிறீஇ, ஞானத்து
எளிதாக நன்குணர்வார் சிந்தை எளிதாகத்
தாய்நாடு கன்றேபோல் தண்துழாயான் அடிக்கே
போய்நாடிக் கொள்ளும் புரிந்து.

– பொய்கையாழ்வார்.

உள்ளத்தைத் தெளிவானதாக்கி செம்மையான வழியில் நிறுத்தி, நல்லறிவினால் இறைவனைப் போற்றிப் பணிந்து நன்கு உணர்பவர்களின் மனம் (ஆன்மா), தாயை நாடிச் செல்லும் கன்றினைப் போல, துளசி மாலையை அணிந்துள்ள திருமாலின் திருவடியை அடைந்து நற்கதி பெறும்.

ஓங்கி உலகுஅளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றி நீராடினால்
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள்மும் மாரிபெய்து
ஓங்கு பெரும் செந்நெ லூடு கயலுகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக் குடம்நிறைக்கும் வள்ளல் பெரும்பசுக்கள்
நீங்காத செல்வம் நிறைந்தேலோர் எம்பாவாய்

–ஆண்டாள்.

நெடியோன் ஆகி உலகத்தை அளந்த உத்தமன் திருமால் ஆவான். அவன் திருப்பெயர்களைப் பாடி நாம் நீராடுவோம். அவ்வாறு நீராடினால் தீமையில்லாமல்

நாடுகள் எங்கும் மாதம் மூன்று முறை மழை பொழியும். அதனால் நெற்பயிர் ஓங்கி செழித்து வளரும். அப்பயிர்களின் இடையில் கெண்டை மீன்கள் துள்ளித் திரியும். அழகிய குவளை மலர்களிலே வண்டுகள் தேன் உண்டு மயங்கி உறங்கும்.

மாட்டுத் தொழுவம் சென்று பால் கரந்தால் பசுக்கள் பாலைத் தேக்கி வைத்துக் கொள்ளாமல், வள்ளல் போன்று சுரந்து குடங்களை நிரப்பும், இத்தகைய குறைவற்ற செல்வவளம் பெருகி நாடு செழிக்கும்.



உ
சிவமயம்

மற்ற அருளாளர்களின் பாடல்கள்

1. திருக்குறள்

(அ) கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்.

தூய அறிவு வடிவாய் விளங்கும் இறைவனுடைய திருவடிகளை ஒருவன் பற்றி நின்று நாளும் தொழுது ஏழவில்லை என்றால், அவன் கற்ற கல்வியால் விளையக்கூடிய பயன் என்ன?

(ஆ) கோளில் பொறியில் குணமிலவே எண்குணத்தான்
தாளை வணங்காத் தலை.

குற்றமில்லாத ஐம்பொறிகளைப் பெற்றிருந்தாலும் (மெய், வாய், கண், மூக்கு, செவி), அவை தத்தம் வேலையைச் செய்யவில்லையென்றால் பயனற்றவையே. அதைப் போலவே, மனித உடலின் சிகரமாய்த் தலை இருந்தாலும், அத்தலை எண்குணம் பெற்ற இறைவனுடைய தாளை வணங்காது போனால் பயன் இல்லையாம்.

(எண்குணம்: தன்வயத்தனாதல், இயற்கை உணர்வினனாதல், தூய உடம்பினனாதல், வரம்பில் இன்பமுடைமை, முற்றும் உணர்தல், இயல்பாகவே பாசங்களின் நீங்குதல், முடிவில் ஆற்றலுடைமை, பேரருள் உடைமை.)

2. பட்டினத்தார் பாடல்

கல்லாப் பிழையும், கருதாப் பிழையும், கசிந்துருகி
நில்லாப்பிழையும், நினையாப் பிழையும்,
நின்ஐந்தெழுத்தைச்
சொல்லாப்பிழையும், துதியாப் பிழையும்,
தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும், பொறுத்து அருள்வாய்
கச்சியேகம்பனே!

கச்சியம்பதியில் உறையும் ஏகாம்பரநாதனே! ஞான நூல்களைக் கற்காத குற்றத்தினையும், உன்னை எப்பொழுதும் நினைக்காத தவற்றினையும், மனம் உருகி ஞான நெறியில் நிற்காத குற்றத்தையும், நின்னைக் கசிந்துருகி உள்ளன்புடன் மனத்தில் எண்ணாத தவறினையும், . உன்னுடைய திருப்பெயராகிய ஐந்தெழுத்தை (நமசிவய, சிவ்யநம) உச்சரிக்காத பிழையையும், திருத்தொண்டர்களின் பாடல்களைப்பாடி வணங்காத குறையையும் ஆகிய எல்லாவகைக் குற்றங்களையும் பொறுத்தருளி எனக்கு நற்கதி அருள்வாயாக!

3. தாயுமானவர் பாடல்

எனக்குளே உயிர் என்ன இருந்தநீ
மனக் கிலேசத்தை மாற்றல் வழக்கன்றோ
கனத்த சீரருட் காட்சி அலாதுஒன்றை
நினைக்க வோஅறியாது என்றன் நெஞ்சமே.

உடலுக்குள் உயிர் இருந்து விளங்குவது போன்று என்னுள் உயிராய் இருக்கும் இறைவனே! என்னுடைய மனக் கவலையைப் போக்குவது உன்னுடைய அருட்செயல் அல்லவா! உன்னுடைய திருவருட்காட்சியை அல்லாது வேறு ஒன்றையும் என்னுடைய மனம் நினைக்காது.

4. திருவிளையாடற் புராணம்

கல்லாலின் புடையமர்ந்து நான்மறை ஆறு
அங்கம் முதல் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வர்க்கும் வாக்கு இறந்த
பூரணமாய் மறைக்கு அப்பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
இருந்தபடி இருந்து காட்டிச்
சொல்லாமல் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்.

கல்லால மரத்தின் கீழ் தென்முகக் கடவுளாக அமர்ந்து அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு அற நூல் பொருள்களையும், வேதத்தின் ஆறு பகுதிப் பொருள்களையும் கற்று வல்லவர்களான; சனகர், சனந்தர், சனாதனர், சனற்குமாரர் ஆகிய அருந்தவர் நால்வருக்கும், எல்லாமாயும் அல்லதுமாயும் உள்ளத்தின் உண்மையை உள்ளபடி காண்பித்து குறிப்பால் உணர்த்திய சிவபெருமானை, இடையறாமல் நினைந்து நம் பிறவியை நீக்கிக் கொள்வோம்.

வேதத்தின் ஆறு பகுதிப் பொருள்கள்

1. கல்விப் பயிற்சி, எழுத்துக்களின் உச்சரிப்பு பற்றிய நூல் *(சிட்சை)*
2. இலக்கண நூல் *(வியாகரணம்)*
3. வேத சொற்களை ஆராயும் நூல் *(நிருத்தம்)*
4. ஆயுள் பற்றி விளக்கும் நூல் *(கற்பம்)*
5. செய்யுளின் இசை, மற்றும் யாப்பு அமைப்பு பற்றிக்கூறும் நூல் *(சந்தம்)*
6. கோள் சார நூல் *(சோதிடம்)*

5. சிவபோக சாகரம்

ஏதேது செய்தாலும் ஏதேது சொன்னாலும்
ஏதேது சிந்தித்து இருந்தாலும் – மாதேவா
நின்செயலே என்று நினதருளாலே உணரில்
என் செயலே காண்கிலேனே.

எத்தொழிலைச் செய்தாலும், எப்பொருள் பற்றிக் கூறினாலும், எதைப் பற்றி நினைத்திருந்தாலும், பெருமானே! யாவும் உன் செயலே என்றும், உன்னுடைய திருவருளே யாவற்றுக்கும் (எச்செயலுக்கும்) காரணம் என்றும் உணர்ந்தால், என்னுடைய செயலாக எதையும் நான் காணமாட்டேன்.

6. சிவஞான சித்தியார்

சிவம்சத்தி நாதம் விந்து சதாசிவன் திகழும் ஈசன்
உவந்துஅருள் உருத்திரன் தான் மால்அயன் ஒன்றின்ஒன்றாய்
பவம்தரும் அருவம் நாலுஇங்கு உருவம்நாலு உபயம் ஒன்றாய்
நவம்தரு பேதம் ஏக நாதனே நடிப்பன் என்பர்.

சிவமாகிய அறிவும், சத்தியாகிய ஆற்றலும், ஒலி (நாதம்), ஒளி(விந்து) ஆகிய நான்கும் இறைவனுக்கு அருவத்திருமேனியாகும். மகேசன், உருத்திரன், திருமால், நான்முகன் ஆகிய நான்கும் உருவத்திருமேனி ஆகும். அருளோனாகிய சதாசிவம் (இலிங்கத்திருமேனி) அருவுருவத் திருமேனி ஆகும். அருவம், உருவம், அருவுருவம் என்னும் மூன்று நிலையும் கொண்ட ஒன்பது திருமேனிகளிலும் பொருந்தி; இறைவன் வேற்றுமையின்றி நின்று அந்தந்தத் தொழில்களைச் செய்து உலகினை இயக்கி அருளுகின்றனன்.

7. சிவஞான வள்ளலார் பாடல்

ஆலயமே காயம் அறிவே சிவலிங்கம்
மால்அயனும் காணாத வள்ளலுக்குச் – சீலமுறும்
அன்பே அபிடேகம் அன்பேநல் அர்ச்சனையும்
அன்பே நைவேத்தியமு மாம்.

நம் உடலே இறைவனின் சுற்றாலயமாகும். அறிவே (உள்ளம்) சிவலிங்கமாகும். திருமாலும் நான்முகனும் (அன்னமாகவும், பன்றியாகவும் சென்று) தேடியும் அடிமுடி காண முடியாத சிவபெருமானுக்கு, உறுதியான அன்பே திருமுழுக்காட்டாகும். நல்ல அன்பே மலர் முதலியன இட்டு மந்திரம் கூறிச்செய்யும் வழிபாடாகும். அன்பே இறைவனுக்குப் படைக்கும் காணிக்கையும் (உணவு) ஆகும்.

"அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"

– *திருமந்திரம்*

8. இராமலிங்கசுவாமிகள் பாடல்

தூக்கமும், சோம்பலும், துக்கமும் வாழ்க்கையைத்
தொட்டுவரும்
ஏக்கமும், நோயும், இடையூறும், மற்றைஇடரும் விட்ட
நீக்கமும் நின்மலநெஞ்சமும், சாந்தநிறைவும், அருள்
ஆக்கமும், நின்பதத்து அன்பும் தருக அருட்சிவமே.

அருளுருவாகிய சிவமே! மிகுதூக்கம், சோம்பல், துக்கம், வாழ்க்கையில் நேரும் ஏக்கம், நோய், தடைகள் மற்றும் பிற இடைஞ்சல்கள் ஆகிய இவற்றுள் எதுவும் நேரா வண்ணம் என்னைக் காத்து; மாசற்ற நெஞ்சமும், அமைதியான குணநிறைவும், அருளாகிய செல்வமும்; நின் திருவடிகளுக்கு அன்பு செலுத்தும் தன்மையினையும் எனக்குக் கொடுத்தருள வேண்டுகின்றேன்.

9. பதினாறு செல்வங்கள்

துதிவாணிவீறு, விசயம், சந்தானம், துணிவு, தனம்,
மதி, தானியம், சௌபாக்கியம், போகம், அறிவு, அழகு,
புதிதாம் பெருமை, அறம்குலம், நோயகல்,பூண்,வயது,
பதினாறுபேறும் தருவாய் மதுரைப் பராபரனே.

– காளமேகப்புலவர்.

மதுரையம் பதியில் எழுந்தருளியுள்ள சோமசுந்தரக் கடவுளே! கல்வியால் பெருமை, எடுத்த செயல்களில் வெற்றி, அறிவுள்ள குழந்தைப்பேறு, மனத்தெளிவு, வேண்டிய செல்வம், நல்லறிவு, உணவுத்தானியங்கள், மங்கல வாழ்வு, நிலைத்த இன்பம், அறிய வேண்டிய ஞானம், நல்ல தோற்றம், பிறரால் மதிக்கப்படும் சிறப்பு, அறக்குடி பிறப்பு, நோயற்ற வாழ்க்கை, நல்லணிவகைகள், நீண்ட ஆயுள் ஆகிய இப்பதினாறு வகைச் செல்வங்களும் எனக்குக் கிடைக்க அருள்புரிய வேண்டுகிறேன்.

10. வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க! மலிவளம் சுரக்க! மன்னன்
கோன்முறை அரசு செய்க! குறைவு இலாது
உயிர்கள் வாழ்க!
நான்மறை அறங்கள் ஓங்க! நற்றவம், வேள்வி மல்க!
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகம் எல்லாம்.

– கந்தபுராணம்.

மேகம் மழையைத் தவறாது பெய்ய வேண்டும். உலகில் மிகுந்த வளம் உண்டாக வேண்டும். அரசு நல்லாட்சியாக செயல்பட வேண்டும் உயிர்கள் யாவும் எவ்வித குறையும் இன்றி வாழவேண்டும். அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு அறநூல்களில் கூறப்பட்டுள்ள அறச்செயல்கள் யாவும் சிறக்க வேண்டும். வழிபாடும், ஈகையும் பெருக வேண்டும். பெருமை மிகுந்த சைவ சமயநீதி முறைகள் உலகம் எங்கும் விளங்கி சிறப்படைய வேண்டும்.

'வாழ்க இவ்வையகம் மகிழ்ந்து'

திருச்சிற்றம்பலம்.

உ
சிவமயம்

சிவாலயங்களில் செய்யத் தக்கனவும், தகாதனவும்.

திருக்கோயில்களில் இறைவனைக் கண்டு வழிபடச் செல்லும் அன்பர்கள் கோயிலில் செய்யத்தக்கன, செய்யத்தகாதன என்று சில நடைமுறைகளைப் பெரியோர்கள் வகுத்துக் கூறியுள்ளனர். அவற்றை அன்பர்கள் தக்கனவற்றைக் கொண்டு தகாதன தவிர்த்து இறைவனை வழிபட வேண்டியது முறையாகும்.

செய்யத் தக்கன

1. நீராடி தூய ஆடை உடுத்தித் திருநீறு, உருத்திராக்கம் அணிந்து செல்ல வேண்டும்.
2. மலர், தேங்காய், பழம், கற்பூரம், விளக்குக்கு எண்ணெய் முதலியன எடுத்துச் செல்ல வேண்டும்.
3. கோபுரம், விமானத்தைக் கண்டவுடன் இருகை கூப்பி வணங்க வேண்டும். ஐந்தெழுத்தை (சிவாயநம) மனத்துள் உச்சரித்தவாறே செல்ல வேண்டும்.
4. தல விநாய்கரை வழிபட்ட பின் உட்செல்ல வேண்டும்.
5. பலிபீடம், நந்தி ஆகியவற்றை வணங்கிச் செல்ல வேண்டும்.
6. சுற்றிலுமுள்ள மூர்த்திகளை வணங்கிய பின் உள்ளே கருவறைக்குச் சென்று மூல மூர்த்தியை வணங்க வேண்டும்.
7. சண்டேசுவரரை மெதுவாக ஓசையெழுப்பாமல் இருகையால் தட்டி வணங்க வேண்டும்.

8. திருநீற்றினை இரு கைகளாலும் பணிவுடன் வாங்கி கீழே சிந்தாது பக்தியுடன் அண்ணாந்து அணிந்து கொள்ள வேண்டும். பொட்டு போன்று வைத்தல் கூடாது.

9. ஆலயத் திருச்சுற்றினை மும்முறை வலம் வர வேண்டும்.

10. அந்தந்த சந்நிதிமுன் அத்திருவுருவங்களுக்கு ஏற்ப திருமுறைப் பாடல்களைப் பாடி வணங்க வேண்டும்.

11. வெளியே வந்து கொடிமரத்தின் கீழ் வீழ்ந்து வணங்கி, சிறிது நேரம் அமர்ந்து தியானித்தல் வேண்டும்.

12. இறைவன் சிந்தனையுடன் வீடு செல்ல வேண்டும்.

செய்யத் தகாதன

1. தூய்மையின்றி, சமயச் சின்னங்கள் இன்றி செல்லக் கூடாது. (ஆண்கள் லுங்கி அணிந்து செல்லக்கூடாது.)

2. வீண்பேச்சு பேசுதல், சண்டையிடல், பிறரை அடித்தல், நிந்தித்தல், கொடுக்கல் வாங்கல் பற்றிப் பேசுதல் ஆகிய எதுவும் செய்தல் கூடாது.

3. பக்தர்கள் கூட்டத்தில் இடித்து நெருக்குதல், தள்ளி விட்டு முன்னேறுதல் கூடாது.

4. எச்சில் துப்புதல், மலசலம் கழித்தல், குப்பைகளைப் போட்டு அசுத்தம் செய்தல், தலைமுடி ஆற்றுதல், வெற்றிலை போடுதல் போன்ற வேறு பல தீய செயல்கள் எதுவும் செய்தல் கூடாது.

5. இறைவனுக்கு அணிவித்த மலர் மாலை, வில்வம் ஆகியவற்றை - மிதித்தல் கூடாது.

6. தனித்தனியாக சுற்றுச் சந்நிதிகளை வலம் வருதல் கூடாது.

7. பலிபீடம், நந்தி இவற்றின் குறுக்கே செல்லக்கூடாது.

8. கோயிலில் சிரித்தல், பொய் கூறல், உலகியல் தேவைகளுக்காக தேம்பி அழுதல் ஆகியன கூடாது.

9. கோயிலுக்குள் ஒருவர் காலில் மற்றவர் வீழ்ந்து வணங்குதல், வணக்கம் செய்தல் கூடாது.

10. இறைவன் சிந்தனை தவிர வேறு சிந்தனை கூடாது.

11. உருவச் சிலைகளைத் தொட்டுக் கும்பிடுதல், அவற்றின் பாதங்களில் கற்பூரம் ஏற்றுதல் முதலியன கூடாது.

12. வழிபாட்டுப் பொருள்கள் இன்றி கோயிலுக்குச் செல்லுதல் கூடாது.

திருச்சிற்றம்பலம்.



உ
சிவமயம்

நூலாசிரியரைப் பற்றி...



பிறந்த ஊர்	:	திருப்புலிவனம் (காஞ்சிபுரம் மாவட்டம்)
பிறந்த நாள்	:	02-04-1937 (தாது வருடம் பங்குனித் திங்கள் 20-ஆம் நாள்)
வாழிடம்	:	பொன்னூர் (திருவண்ணாமலை மாவட்டம்) 1954 முதல்.
படிப்பு	:	பள்ளி இறுதி வகுப்பு
தொழிற்கல்வி	:	இடைநிலை ஆசிரியர் பயிற்சி
சிறப்புப் பட்டம்	:	சித்தாந்த இரத்தினம் (திருவாவடுதுறை ஆதீனம்)

வெளியிட்ட நூல்கள் மற்றும் ஆண்டு :

1. திருப்புலிவனம் சிவனார் பாமாலை

திருப்புலிவனம் சிவத்தல வரலாற்றுடன் அக்கோயில் சிவபெருமான் மீது சிவஞான வள்ளலார் அருளிய 66 பாடல்களுக்கு எழுதிய உரை நூல். திருமுருக கிருபானந்த வாரியார் சுவாமிகளின் சாற்றுக் கவி பெற்றது. *(1993)*

2. திருஅருட்பா நூறு பாடல்கள்

தொகுப்பு் நூல். நூறு பாடல்களுடன் இராமலிங்க சுவாமிகளின் வரலாறு, அருட்பா நூலின் சிறப்புகள் பற்றிய தகவல் அடங்கியது.

இராமலிங்கர் பணி மன்றத்தின் தலைவரும், தொழிலதிபருமான அருட்செல்வர் பொள்ளாச்சி டாக்டர் நா. மகாலிங்கம் அவர்களின் ஒரு பகுதி நிதியுதவியும், அணிந்துரையும் பெற்று வெளியிடப்பட்டது. *(1994)*.

3. சைவ சித்தாந்த வழித்துணை விளக்கம்

சைவ சித்தாந்தக் கருத்துகள் அடங்கிய நூல். நூலக ஆணைக் குழுவால் பரிந்துரை செய்யப்பட்டு, தமிழ்நாட்டு நூலகங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. *(2000)*

4. சிவமே முருகன்

சிவனும் முருகனும் ஒருவரே என்னும் தத்துவக் கருத்தை விளக்கும் நூல். 'சித்தருகாவூர்புதூர்' வரலாறு மற்றும் அவ்வூர் குன்றின்மீது அமைந்துள்ள முருகர் கோயிலின் சிறப்பு; முருகன் பற்றிய பல தகவல்கள் மற்றும் வழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய நூல் . *(2001)*.

5. பொன்னூர் சிவத்தல வரலாறு

பொன்னூர் வரலாற்றுடன் சிவத்தலம் மற்றும் பெருமாள் தலத்தின் பழைமை, சிறப்பு ஆன்மீக விளக்கங்கள் வழிபாட்டுப் பாடல்கள் அடங்கிய நூல் *(2002)*.

பிற வெளியீடுகள்

1. மொழி அறிவை வளர்க்க விளையாட்டு முறை

மாணவர்களுக்கு எளிய முறையில் கல்வி கற்பிக்கும் முறைகள் பற்றிய தகவல் அடங்கிய கட்டுரை. 'தமிழகக் கல்வி' இதழில் செய்தி மடல் தொகுதி - 5, ஆகஸ்ட் 1971 இதழில் வெளிவந்தது.

2. வள்ளலாரும் தாயுமானவரும்

15-10-2000 அன்று சோளிங்கர் நகரில் நடந்த அருட்பா மாநாட்டில், மாநாட்டு மலராக வெளியிடப்பட்ட 'சன்மார்க்கப் பேரொளி' என்னும் நூலில் வெளிவந்துள்ள கட்டுரை.

3. *மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய சிவபுராணப் பாடலுக்கு எழுதப்பட்ட எளிய உரை.*

4. *திருஞான சம்பந்தர் அருளிய கோளறு பதிகப் பாடல்களுக்கு எழுதப்பட்ட எளிய உரை.*

5. *திருமுறைகளின் அருமையும் பெருமையும் பற்றி விளக்கும் சிறு விளக்கப் பகுதி.*

6. *திருமுருகன் போற்றி-108.*
(ஆத்திசூடி முறையில் வாழ்த்து.)

7. *உங்கள் சிந்தனைக்கு (தொகுப்பு)*
(அறுபது தேன் துளிகள்.)

வெளிவர இருப்பவை.

1. *இராமலிங்க சுவாமிகள் அருளிய அருட்பெருஞ்சோதி அகவல் (1596 வரிகள் கொண்ட நெடும்) பாடல் எளிய உரையுடன் கூடிய நூல்.*

2. *திருமூல நாயனாரின் திருமந்திரப் பாடல்களுள் மூவாயிரத்தில் "நூறு" பாக்களுக்கு எளிய உரையுடன் கொண்ட நூல்.*

உ
சிவமயம்

இந்நூல் வெளியீட்டுக்குப் பேரன்புடன் பொருளுதவி புரிந்த புண்ணியர்கள்

ந. செல்லபெருமாள், வழக்கறிஞர் & நோட்டரி, 1001
குறிஞ்சி நகர், குரோம்பேட்டை,சென்னை–44.

சித்தாந்த இரத்தினம், கேதாரச்செல்வர்
கா. மு. சண்முகம் ஆசிரியர் (ஓய்வு), 1001
சின்னத் தெரு, பொன்னூர்.

ஏ. எஸ். ஏ. அண்ணாமலை, 1001
பொன்னூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் (1997–2001),
செல்வராஜி இன்டஸ்டீரியஸ், சேத்துப்பட்டு சாலை,
வந்தவாசி. தொ.பே. 225122.

நூலாசிரியரின் பெற்றோர் நினைவாக
திரு. மு. கன்னிவேலு 1251
திருமதி. இலக்குமி அம்மையார்

பெ. நா. இராமச்சந்திரன் 501
தேசூர் சாலை, பொன்னூர்.

ச. கு. பொன்னம்பலம் 501
மளிகை வியாபாரம், தேசூர் சாலை, பொன்னூர்.

ஏ. எஸ். ஏ. அருணாசலம், 501
ஏ. எஸ். ஏ. ஷண்முகம் இண்டஸ்டீரிஸ், முறுக்கு நூல் மில்,
41, வாணியர் தெரு வந்தவாசி. தொ.பே. 225066.

கு. து. பட்டுசாமி கவுண்டர், 501
யாதவர் தெரு, பொன்னூர்.

பி. ஆ. பாலகிருஷ்ணப்பிள்ளை, 501
யாதவர் தெரு, பொன்னூர்.

மா. ஏழுமலை, இளநிலைமின் பொறியாளர், 501
தமிழ்நாடு மின்சார வாரியம், பொன்னூர்.

அரங்கமோகன், மேலாளர், 501
கரூர் வைசியா வங்கி, வந்தவாசி.

நெ. ப. சாமுவேல், நில அளவைத் துறை, 501
சின்னத் தெரு, பொன்னூர்.

ஆ. பெ. செல்வசேகரன், நடத்துநர், 501
மேட்டுத் தெரு, பொன்னூர்.

சித்தாந்த இரத்தினம்
புலவர் **ஏ. து. திருவேங்கடம்,** தலைமை ஆசிரியர் (ஓய்வு) 301
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

நா. வேதாசலம், தமிழாசிரியர், 301
ஈசுவரன் கோயில் தெரு, பொன்னூர்.

ம. அ. நமச்சிவாயம், தலைவர் 250
ஊராட்சி மன்றம், பொன்னூர்.

ஏ. மு. சதாசிவம், ஆசிரியர் (ஓய்வு) 250
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

கி. க. ஆறுமுகம், ஆசிரியர், 251
5, சுந்தரர் வீதி, வீரப்பன் சத்திரம், ஈரோடு–4.

சித்தாந்த இரத்தினம்
பால. குலசேகரன், 250
கூட்டுறவு சார் பதிவாளர், வந்தவாசி.

அமுதா கருணாகரன், 251
2/406, சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

அ. சு. சண்முகம், உடற்கல்வி ஆசிரியர், 251
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

டாக்டர். **ஆர். அர்ச்சுனன்,** சித்தர் மருந்தகம், 201
கம்மாளத் தெரு, பொன்னூர்.

ப. திருநாவுக்கரசு, 201
த/பெ. ஏ.சி.பஞ்சமூர்த்தி, மேட்டுத் தெரு, பொன்னூர்.

கருணாதேவி சக்திவேல், தலைமை ஆசிரியை 201
பாரதியார் தெரு, வந்தவாசி.

ஏ. பி. வெங்கடேசன், எம். ஏ., எம். எட்., 201
புதுத் தெரு, அம்மையப்பட்டு.

எம். நடராசன், சுகாதார ஆய்வாளர் (ஓய்வு) 201
ஆரணி சாலை, அம்மையப்பட்டு.

டாக்டர் **ஜோ. வெங்கடேசன்,** எம். பி. பி. எஸ்., 201
பொட்டி நாயுடு தெரு, வந்தவாசி.

பட்டு புகழேந்தி, ஆசிரியை 201
அகிலாண்டேசுவரி தெரு, கஜலட்சுமி நகர், வந்தவாசி.

கு. பூ. சுப்பராயன், 201
அம்மன் கோயில் தெரு, பொன்னூர்.

ஆ. ந. குப்புசாமி, தலைமை ஆசிரியர், 151
பெரிய தெரு, பொன்னூர்.

அ. கோ. ஆசைத்தம்பி, தலைமை ஆசிரியர், 151
புதுத் தெரு, பொன்னூர்.

ஆ. சு. இராமசாமி, 101
பெரிய தெரு, பொன்னூர்.

ச. ச. செல்லப்ப முதலியார், 101
பெரிய தெரு, பொன்னூர்.

கோ. இராசகோபால், 101
பெரிய தெரு, பொன்னூர்.

மூ. கு. நாராயணசாமி, மளிகை வியாபாரம், 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

அ. வ. சம்பந்தன், துணைத் தலைவர், 101
ஊராட்சி மன்றம், பொன்னூர்.

நெ. வே. காசி, தலைமை ஆசிரியர் (ஓய்வு) 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

வசந்தா சாமிநாதன், 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

தி. க. பாலகிருஷ்ணன்,
சிங்காரப்பேட்டைத் தெரு, பொன்னூர். 101

தி. க. வச்சிரவேலு, சோதிடர். 101
உத்திரமேரூர்.

ம. பாலசுப்பிரமணியன்,
த/பெ. இரத்தினவேலு, சிங்காரப்பேட்டைத் தெரு, பொன்னூர். 101

புலவர். **சு. இராசாமணி,** தமிழாசிரியர் (ஓய்வு) 101
தோப்புத் தெரு, அண்ணா நகர், பொன்னூர்.

நெ. அ. ஆறுமுகம் ஆசிரியர், 101
தோப்புத் தெரு, அண்ணா நகர், பொன்னூர்.

கெ. க. சந்திரசேகரன், 101
ஊராட்சி ஒன்றிய குழு உறுப்பினர், பொன்னூர்.

பொ. இளங்கோவன், ஆசிரியர், 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

பொ. சம்பந்தன், ஆசிரியர், 101
ஸ்ரீ இராமலிங்கர் உயர்நிலைப் பள்ளி, சுப்பிரமணியபுரம், கடலூர்.

கு. பொ. குட்டி, ஆசிரியர் 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

ஏர. ஆ. சண்முகம், 101
புதுத் தெரு, பொன்னூர்.

சத். த. சுப்பிரமணியன் 101
மேட்டுத் தெரு, பொன்னூர்.

பே. த. தணிகைவேல், 101
மேட்டுத் தெரு, பொன்னூர்.

ஏர. க. சோமசுந்தரம், உதவி வேளாண்மை அலுவலர், 101
புதுத் தெரு, பொன்னூர்.

ஏர. க. பெரியசாமி, தலைமை ஆசிரியர் 101
பாண்டி ஆயத்த ஆடையகம், சன்னதி தெரு, வந்தவாசி.

நா. ஏகாம்பரம், மளிகை வியாபாரம், 101
பெரிய தெரு, பொன்னூர்.

விசயகுமாரி குமாரராஜா, ஊராட்சி மன்ற உறுப்பினர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

கு. து. தயாளன், கிளை அஞ்சலக முதல்வர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

ம. து. பட்டாபி, 101
பெரிய தெரு, பொன்னூர்.

க. ஜோதி, ஆசிரியர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

கு. தி. வச்சிரவேலு, தமிழாசிரியர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

சத். ந. மாணிக்கவாசகம், ஆசிரியர், 101
சின்னத் தெரு, பொன்னூர்.

கு. அ. சுப்பிரமணியன், உடற்கல்வி ஆசிரியர், 101
அம்மன் கோயில் தெரு, பொன்னூர்.

அ. மு. அண்ணாசாமி, ஆசிரியர், 101
தோட்டக்காரத் தெரு, பொன்னூர்.

கோ. இளங்கோவன், ஆசிரியர், 101
கம்மாளத் தெரு, பொன்னூர்.

அ. சு. நெடுமாறன், ஆசிரியர், 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

ம. அ. சாமிநாதன், தமிழாசிரியர், 101
அண்ணா நகர், பொன்னூர்.

கோ. இர. சம்பந்தன், 101
மேட்டுத் தெரு, பொன்னூர்.

சி. வே. நாகலிங்கம், மளிகை வியாபாரம், 101
தேசூர் சாலை, பொன்னூர்.

எ. பெ. இராமசாமி, தலைமை காவலர் (ஓய்வு), 101
வேலூர்.

கா. அ. காண்டீபன், பால்வளத் துறை, 101
சின்னத் தெரு, பொன்னூர்.

கா. ப. ஜோதிலிங்கம், தமிழாசிரியர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

ஆ. வே. இராசகோபால், முன்னாள் துணைத் தலைவர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

கா. ப. இராசாமணி, கே.பி.ஆர். போக்குவரத்து, 101
ஊராட்சி மன்ற உறுப்பினர், பெரிய தெரு, பொன்னூர்.

வி. பட்டம்மாள், 101
தோட்டக்காரத் தெரு, பொன்னூர்.

கு. பெ. சின்னகுட்டி; உடற்கல்வி ஆசிரியர், 101
பெரிய தெரு, பொன்னூர்.

ம. தெ. காசி, நில அளவையாளர், 101
கேசவ நகர், வந்தவாசி.

கு. கோ. அருணாசலம், ஊராட்சி மன்ற உறுப்பினர், 101
அம்மன் கோயில் தெரு, பொன்னூர்.

ந. தண்டபாணி, தலைமை ஆசிரியர் (ஒய்வு), 101
அயனரன் வீதி, சித்தாருகாவூர் புதூர்.

சித்தாந்த இரத்தினம் **கோ. அண்ணாமலை,** வணிகவரித் துறை, 101
பெரியார் வீதி, சித்தாருகாவூர் புதூர்.

எஸ். பாலசுப்பிரமணியம், உதவி பொறியாளர் (நெ) 101
கீரனூர், புதுக்கோட்டை மாவட்டம்.

எஸ். பார்த்திபன், வரைவு அலுவலர் (நெ) 101
8எ, சாலிமார் கார்டன், ஈச்சம்பாக்கம், சென்னை—41

அ. சுப்பிரமணியம், பட்டு சேலை உற்பத்தியாளர், 101
மாரியம்மன் கோயில் தெரு, தேவிகாபுரம்.

சித்தாந்த இரத்தினம் **த. சு. சிவக்குமார்,** 101
52, மல்லிச் செட்டிபிள்ளையார் கோயில் தெரு,
கொசப்பாளையம், ஆரணி.

ச. இரா. செல்வம், ஸ்ரீ லட்சுமி ஸ்டில்ஸ் & வீடியோ, 101
1/120, பெரிய தெரு, பொன்னூர்.

வெ. வ. சண்முகம், ஊராட்சி மன்ற உறுப்பினர், 101
சிங்காரப் பேட்டைத் தெரு, பொன்னூர்.

ம. அ. சிங்காரவேலு, 101
த/ பெ. பொ. அண்ணாமலை,
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

பொ. சு. இராமசாமி, 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

மொ. ந. பத்ராசலம், 101
சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

கே. இராசேந்திரன், செயலாளர் 101
முருகன் கூட்டுறவு நெசவாளர் சங்கம், பெரிய தெரு, பொன்னூர்.

மூ. க. செல்வராஜி, 101
த/பெ. கதிர்வேலு, சுப்பிரமணியர் கோயில் தெரு, பொன்னூர்.

ஸ்ரீனிவாசா எலக்ட்ரிகல்ஸ், 101
32சி, தேரடி, வந்தவாசி. தொ. பே. 225668


பொ. சு. அச்சுதன். 101

காஞ்சி. **துர்க்காதாஸ்** (எ) **சு. கோதண்டன்,** 101
கரூர் வைசியா வங்கி, வந்தவாசி.


ஆ. சா. ஞானசம்பந்தன், ஆசிரியர் 101
ஆ. சா. மாணிக்கவேலு,
சின்னத் தெரு, பொன்னூர்.

சித்தாந்த இரத்தினம்
வ. குமாரவேலு, தலைமை ஆசிரியர் (ஓய்வு) 101
3, பொட்டி நாயுடு தெரு, வந்தவாசி.

கு. அரு. மனோகரன், 101
பெரிய தெரு, பொன்னூர்.



பராசுரேசுவரர் திருக்கோயில் முகப்புத்தோற்றம்



அழகர் பெருமாள் திருக்கோயில் முகப்புத்தோற்றம்